
அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்


மாத இதழ் | மணம் 23 | ஏப்ரல் 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2053

ஈழத்தில் அன்னை பூபதியின் உயிரீகத்தின் உச்சம்!!



தமிழினம் ஒன்றிணைவதே காலத்தின் தேவை

பூபதியம்மா ஒரு வழிகாட்டி!!








## ஒற்றுமையே பலம்

பொழில்



# பூபதியம்மா ஒரு வழிகாட்டி!!

கனத்துப் போன
இதயங்களுடனும்,
கண்ணீருடனும்
கடந்துபோனது
மீண்டுமொரு
நினைவேந்தல் நிகழ்வு..
எங்கள்
பூபதித் தாய்க்கு!

குடும்பம், குழத்தைகள்,
கணவன், கஷ்டநஷ்டங்கள்,
சிரிப்புகள், அழுகைகள்
என்று
குடும்ப சாகரத்தில்
மூழ்கிக் கிடந்தபோது
பூபதியை
பலருக்குத் தெரியாது!!

தாய்மடி காத்திடவென
துடிதுடித்தெழுந்து,
கும்பி கொதிக்க
கொலைப்பட்டினி கிடந்து
சிறுகச்சிறுக
உயிரை விட்டாளே.!!
அப்போதுதான் உலகம்
அம்மாவை
பிரம்மித்துப் பார்த்தது!

சாமானியப் பெண் இவள்..
போர்க்குணம் கொண்டு,
அநியாயத்தை
அதட்டிக் கேட்கும்
துணிச்சல்
கொண்டது எப்படி?
பொதுநோக்கிற்காக
உயிரையும் துறக்கத்
துணிந்தது எப்படி?

சிந்தித்துப் பாருங்கள்.!!

எல்லாப் பெண்களின்
உள்ளேயும்
ஒரு பூபதி இருக்கிறார்!!

காணாமல் ஆக்கப்பட்ட
தன் உறவைத் தேடி
வருடக்கணக்கில்
போராடுகிறார்களே!!
அவர்களுக்குள்ளும் ஒரு
பூபதி இருக்கிறார்.

அயலான் வந்து தன்
மண்ணைப் பிடுங்க.
பொறுக்க முடியாது
கோபக் குரல்கொடுக்கும்
அத்தனை
பெண்களுள்ளும்
ஒரு
கொந்தளிக்கும்
பூபதி இருக்கிறார்.

அம்மா பூபதி
ஒரு வழிகாட்டிதான்!
பெண்ணால்
அது ஒரு
முதிர்ந்த பெண்ணாக இருந்
தாலும்
முடியாதது எதுவுமில்லை
என்பதைசெய்து காட்டிய
சிகரம் அவர்!!

எங்களை
முழுதாக முழுங்கத் துடிக்கும்
இனவெறியர் இருக்கும்வரை
அநியாயங்களுக்கா பஞ்சம்?
அத்துமீறல்களை, அநீதிகளை
தட்டிக் கேட்க,
எனக்கெதற்கு என்றில்லாமல்
அத்தனை பெண்களும்
முன்வர வேண்டும்.

ஒன்றாய் இணைந்து,
ஒற்றுமையாய் நின்று,
ஒருமித்த குரலில் எங்கள்
எதிர்ப்பைச் சொல்வோம்!
சந்ததி காக்க
சங்கற்பம் செய்வோம்!!

EZHUNILAM
மாத இதழ் | மணம்: 23
ஏப்ரல்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

# உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| பறிபோகும் தமிழர்... | 06 |
| குரங்கும்... | 09 |
| யாழில் நீர்... | 11 |
| வெடுக்குநாறி.... | 13 |
| உலக வரலாற்றில்... | 16 |
| நான் வீழேன்...! (கவிதை).... | 20 |
| தமிழின... | 21 |
| ஊடகர் லசந்த... | 23 |
| யாழ். பனை... | 26 |
| விதவை- கைம்பெண்.... | 28 |
| பட்டறிவு.... | 30 |
| போர்க்கால... | 32 |
| பிரமிக்க வைக்கும்... | 34 |
| சகல பெற்றோர்களுக்கும்... | 37 |
| பண்டைய பழக்க... | 40 |
| வலை.... | 42 |




# திருக்குறள்

## குறள் 578:

“கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு”

## விளக்க உரை:

தம் தம் கடமையாகிய தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையவராக இருக்க வல்லவர்க்கு இவ்வுலகம் உரிமை உடையது.












தற்கொடையும் தியாகமும் நிரம்பியிருந்த தேசத்தில் இன்று காமமும் கயவாணித்தனமும் கரைபுரண்டு ஓடுகின்றன.

அழிக்க நினைப்பவன் திட்டம் போட்டுக் கெடுக்கிறான். உங்களுக்கு எங்கே போனது மதி? அநேகமாக வீட்டுக்கு ஒருவராவது அல்லது உறவினர் ஒருவராவது மாவீரர்.

அப்படியிருக்க போதைப்பழக்கமும், பாலியல் வல்லுறவு மூர்க்கமும், சொந்த இரத்தத்தை வாளால் வெட்டும் கயமையும் எப்படி உள்நுழைந்தது? இனவாத வெறியர்களின் அத்துமீறல்களை எழுநிலத்தில் வாசிக்கும்போது எங்கள் மக்களில்தான் எனக்கு முதலில் கோபம் வருகிறது.

நாங்கள் கட்டுப்பாடாக இருந்தால் சீரழிவுகள் உள் நுழைய முடியுமா? ஒன்றாகத் திரண்டு எதிர்க்கும் துணிவுதான் இல்லாமற் போய்விடுமா?

**-தாயகத்திலிருந்து ஊரவன்.**

குட்டிக்குட்டி அறிவுரைக் கதைகள் இடையிடை வருவது நன்றாக இருக்கிறது. கனமான கட்டுரைகளை மட்டுமே படிக்க மூச்சு முட்டும். அவற்றை இலகுவாக்கும் இம்மாதிரியான கதைகள் நன்று.

எங்கள் வீட்டுப் பிள்ளைகள் கூட இவற்றை விரும்பி வாசிக்கிறார்கள். இம்முறை வந்த 'தாயுமானவள்' கதை எங்கோ முன்பே வாசித்த ஞாபகத்தை ஊட்டுகிறது.

கலப்புத் திருமணங்கள் சிலருக்கு வெற்றி. பலருக்கு சங்கடம். முந்தின தலைமுறையினரில் இதை மனதார ஏற்றுக் கொண்டவர்கள் இருக்கிறார்களா என்ன?

**-தேவகி பரமேஸ்வரன் பிரான்ஸ்.**

ஆசிரியர் பக்கம் வழமைபோல அருமை. அன்றைய நிலவரத்தை மிகத் தெளிவாக புட்டுப்புட்டு வைக்கும் ஆசிரியருக்குப் பாராட்டுகள். பல கோணங்களிலும் இருந்து ஆக்கங்கள் போடப்படுவதால் பத்திரிகை சுவை குன்றாமல் வருகிறது.

தரத்தை இன்னுமின்னும் அதிகப்படுத்தி மிளிர எனது ஆசிகள். இன்றைய காலகட்டத்தில் எல்லோரும் பார்க்க வேண்டும் என்பதற்காக கண்ட குப்பைகளையும் போடாமல் தரத்தை மட்டுமே பராமரிப்பதற்கு ஒரு துணிச்சல் வேண்டும். அது உங்களிடம் இருப்பது வரவேற்கத் தக்கது.

**-மார்கிரட் யேசுரட்ணம் இங்கிலாந்து.**




வயிற்றைப் பற்றி எரிகிறது. எங்கள் கடவுளர்க்கே இங்கு பாதுகாப்பில்லை. வெளிப்படையாக அரசாங்கம் செய்யும் அடாவடிகளை தமிழனுக்காக தட்டிக் கேட்க எவருமே இல்லையா? காலடி மண்ணைக் கூட உருவி எடுக்கிறார்களே.

பறிபோகும் மரபுச் சின்னங்கள் கட்டுரை அருமை. ஆனாலும் இதில் சொல்லப்பட்டதை விடவும் அதிகமாக அல்லவா அநியாயங்கள் இங்கு அரங்கேறுகின்றன. புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களே! தயவுசெய்து ஒன்றிணைந்து எங்களுக்காக போராடுங்கள். இங்கு தனியாக எங்களால் எதுவும் செய்துவிட முடியாது. நாங்கள் தேர்ந்தெடுத்த எங்கள் தமிழ் அரசியல்வாதிகளே கூட்டுக் களவாணிகள்.

**-ஊர்விளம்பி (தாயகம்)**

'மணம் 22' நிறைந்த விடயங்கள் தாங்கி வந்திருப்பதாக எனக்குப் படுகிறது. மனம் நிறைந்த வாழ்த்துகள்.

'காலமாற்றம்' கவிதை. ஐயோ!! எப்படிச் சொல்வது? அருமையிலும் அருமை. நாங்கள் மனதில் வைத்துப் புழுங்கும் விடயங்களை எவ்வளவு இலகுவாகச் சொல்லிவிட்டார் சகோதரி. அவருக்கு எங்கள் வாழ்த்துகள்.

**-சசிதரா குடும்பத்தினர் கேளின், ( ஜேர்மனி)**

அரசியல், சமூக, பொருளாதார இதழ்
எழுநிலம்
EZHUNILAM

நான் கதை, கவிதைப் பிரியன். இவற்றின் மூலம் ஒரு தகவலைச் சொல்லி சமுதாயத்தை மாற்ற முடியும் என்பது எனது நம்பிக்கை. ஒரு சிறிய ஏமாற்றம் எனக்கு. 'வலை' நெடுங்கதையை இம்முறை காணவில்லை. ஏன்? ஏதோவொரு வகையில் மண் சார்ந்ததாக, மனதைத் தொட்டுச் செல்லும் வகையில் வரும் 'வலை' ரஷ்ய மொழிபெயர்ப்பு நாவல்களில் வரும் மனதின் கனதியை ஏற்படுத்துகிறது.

(போர் தின்ற பூமியின் விளைவாக இருக்கக் கூடும்.) என்னைப் போல வேறு பலருக்கும் இந்த உணர்வு எழுந்திருக்கலாம் அல்லவா? தயவு செய்து தொடர்ந்து வெளியிடுங்கள். கவிதைகளும் குறைந்துகொண்டு வருவதாகத் தோன்றுகிறது. கவனியுங்களேன்.

**-தமிழுக்கு இனியன். தேனி (ஈழத்தைச் சேர்ந்தவன்)**

ஐங்கரன் விக்னேஸ்வரா எங்களுக்குத் தெரியாத புதிய புதிய தகவல்களை அள்ளித் தருவது பாராட்டுக்குரியது. போர்கால பிரசுரங்களில்தான் இப்படியான தகவல்களை நான் அறிந்திருக்கிறேன். இப்போது எழுநிலத்தில் கிடைப்பது மகிழ்ச்சி.

'தரிசல் நிலத்துக் கீறல்கள்' புத்தக விமரிசனம் நன்று. புத்தகத்தை நானே சுவைத்த திருப்தி ஏற்பட்டது.

இப்படியான விமர்சனங்களை நீங்கள் தொடர்ந்து போட்டால் மக்களின் வாசிப்புத் திறனைக் கூட்டலாம் என்று நான் கருதுகிறேன். செய்வீர்களா?

**-லகீசன் லோகநாதன் நியூயோர்க், அமெரிக்கா.**

முல்லையின் கவிதையை பின் அட்டையில் போட்டு தூள் கிளப்பி விட்டீர்கள். பெண்களின் அவலங்களும், அல்லல்களும், சாதனைகளும்,போராட்டங்களும், தியாகங்களும் என்று பல கோணங்களில் இருக்கும் பெண்களின் வாழ்வியலை நீங்கள் முழுதாகத் தொட்டுச் செல்லவில்லை என்ன குறை எனக்கு எப்போதும் உண்டு. மிகச் சிறப்பாக, தரமான பத்திரிகை வெளியிடும் நீங்கள் அதிலும் பெண்களால் நடத்தப்படும் ஒரு பத்திரிகை,இந்தக் குறையை நிவர்த்தி செய்தால் மிகச் சிறப்பாக அமையும் அல்லவா?

**-வசுந்தரா திவாகர் மெல்பேர்ண், அவுஸ்திரேலியா.**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...
Ezhunilam.com

# ஒற்றுமையே பலம்

## ஆசிரியர் பக்கம்

25/04/23 அன்று வடக்கு கிழக்கை முழுமையாக முடக்கி, பயங்கரவாத தடைச் சட்டத்திற்கும், அத்துமீறிய நிலப்பறிப்பிற்கும் எதிரான தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் மக்கள் போராட்டம் முழுமையாக வெற்றி கண்டுள்ளது என்றுதான் கூறவேண்டும். தேசிய நீரோட்டத்தில் இருக்கும் ஏழு தமிழ்க்கட்சிகள்இந்த முழு முடக்கத்திற்கான அறைகூவலை விடுத்திருந்தன.

வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தக நிறுவனங்கள், போக்குவரத்துச் சங்கங்கள், மத அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பொது நிறுவனங்கள் என்று எல்லாத் தரப்பிலிருந்தும் பூரண ஒத்துழைப்புக் கிடைத்ததால் இந்த முடக்கம் முழு வெற்றி அடைந்திருக்கிறது. ஒரு நாள் மட்டுமான முழு முடக்கமாக இருந்தாலும், அதனால் தமக்கு எழும் பாதிப்புகளையும் புறந்தள்ளி, இந்த முழு முடக்கத்திற்கு மக்கள் ஆதரவளித்திருப்பது போற்றுதற்குரியது.

படிப்படியாக தமிழர் பூமி அபகரிக்கப்பட்ட நிலைமை மாறி, இப்போது நிலப்பறிப்பு ஒரு நாளாந்த நிகழ்வாகி விட்டது. தொன்மையான சைவக் கோவில்கள் அழிக்கப்பட்டு, தமிழர் பிரதேசத்தில் வீதிக்கு வீதி விகாரைகள் முளைக்கத் தொடங்கி விட்டன. தமிழ் மக்கள் மிகவும் ஒரு சோதனையான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். விரும்பியோ விரும்பாமலோ அனைத்து மக்களும் ஒன்றாக நின்று, ஏகோபித்துக் குரல் கொடுக்க வேண்டிய ஒரு சோதனைக் காலத்தில் நாம் இருக்கிறோம்.

அதேசமயம், 25/03/23 அன்று பாராளுமன்றில் ஏற்பட்ட காரசாரமான வார்த்தைப் பிரயோகங்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் புதிய வடிவம் பாராளுமன்றின் அனுமதியைப் பெறுவதைத் தற்காலிகமாகவேனும் தடுத்து நிறுத்தியிருக்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழ் மக்களை மட்டுமல்லாது முஸ்லிம் இன மக்களையும் தாக்கத் தொடங்கியிருப்பதன் விளைவு, இம்முறை வடக்கு கிழக்கு முழு முடக்கத்திற்கு முஸ்லிம் மக்களும் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி தமது எதிர்ப்பையும் வெளிக்காட்டியிருந்தனர். நீண்ட காலத்தின் பின், தமிழ் முஸ்லிம் இனங்கள் ஒன்றிணைந்துசெயற்பட்டதன் விளைவு, சிங்கள இனவாதிகளின் சுயரூபம் மீண்டும் ஒருமுறைவெளிக்காட்டப் பட்டுள்ளது.

இந்த முழு முடக்கத்தை தடுப்பதற்கு பிரதமர் ரணில் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. வடக்கு கிழக்கில் சிங்கள, பௌத்தமயமாக்கல் நடைபெறவே இல்லை, அது ஒரு தவறான கருத்து, சைவக் கோவில்களை யாரும் அழிக்கவில்லைஎன்று ஊடகங்களுக்கு தெரிவிக்கும் ரணில் தமிழர்களை இல்லாதொழிக்க எந்த எல்லைக்கும் போவார் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

சரி,.இந்த முழு முடக்கம் வெற்றியளித்து விட்டது, இனவாதிகளை மீண்டுமொருமுறை அம்பலப் படுத்தியாகி விட்டது. அடுத்தது என்ன? இந்த முடக்கத்திற்கு சிங்கள அதிகார மையம் பதிலளிக்கப் போவதுமில்லை, எதையும் கண்டுகொள்ளப் போவதுமில்லை. இன்றும், நாளையும் இனிவரும் காலங்களிலும் இந்த அத்துமீறல்களைத் தொடரத்தான் போகிறது. நாங்கள் தொடர்ந்தும் முழு முடக்கத்தில் இருக்க முடியுமா? அல்லது இனி என்ன செய்வது என்று வாளாவிருக்கத்தான் முடியுமா?

இப்படியான முழு முடக்கம் எத்தனை அன்றாடங்காய்ச்சிகளின் வாழ்க்கையை இன்னுமின்னும் கஷ்ட நிலைக்குள் தள்ளியுள்ளது? நாளாந்த பொருளாதார நிலை எத்தனை மக்களுக்கு கேள்விக்குறியாகி உள்ளது? இப்படியான முடக்கங்கள் எமது மக்களைத்தான் மேலும் மேலும் வருத்துகின்றனவே அன்றி சிங்கள அதிகார பீடத்தை எதுவும் செய்து விடாது.

வடக்கு கிழக்கில் தமது நீதிமன்ற ஆணைகளையே அவமதிக்கும் சிங்கள இனவாதம், பௌத்த பீடத்தை தமது அதிகார மையமாக வைத்திருப்பது நாம் அறிந்ததுதான். வடக்கு கிழக்கில் பல இடல்களில் தமிழர் நிலத்தில் விகாரைகள் கட்டப்பட்ட போதும், நிலப் பறிப்பு நடந்தபோதும் நீதிமன்றுகள் அவற்றுக்கு எதிராக தடையுத்தரவுகள் விடுத்திருந்தன. அவற்றை மதிக்காது, அரசும் அதன் இயந்திரமான இராணுவமும் பௌத்த பீடத்தின் ஆணைப்படியே இயங்கியதற்கான சாட்சியங்களாககுருந்தனூர் மலை, நாவற்குழி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மயிலத்தமடு என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

எமது மக்களை நாமும் வருத்தி, இனத்துவேசிகளும் வருத்த விடுவதால் என்ன பயன் விளையும்? இதனால், நாங்கள் எங்கள் போராட்ட வடிவத்தை மாற்றியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டம் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.அதேசமயம், தொடர் போராட்டம் இல்லாமல் எதையும் சாதிக்கவும் முடியாது. அது அரசாங்கத்தை, அரச பணிகளை முடக்குவதாக இருக்க வேண்டும்.

தலைநகரை ஸ்தம்பிக்க வைக்க வேண்டும். அரச அலுவலகங்கள் இயங்கக் கூடாது. தொடர்ச்சியான சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டங்கள் எல்லா இடங்களிலும் நடக்க வேண்டும். பத்திரிகைகள், வானொலிகள் தொலைக்காட்சிகளில் தொடர்ந்தும் கண்டனங்கள், எதிர்ப்புகள் பற்றியும் அரச அடாவடிகள் பற்றியும் செய்திகள் வருமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். சமுக வலைத்தளங்களை முழுமையாகப் பயன்படுத்தி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் அரசை ஆட்டம் காணச் செய்ய வேண்டும். பாரம்பரிய பிரதேசங்கள், தொன்மையான கோவில்கள், முக்கியமாக சிங்கள ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படும் பிரதேசங்கள் பற்றி ஆவணப்படுத்தப்பட வேண்டும். அவற்றை காலத்துக்குக் காலம் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவும் வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற அமர்வுகளை முழுமையாக முடக்கும் தடவடிக்கைகளில் இறங்கவேண்டும். அவர்கள் பிறநாட்டுப் பிரதிநிதிகளுடனும் சர்வதேச பத்திரிகையாளர்களுடனும் சந்திப்புகளை ஏற்படுத்தி நிலைமையை உலகறியச் செய்யவேண்டும். தலைநகரும், சுற்றுலாப் பயணிகள் வரும் அத்தனை இடங்களும் பதாகைகளினாலும் கோசங்களினாலும் நிரப்பப்பட வேண்டும். புலம்பெயர் தேசத்துத் தமிழ் மக்களும் தொடர்ந்து பத்திரிகையாளர்களைச் சந்தித்தும், சமுக வலைத்தளங்களை சரியான வழியில் பயன்படுத்தியும் எமது மக்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும்.

இனி வரும் ஆண்டுகள் தமிழ் மக்களுக்கு மிகவும் இடர்மிகுந்த காலகட்டம். இதில் அரசியல், மதம், சாதி என்ற பாகுபாடுகளைக் கடந்து, ஒன்றுபட்டு நின்று, திட்டமிட்ட வகையில் போராட்டங்களை நடத்தி எம்மைக் காத்துக்கொள்ள வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். எமது இனம் அழிந்து போகாமல் காப்பதும், எமது நிலம் பறிபோகாமல் தடுப்பதும் எங்கள் ஒற்றுமையில்தான் உள்ளது.

பாரி



# புதிய வரையில் பயங்கரவாத தடைச்சட்டம்

கடந்த 43 வருடங்களுக்கும் மேலாக நடைமுறையில் இருந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் சர்வதேச நியதிகள், நடைமுறைகளுக்கு அமைவாக திருத்தப்பட்டு, புதிதாக வரையப்பட்டுள்ளது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. 25/04/23 அன்று பாராளுமன்றின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட இருந்த நிலையில், அங்கு ஏற்பட்ட காரசாரமான விவாதங்களினால் அன்றைய தினத்தில் பாராளுமன்றில் இதனைச் சமர்ப்பிப்பது தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தத் தடைச் சட்டத்தினால் இத்தனை வருட காலமும் தமிழ் மக்கள் பட்ட, பட்டுக் கொண்டிருக்கும் இன்னல்கள் எண்ணிலடங்காதவை. இந்தச் சட்டத்தினால் எத்தனை ஆயிரம் பேரை நாம் பலி கொடுத்திருக்கிறோம்? எத்தனை ஆயிரம் பேர் விசாரணைகள் எதுவும் இல்லாது சிறைகளில் வாழ்நாளைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள்? எத்தனை எத்தனை ஆயிரம் மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்?

போர் முடிவடைந்து பதினான்கு வருடங்கள் நிறைவடையும் நிலையில்கூட, மீண்டும் திருத்தங்களுடன், புதுப்பிக்கப்பட்ட தடைச் சட்டத்திற்கான தேவை என்ன என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும். அண்மைய வருடங்களில் முஸ்லிம் சமுகத்தினரும், அடிமட்டத்தில் இருக்கும் சிங்களவர்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பெயரால் பழிவாங்கப்பட்டிருந்தனர்.

இதனால்தான் நடைமுறைக்கு வரவிருக்கும் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம், இன்னும் நடைமுறையில் இருக்கும் பழைய தடைச் சட்டம் என்பனவற்றை முற்றாக விலக்கவும், தமிழர் தாயகப் பிரதேசத்தில் நடைபெறும் அத்துமீறல்களுக்கு எதிராக தமது கண்டனத்தைத் தெரிவித்துத் தடுக்கவுமென 25/04/23 அன்று தமிழர் தாயகத்தில் முழுமுடக்கல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த முடக்கலின் வெற்றியில் முஸ்லிம் மக்களும், தமிழர் பிரதேசத்தில் இருந்த சிங்கள மக்களும் கொடுத்த ஆதரவும் அடங்கும்.




அப்படி என்னதான் இருக்கிறது அந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தில்? ஆங்கிலத்தில் 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' (Counter Terrorism Act - CTA) என்றும் சிங்களத்தில் 'பயங்கரவாத தடைச் சட்டம்' (Prevention of Terrorism Act - PTA) என்ற பழைய பெயரிலும் கொண்டு வரப்படவிருக்கும் இந்த வன்சட்டம், சர்வதேச நியதிகளுக்கமைய வரையப்பட்டது என்று சர்வதேசத்தை ஏய்க்கலாம். ஆனால், பயங்கரவாதம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் எதுவும் வழங்கப்படாத நிலையில், தனிமனித சுதந்திரத்தை முற்றாக முடக்கும் வகையிலுள்ள இந்த வரைபு இன்னும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தப்போவது உறுதி.



ஆட்களை வலிந்து காணாமல் ஆக்குவதற்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும், நீண்டகாலமாக மக்களைத் தடுப்புக் காவலில் வைப்பதற்குமான சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு அனுமதிப் பத்திரமாகவே இந்தத் தடைச்சட்டம் பார்க்கப் படுகிறது.

இந்தச் சட்டத்தின் பெயரால் சாதாரண மக்கள் மட்டுமல்லாது விமர்சகர்களும், ஊடகவியலாளர்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் கடுமையாகத் தண்டிக்கப்



படுவர். அரசாங்கத்திற்கு எதிராக அதாவது அநீதிக்கு எதிராக யாரும் போராட்டமல்ல, கருத்துக் கூறுவதைக்கூட இந்தச் சட்டத்தின் மூலம் தண்டிக்கலாம். மொத்தத்தில் மக்களின் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், ஒரு குழுவையோ சங்கத்தையோ அமைக்கும் சுதந்திரம் என்பன பறிக்கப்படுவதை இந்தச் சட்டம் உறுதி செய்யும்.

தெளிவான விளக்கங்களின்றி வரையப்பட்ட இந்தச் சட்டத்தில் ஒருவர் கைதாகும்போது அதற்கான காரணம் தெரிவிக்கப்படுதல், அவர் என்ன விசாரணைக்கு உள்ளாகப் போகிறார் என்ற தகவல்களைத் தரவேண்டும் என்பன கட்டாயமாக்கப்படவில்லை. அதாவது ஒருவரை எந்தக் காரணமும் சொல்லாமல் எந்த நேரத்திலும் கைது செய்யலாம், அவரை இந்த இடத்திற்குக் கொண்டு போகிறோம் என்று அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என்கிறது இந்தச் சட்டம். பெண்கள் கைதாகும்போது அங்கு ஒரு பெண் உத்தியோகத்தர் இருந்தாக வேண்டும் என்ற அடிப்படை உரிமைகூட இந்தச் சட்டத்தில் இடம்பெறவில்லை.


**"பழைய சட்டத்தில் இல்லாத அதிகாரங்களை புதிய சட்டம் சனாதிபதிக்கு வழங்கும். அவர் ஊரடங்குச் சட்டத்தை பிரகடனப் படுத்தலாம், பொது ஒழுங்கைப் பேண என்ற பெயரில் முப்படைகளையும் அழைக்கலாம். தவிர, சிவில், சமூகச் செயற்பாளர்களால் அடிப்படை மனித உரிமை மீறப்படுவதாக உயர் நீதிமன்றுக்கு கொண்டுவரப்படும் மனுக்களை நிராகரித்து மரணதண்டனை வழங்கும் அதிகாரம் இந்தப் புதிய வரைபால் உயர் நீதிமன்றுக்குக் கிடைக்கும்."**

நீதவானின் கட்டளையின் பேரில்தான் காவற்துறை ஒருவரைத் தடுத்து வைக்கலாம். எட்டு வாரங்கள் வரை தடுப்பதாயின் மட்டுமே நீதவானின் அனுமதி தேவை. இரண்டு வாரங்களுக்குத் தடுப்புக் காவலில் வைப்பதை காவற்துறை அதிகாரியே தீர்மானிக்கலாம். குடும்பத்தினர் அல்லது கைதாகியவரின் சட்டத்தரணி அவரைப் பார்க்க வேண்டுமாயின், பொறுப்பான அதிகாரியிடம் முன் அனுமதி பெறவேண்டும். வழக்கு ஒரு வருடத்திற்கும் மேலாக நீண்டால் மட்டுமே பிணை வழங்குவது பரிசீலிக்கப்படும்.

கைதை மீளாய்வு செய்வதற்கு மீளாய்வுக் குழுவிடம் மேன்முறையீடு செய்யலாம். அதற்கு சிறை அதிகாரி, மீளாய்வுக்குழு, அமைச்சர், அமைச்சின் செயலாளர், இன்னும் சிலர் என்று பலர் கூடித் தீர்மானிப்பதே இறுதியாகும். ஒரு கைதியின் உடலிலுள்ள காயங்களை பரிசீலிக்கும் அதிகாரம் தலைமைக் காவலதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது. தடுப்புக் காவலில் இருக்கும்போது நடைபெறும் துன்புறுத்தல்களையும், பாலியல் வன்முறைகளையும் தட்டிக் கேட்க இந்தச் சட்டத்தில் இடமில்லை.

புதிய சட்டத்தின் கீழ், குறிக்கப்பட்ட இடங்களினுள் பிரவேசித்தல், ஆட்களைக் கைது செய்தல், பொருட்களைக் கைப்பற்றுதல் ஆகிய அதிகாரங்கள் காவற்துறையைத் தாண்டி, முப்படையினர்க்கும் கரையோரப் பாதுகாப்புப் படையினருக்கும்கூட வழங்கப்பட்டுள்ளது.

பழைய சட்டத்தில் இல்லாத அதிகாரங்களை புதிய சட்டம் சனாதிபதிக்கு வழங்கும். அவர் ஊரடங்குச் சட்டத்தை பிரகடனப் படுத்தலாம், பொது ஒழுங்கைப் பேண என்ற பெயரில் முப்படைகளையும் அழைக்கலாம். தவிர, சிவில், சமூகச் செயற்பாளர்களால் அடிப்படை மனித உரிமை மீறப்படுவதாக உயர் நீதிமன்றுக்கு கொண்டுவரப்படும் மனுக்களை



**கடந்த காலங்களில் எத்தனை சிறைப் படுகொலைகள் நடந்துள்ளன? எத்தனை ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், மதகுருமார், மாணவர்கள் கொல்லப்பட்டனர்? எத்தனை மனிதப் புதைகுழிகள்? எத்தனை எத்தனை சித்திரவதை முகாம்கள்? இவற்றிற்கு பெயர்பெற்றவராக சொல்லப்படும் ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாரபூர்வமாக ஆட்சியில் இருக்கிறார். சட்டத்தையும் அதிகாரத்தையும் வைத்து இவர்கள் இன்னும் எத்தனை கொடூரங்களை அரங்கேற்றுவார்கள் என்பதிலும், தட்டிக் கேட்பவர்களை இல்லாதொழிப்பார்கள் என்பதிலும் ஐயமில்லை.**




நிராகரித்து மரணதண்டனை வழங்கும் அதிகாரம் இந்தப் புதிய வரைபால் உயர் நீதிமன்றுக்குக் கிடைக்கும்.

ஆட்டை அங்கீகாரத்துடன் ஓநாயின் பாதுகாப்பில் விடுவதற்கு ஒப்பானது இந்தச் சட்டம். நீதித்துறையை இந்த அரசாங்கம் எப்படி வளைக்கும் என்பதையும், நீதிமன்றின் கட்டளையை எப்படி அலட்சியப்படுத்தி இராணுவ உதவியுடன் அத்துமீறல் செய்யும் என்பதையும் கடந்த காலங்களில் நாங்கள் பார்த்திருக்கிறோம். குருந்தனூர் மலை விவகாரம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

கடந்த காலங்களில் எத்தனை சிறைப் படுகொலைகள் நடந்துள்ளன? எத்தனை ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், மதகுருமார், மாணவர்கள் கொல்லப்பட்டனர்? எத்தனை மனிதப் புதைகுழிகள்? எத்தனை எத்தனை சித்திரவதை முகாம்கள்? இவற்றிற்கு பெயர்பெற்றவராக சொல்லப்படும் ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாரபூர்வமாக ஆட்சியில் இருக்கிறார். சட்டத்தையும் அதிகாரத்தையும் வைத்து இவர்கள் இன்னும் எத்தனை கொடூரங்களை அரங்கேற்றுவார்கள் என்பதிலும், தட்டிக் கேட்பவர்களை இல்லாதொழிப்பார்கள் என்பதிலும் ஐயமில்லை.

நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்படாத தமிழ்க் குடும்பங்களே இல்லை. இன அழிப்பிலும் அதை மூடி மறைப்பதிலும் பெரும் பங்கு வகித்த பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் கொடூர வடிவில் நடைமுறைக்கு வரவிருக்கிறது. தேசிய பாதுகாப்பு, பயங்கரவாதம் என்ற சொற்பதங்களினூடாக, நீதித்துறையை விலக்கி இராணுவத்தின் துணையுடன் எதுவும் செய்ய முடியும்.

இந்தச் சட்டம் ஒட்டுமொத்த தமிழினத்தையும் அழித்தொழிக்கும் எண்ணத்தைக் கருத்திற் கொண்டே உருவாக்கப்பட்டது என்பது நாங்கள் அறிந்ததே. கடந்த சில வருடங்களாக முஸ்லிம் சமுதாயத்தினரும், அரசாங்கத்தை தட்டிக்கேட்ட சிங்களவர்களும் குறிவைக்கப்பட்டதானது வருங்காலத்தில் அவர்களுக்கும் எந்தப் பாதுகாப்புமில்லை என்பதைத் தெளிவாக்கியுள்ளது.



எந்தக் கருத்தும் சொல்ல முடியாத, ஊடகச் சுதந்திரமற்ற, எந்த நேரத்திலும் கைது செய்யப்படக்கூடிய, கைதானவருக்கு எந்தப் பாதுகாப்புமற்ற, முக்கியமாக சட்டபூர்வமாக காணாமல் ஆக்கப்படக்கூடிய இந்தச் சட்டத்தை மக்கள் ஏகோபித்து எதிர்க்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி அதை விடவும் மோசமான ஒரு சட்டத்தை கொண்டுவர வேண்டிய எந்த அவசியமும் இல்லை. நாடாளுமன்றில் கொண்டுவரப்பட இருக்கும் இந்தச் சட்ட வரைபு தோல்வியுற்றால் மட்டுமே புதிய பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறைக்கு வருவதைத் தடுக்க முடியும். சிவில் சமுகங்கள், மதத் தலைவர்கள், சமுக செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சங்கங்கள், மாணவர்கள், அரசியல்வாதிகள் மக்கள் என்று எல்லோரும் இணைந்து அரசுக்கு கொடுக்கும் அழுத்தம் மூலமே இது சாத்தியமாகும்.

**ஆட்டை அங்கீகாரத்துடன் ஓநாயின் பாதுகாப்பில் விடுவதற்கு ஒப்பானது இந்தச் சட்டம். நீதித்துறையை இந்த அரசாங்கம் எப்படி வளைக்கும் என்பதையும், நீதிமன்றின் கட்டளையை எப்படி அலட்சியப்படுத்தி இராணுவ உதவியுடன் அத்துமீறல் செய்யும் என்பதையும் கடந்த காலங்களில் நாங்கள் பார்த்திருக்கிறோம். குருந்தனூர் மலை விவகாரம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.**

# குரங்கும்– குடியுரிமையும்



இலங்கையிலிருந்து சுமார் ஒரு லட்சம் குரங்குகளை சீனாவுக்கு அனுப்பும் உத்தேச திட்டம் பற்றி பலரும் – பலகோணங்களில் கருத்துகளை முன்வைத்துவருகின்றனர். சிலர் எதிர்ப்புகளையும் வெளியிட்டுவருகின்றனர்.மேலும் சிலர் ‘குரங்குகளின் உரிமைக்காக’ குரல் எழுப்பவும் ஆரம்பித்துவிட்டனர்.

ஒரு சிட்டுக் குருவியின் சிறகை சேதப்படுத்தினால்கூட, சட்டம் தனக்கே உரிய பாணியில் வீறுநடை போடும் ‘ஜனநாயகம்’ எனக் கூறப்படும் நாட்டில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்!!

ஆனால் மலையக தமிழர்களின் குடியுரிமையை – வாக்குரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக – வீடற்றவர்களாக – முகவரி அற்றவர்களாக வாழ வைத்ததும் இதே நாடுதான்.

அதுமட்டுமல்ல சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம்மூலம் ஆடு, மாடுகளை ஏற்றுமதிசெய்வதுபோல சுமார் 5 லட்சம் மலையக தமிழர்கள் நாடு கடத்தப்பட்டனர். உரிமைகளை இழந்து, உறவுகளைப் பிரிந்து எவ்வளவு வலிகளுடன் அவர்கள் சென்றிருப்பார்கள். மலையகம் முதல் தலைமன்னார் வரையான ரயில் பயணம் ‘விழிநீர் வடியும் பயணம்’ ஆகவே அமைந்திருக்கும். அதனால்தான் ‘ஒப்பாரி’ கோச்சி என்றுகூட சொல்லப்பட்டது.

குரங்குகளால் தனிப்பட்ட ரீதியில் எனக்கு ஏற்பட்ட இழப்புகள் ஏராளம். எங்கள் நாட்டுக் குரங்குகளை வெளிநாடு அனுப்புவது எனக்கும் ஏதோவொரு விதத்தில் கவலையை ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் உணவுப் பொருட்களுக்கு பெருமளவு சேதத்தை ஏற்படுத்தும் விலங்குகளில் முதன்மை வகிக்கின்றது குரங்கு. ஆக உணவுப் பாதுகாப்பு கருதி, இப்படியொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் எமது நாட்டை 7 சதாப்தங்களுக்கு மேலாக ஆண்டவர்களால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளைவிடவும், இந்த குரங்குகளால் எமது நாட்டுக்கு அவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்படவில்லை என்பதுதான் எனது கருத்து.

> எமது நாட்டை 7 சதாப்தங்களுக்கு மேலாக ஆண்டவர்களால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளைவிடவும், இந்த குரங்குகளால் எமது நாட்டுக்கு அவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்படவில்லை என்பதுதான் எனது கருத்து

குரங்குக்கும் முகவரி இல்லை. எமது மக்களுக்கும் முகவரி இல்லை. குரங்குக்கும்நிலவுரிமைஇல்லை – சொந்த வீடு இல்லை. எங்களுக்கும் அப்படியேதான். குரங்கு ‘அழித்தல்’ தொழிலை செய்வதால் அதனை அனுப்ப பாக்கின்றனர். எமது மக்கள் ‘காத்தல்’ தொழிலை செய்வதால் ஏதோவொரு விதத்தில் அவர்கள் இருப்பை தக்க வைத்துக்கொள்கின்றனர்.

200 வருடங்களாம். ஒரு இனம் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்கு சுமார் 50 ஆண்டுகள் போதும். ஆனால் 20 சதாப்தங்கள் கடந்தும் உரிமை அற்றவர்களாக வாழும் நிலை. இனியாவது ‘உரிமை’ பற்றி சிந்தியுங்கள். ‘உரிமை அரசியல்’ பற்றி பேசுங்கள். இல்லையேல் இதே நிலையில்தான் 300 ஆவது வருடத்தையும் கொ[தி]ண்டாடி – மகிழவேண்டிவரும்.



ஆர்.சனத்



# யாழில் நீர் பிரச்சினைக்குக் காரணம் கட்டுப்பாடற்ற விவசாயமே!

**இரா.சிவசந்திரன்**
(ஓய்வு நிலைப் பேராசிரியர்,
பணிப்பாளர், சிந்தனைக்கூடம்.)

அண்மைக் காலத்தில் யாழப்பாணத்து மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை பற்றிப் பல்வேறு கருத்துக்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் பல்வேறு காரணிகளால் குடிநீர் பயன்பாட்டிற்கு உகந்ததற்றதாகி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீரை மீளப்புதுப்பிப்பதற்குப் பல்பக்க அடிப்படையிலான பல நடவடிக்கைகள் பலவற்றை செயற்படுத்த வேண்டும்.

இதற்கு ஒரு உடனடி உபாயமாக யாழ்ப்பாணப் பகுதியில் கிடைக்கக் கூடிய மழை நீரை உரிய முறையில் சேகரித்து நிலத்தடி நீரை மீண்டும் சுத்தமான குடிநீராக மாற்றுவது என முன்மொழியப்பட்டுள்ளது. இன்னொரு மாற்று உத்தியாக இரணைமடுக் குளத்தில் இருந்து ஒரு பகுதி நீரை தென்மராட்சி ஊடாக யாழ்ப்பாணத்திற்கும் தீவுப் பகுதிக்கும் கொண்டு செல்வது என்றதிட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டிய விபரங்கள் போதியளவாக இன்னும் முன்வைக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்து நிலத்தடி நீர் பெருமளவில் பாதிப்படைவதற்கு கடல் நீர் உட்புகுதல், கடல் நீர் தடுப்பு முறைகள் பராமரிக்கப்படாமல்





விடப்பட்டமை, அதிகளவு விவசாய உர உபயோகம், கட்டுப்பாடற்ற முறையில் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்தமை, கட்டுப்பாடற்ற வகையில் கிணறுகளையும் ஆழ்கிணறுகளையும் தோண்டியமை,பாதுகாப்பற்ற மலசலகூடமுறைமைகளால் கழிவுகள் நிலத்தடி நீருடன் சேர்கின்றமை, நகர்ப்புறங்களில் மலசலகூடக் கழிவுகள் அகற்றும் முறைமை முறையாக இல்லாமை போன்றவற்றினைக் கூறலாம்.

இக் காரணிகள் கடந்த 50 வருட காலத்தில் ஒன்று திரட்டிய வகையில் ஏற்படுத்திய தாக்கமே இன்றைய யாழ்ப்பாணக் குடிநீர்ப் பிரச்சினையாகும். இதை விட சுன்னாகம் மின்பிறப்பாக்கி நிலையத்தில் கழிவு எண்ணைக் கசிவினால் ஏற்பட்ட பாதிப்பின் விஸ்தீரணம் இன்னும் உரிய முறையில் மதிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணக் குடிநீருக்கான ஒரு பாரிய திட்டம் மிகவும் அவசரமானது என்ற விடயம் தற்போதைய நிர்வாக கட்டமைப்பினால் போதியளவிற்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை. பொதுமக்கள் மத்தியில் ஏனோதானோ என்ற மனப்பான்மையும், இது வேறு யாருடையதோ பிரச்சினை என்ற மாதிரியான எண்ணமும் மிக உயர்வான அளவில் காணப்படுகின்றது.

இதற்கு முக்கிய காரணம் தனிப்பட்ட எதிர்கால அரசியலை உள்நோக்காக வைத்து அறிவு பூர்வமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்து, வேண்டாத உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, அதன் வழி கிளிநொச்சி – யாழ்ப்பாணம் குடிநீர்த்திட்டத்தினை முடக்கிவிட நினைக்கும் அரசியல் வாதிகளும், அறிவுபூர்வமான தகவல்கள் இருந்தும் அவற்றினை ஆரோக்கியமான வகையில் பொதுமக்கள் மத்தியில் கொண்டுசெல்வது மக்கள் கருத்துருவாக்கத்திற்கு உதவ முன்வராத நேர்மையற்ற புத்திஜீவிகளுமே என்பது வெளிப்படைக் காரணமாக இருக்கின்றனர்.

எல்லா அழிவுகளுக்கும் பின்னர் வழக்கம் போல எமக்கு இது இப்படி என்று தெரியாதே என பொதுமக்கள் அங்கலாய்ப்பர் என்பது திண்ணம். பொதுமக்கள் முன் மறைக்கப்பட்டுள்ள சில முக்கியமான விடயங்களை இங்கு குறிப்பிடுகின்றோம்.

> **யாழ்ப்பாணக் குடிநீருக்கான ஒரு பாரிய திட்டம் மிகவும் அவசரமானது என்ற விடயம் தற்போதைய நிர்வாக கட்டமைப்பினால் போதியளவிற்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை. பொதுமக்கள் மத்தியில் ஏனோதானோ என்ற மனப்பான்மையும், இது வேறு யாருடையதோ பிரச்சினை என்ற மாதிரியான எண்ணமும் மிக உயர்வான அளவில் காணப்படுகின்றது.**

கட்டுப்பாடற்ற விவசாய முறையினால், அதாவது ஆயிரக்கணக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொண்டு தொடர்ந்து நீரை ஐம்பது வருட காலங்களுக்கு மேலாக வெளியே இறைத்தமையால் ஆயிரக்கணக்கான வருடங்களாக இயற்கையினால் உருவாக்கப்பட்டிருந்த நன்னீர் வில்லைகளில் இருந்த நீரின் தரம் உவர்த் தன்மையடைய ஆரம்பித்ததோடு நீரின் அளவும் குறையத் தொடங்கியது.

கட்டுப்பாடற்ற உர, இரசாயனநாசினிகளின் உபயோகத்தின் காரணமாக நைத்திரேற்றுக்களின் அளவு பெருமளவு நிலத்தடி நீருடன் கலக்க நேர்ந்ததால் குடாநாட்டில் இன்றுவரை உள்ள நிலத்தடி நீர் நுகர்வுக்குரியது அற்றதாக மாறியது. இதன் அளவு பத்து ஆண்டுகளுக்கு முன்னரேயே உலக சுகாதார நிறுவனத்தின் நியமங்களைவிட குறையத்தொடங்கி இருந்தது.

அதே போல தரக்கட்டுப்பாடில்லாத மலசல கூடங்களின் பெருக்கம் காரணமாக நிலத்தடி நீருடன் மலக்கழிவுக்கிருமிகள் கலக்க ஆரம்பித்தன. இதன் வேகத்தைக் குறைப்பதற்கு மலசலக் கழிவுகளை அகற்றுவதற்கான வடிகால் அமைப்புத்திட்டம் ஒன்றுகூட குடாநாட்டில் இல்லை. இவற்றின் தாக்கமாக யாழ்குடாநாடு இலங்கையின் புற்றுநோய் உற்பத்தியில் அதிக வளர்ச்சி வீதத்தைக் கொண்டதாகவும், சிறுநீரகப் பாதிப்பை அதிகமாகக் கொண்ட பிரதேசமாகவும், நெருப்புக்காய்ச்சல் நோயாளிகளை உருவாக்குவதில் முதலிடம் வகிக்கும் மாவட்டமாகவும் மாறியுள்ளது.

இவை பற்றிய தகவல்கள் அறிவு பூர்வமாக புத்திஜீவிகளால் முன்வைக்கப் படாமையால் யாழ் குடாநாட்டில் கிடைக்கும் குடிநீர் உண்மையில் மாசடையவில்லை, இது வெறும் புரளி என்ற கருத்தைக் கூட சிலர் துணிந்து முன்வைக்கின்றார்கள். விவசாயத் துறைக்கு ஈடாக மக்களது பொருளாதார, வாழ்வாதார தேவைகளுக்கு வழிவகைகளை முன்வைக்க வேண்டும் என்பதும் விவசாயத்தின் பேண்தகு அளவு மட்டத்தினை நிர்ணயித்துக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்பதும் இங்கு பேசப்படவேயில்லை. நிலத்தடி நீர் முகாமை பற்றிப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் போதாது.

நீர் இறைக்கும் இயந்திரங்களையும், நீர் வெளியேறும் அளவினையும் கட்டுப்படுத்துவதற்கு உபவிதிகளோ, முகாமையாளர்களோ ,



முறைமைகளோ இல்லை. நீர் இறைக்கும் இயந்திரங்களை விவசாய தேவைக்கு எவ்வளவு உபயோகிப்பது, நிலக்கீழ் நீரை உறிஞ்சுவது தடுக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் ஏதாவது குடாநாட்டில் உண்டா? என்பன போன்ற ஆய்வுப்பெறுபேறுகளும் வெளியிடப்படவில்லை என எந்த ஒரு பிரதேசமும் வரையறுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தினுடைய நிலக்கீழ் நீர் அமைப்பு தோன்றி வளர்வதற்கு ஆயிரக்கணக்கான வருடங்கள் எடுத்தன என்பதும் இது இயற்கைச் சக்திகளினால் உருவாகிய ஒரு சமநிலையில் தங்கியிருந்தது என்பதும் கடந்த நூற்றாண்டில் குறுகிய ஒரு ஐம்பது வருட , அறுபது வருட காலத்தினுள்ளேயே இதற்குப் பாதிப்பு ஏற்பட்டது என்பதும் யதார்த்தமாகும்.

நுணுக்கமான இந்த முறையினை இயற்கையாகக் கிடைக்கும் மழையினைக் கொண்டு மீளப்புதுப்பிப்பதற்கு மீண்டும் எத்தனை வருட காலங்கள் தேவைப்படும்? நிலக்கீழ் அமைப்புகள் முழுவதும் மழைநீரினால் மீண்டும் கழுவப்பட்டாலேயே இது சாத்தியமாகும்.

வேறு குறுக்கு வழிகள் இதற்கு இல்லை. இதற்கு ஆகக் குறைந்தது மிகக் கடுமையான கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டு வந்தாலும் கூட, ஐம்பது தொடக்கம் நூறு வருட காலங்களாவது தேவைப்படும். அது வரை நீரை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுகின்ற தாக்கங்கள் குறைந்து செல்வதற்கான வாய்ப்புகள் ஏதும் இல்லை.

யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் நிலமேற்பரப்பு நீரினைக் கொண்டு வரும் திட்டங்களின் மூலமே குறுகிய காலத்தில் தீர்த்துக் கொள்ள முடியும். இந்த யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டே ஆக வேண்டும். இதன் காரணமாகவே பல்வேறு முன் யோசனைகளின் பின்னர் வடமாகாணத்தினுள் மழை மூலம் கிடைக்கின்ற நீரினை அறிவுப்பூர்வமாகக் குறுகிய காலத்தில் முகாமை செய்து யாழ்ப்பாணக் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அரசியல் காரணங்களுக்காக வெளிப்படையாகக் கூற முடியாத பிரச்சினைகளும் இதன் மூலம் தவிர்க்கக்கூடியதாக இருக்கும். இரணைமடுவில் இருந்து நீர் எடுக்க முடியாது என்ற எதிர்ப்புக் கோசத்தைக் கிளப்பியதன் மூலம் அரசாங்கம் மொறகஹகந்த திட்டத்தினை அங்கீகரித்து அதன் மூலம் மகாவலி நீரினைக் கொண்டு வருவதாகத் தீர்மானித்துள்ளதாக தெரிகிறது. இதன் தார்ப்பரியமும் தாக்கங்களும் மிக இலகுவாக ஊகிக்கக் கூடியனவாகும்.





“அரசியல் காரணங்களுக்காக வெளிப்படையாகக் கூற முடியாத பிரச்சினைகளும் இதன் மூலம் தவிர்க்கக்கூடியதாக இருக்கும். இரணைமடுவில் இருந்து நீர் எடுக்க முடியாது என்ற எதிர்ப்புக் கோசத்தைக் கிளப்பியதன் மூலம் அரசாங்கம் மொறகஹகந்த திட்டத்தினை அங்கீகரித்து அதன் மூலம் மகாவலி நீரினைக் கொண்டு வருவதாகத் தீர்மானித்துள்ளதாக தெரிகிறது. இதன் தார்ப்பரியமும் தாக்கங்களும் மிக இலகுவாக ஊகிக்கக் கூடியனவாகும்.”

சர்வதேச நிதி வழங்கல் நிறுவனங்களின் நெருக்கடிகள், மாறிவரும் கொள்கைகள், இலங்கை தன்னை தான் ஒரு நடுத்தர வருமானத்தைப் பெறும் நாடு என பிரகடனம் செய்தது. இதனால் சலுகை அடிப்படையிலான பெறுகைகளுக்குத் தகைமை இழந்தமை, பல்பக்க நிதிநிறுவனங்களின் முன்னுரிமைகள் போன்ற பல்வேறு நெழிவுசுழிவுகளூடாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளுக்குப் பெருமளவில் தீர்வு வழங்குகின்ற அதே நேரம், நீர்ப்பாசன முறைமைகளை அபிவிருத்தி செய்தல், கிளிநொச்சி பூநகரி தீவுப்பகுதி உட்பட நீண்ட பிரதேசத்திற்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் யாழ்நகருக்கான திண்ம கழிவகற்றும் வடிகாலமைப்பு முறைமையொன்றை நிறுவுதல் போன்ற பல்வேறு முக்கியமான அம்சங்களையும் ஒன்று திரட்டி மிகப் பெரியதொரு முதலீட்டுத் திட்டத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கி நிபுணர்கள் வடிவமைத்துத் தந்தார்கள்.

மக்கள் மிகவும் புத்திபூர்வமாக வகுக்கப்பட்ட அத் திட்டத்தினை வெறுமனே உணர்ச்சிகளின் அடிப்படையில் நிராகரித்தால் அது யாழ்ப்பாணத்துப் புத்திஜீவிகளின் தோல்வியாகவே கருதப்படவேண்டிவரும்.



எனவே தயவு செய்து இத்திட்டத்தினை மாகாணசபை அவசரப்பட்டு நிராகரித்திருந்த போதும் பல்வேறு மட்டங்களுடனும் தொடர்பு கொண்டு உடனடியாக அதனை நடைமுறைப் படுத்துவதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணச் சமூகம் பேண்தகு சமூகமாக நீண்ட பாரம்பரிய நாகரிகத்தைத் தொடர்ந்தும் பேணும் சமூகமாக நிலைபெற நாம் வழிசமைத்துக் கொடுத்தல் வேண்டும். மக்களும், சமூக நிறுவன அமைப்புகளும் தொடர்ந்து குரல்கொடுத்து எமது எதிர்காலத்தைக் காக்க முன்வரவேண்டும்.



# வெடுக்குநாறி மலை



சர்மிலா வினோதினி

வவுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கின்ற எல்லைக்கிராமங்களில் ஒன்றுதான் ஒலுமடு. ஒலு என்று சொல்லப்படுகின்ற ஒரு வகைத் தாவரச் செடிகள் இங்குள்ள குளத்தில் அதிகமாக வளர்ந்து நின்ற காரணத்தினால் ஒலுமடு என்ற காரணப் பெயரைப் பெற்றது இந்தக் கிராமம்.

எளிமையும் இயற்கை அழகும் நிறைந்திருக்கின்ற கிராமத்தின் மையப்பகுதியிலிருந்து வண்டில் பாதை வழியாக சுமார் நான்கு கிலோமீற்றர்கள் வனப்பகுதிக்குள் பயணப்படுகின்ற போது, இயற்கை அரணென நிமிர்ந்து நிற்கின்ற வெடுக்குநாறி மலைத் தொடர் பகுதியின் ஆரம்பப் பகுதியைக் காணலாம். பெரும் கற்கள் உருண்டு திரண்டு காட்டின் பெரு மரங்களின் இடையே உருட்டி விடப்பட்டதைப்போல காட்சியளிக்கும் சிறு குன்றுப் பகுதிகளும், ஓங்கி வளர்ந்து நிற்கின்ற காட்டு மரங்களும் அவற்றின் கீழ் உள்ள சிறு புதர்களும் கொடிகளும் செடிகளுமாக அந்த வனமும் இணைந்த மலைக்குன்றுகளும் காட்டுகின்ற காட்சிகள் அற்புதமானவை.

காட்டின் மணத்தை நுகர்ந்துகொண்டும், காட்டின் ஒலியை செவிமடுத்துக் கொண்டும் நடந்து செல்ல வெடுக்குநாறி மலையின் முதற் பகுதியை காணலாம். மலையின் முன்னும் பின்னுமாக ஒரு வகை நாற்றம் கொண்ட மரங்கள் காணப்படுவதால் வெடுக்குநாறி மலை என்கின்ற காரணப்பெயரை இந்த மலை பெற்றுக்கொண்டதென அறிய முடிகிறது.



இந்தப்பகுதியில்தான் இந்த மலையின் இக்காலத்து சர்ச்சைக்குரிய தொல்லியல் எச்சங்கள் வெளித் தெரிய ஆரம்பிக்கின்றன. இங்குள்ள மலையின் முகப்புப் பகுதியில் புராதன பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு அவ் எழுத்துக்கள் மழை மற்றும் வழிந்தோடும் நீரினால் அரிப்பிற்கு உள்ளாகாத வகையில் எழுத்துக்களின் மேற்பகுதியில் மலையைக் குடைந்து சிறு ஆழத்தில் நீரோட வழி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு வினாயகர், அம்மன், வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிலை வைத்து வழிபடுகின்றார்கள் கிராம மக்கள்.

உன்னிப்பான அவதானத்திற்குரிய மலையின் இந்த முதற்பகுதியைக் கடந்து மேலும் சில பல அடிகள் பயணப்பட மலைத்தொடரின் அடுத்த பகுதி வரவேற்கிறது. மென் சாய்வு கொண்ட இப்பகுதியால் மலையில் மேல் ஏறிச்செல்ல ஒரு அகழி போன்ற சிறிய நீர்த்தடாகம் வரவேற்கிறது. ஒரு மனிதனை மூடக்கூடிய அளவிற்கு நீர் நிறைந்து காணப்படுகின்ற சிறு நீர்த்தடாகத்தில் நீர் வற்றாமல் எப்பொழுதும் நிறைந்திருக்கும் என்கின்றார்கள் கிராம மக்கள். அந்த நீர்த்தடாகத்திற்கு மேலே மலையின் சற்று உயரமான பகுதியில் நாகத்தை பிரதிபலிக்கும் கற்தெய்வ வழிபாடு இடம்பெறுகிறது.

நீர்த்தேக்கத்தில் இருந்து பார்க்கின்ற போது மலைநோக்கிச் செல்லும் இடப்பகுதியின் உயரமான ஓரிடத்தில் மலையோடு தொடர்பற்ற, எங்கிருந்தோ கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டது போன்ற பாரிய கல் ஒன்று சிறு சிறு சதுர வடிவான கற்களை அடித்தளத் தாங்கிகளாக முண்டு கொடுக்கப்பட்டு நிமிர்த்தி வைக்கப்பட்டுள்ளது. புராதன தொழிநுட்பத்தின் இன்னும் ஒரு வடிவத்தை பறைசாற்றுகின்ற இப்பகுதியை கடந்து மலையில் மேல் நோக்கிச் செல்லுகின்ற

**நெடுங்கேணி ஒலுமடுவின் வெடுக்குநாறி மலைப் பிரதேசத்திலுள்ள இந்த பிராமி எழுந்துக்களோடு இணைந்த ஏனைய எச்சங்களும், நாக வழிபாடும், நீர்ப்பாசன அமைப்புக்களும் நாகர்களின் தொன்மத்தின் நீட்சி என்று கருதுவதற்கான வாய்ப்புக்கள் பல உள்ளன. இந்த மலைப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள நாகர் குளம் என்கின்ற குளப்பகுதி இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. வட கிழக்கில் பூர்வீர்கமாக வாழ்கின்ற தமிழர்கள் நாகர்களின் வழி வந்தவர்கள் என்கின்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இந்த வெடுக்குநாறி மலையின் கதைகள் உலகறியப்பட வேண்டியவை.**



போது ஒரேசீராக குடையப்பட்ட சிறிய சிறிய குழிகள் தென்படுகின்றன. மருந்துகள் மற்றும் பச்சிலைகளை அரைப்பதற்கான குழிகளாக அவை காணப்பட்டிருக்கலாம் என்கின்ற ஐதீகத்தையும் நம்பிக்கையையும் இக்குழிகளோடு இணைத்துப் பார்க்க இடமிருக்கிறது.

குழிகள் காணப்படுகின்ற அப்பகுதியை கடந்து இன்னும் மேற்சென்று கீழிறங்க மலைத்தொடரில் இயற்கையாகவே அமையப்பெற்ற சிறு குன்றொன்று தென்படுகின்றது. பார்ப்பதற்கு நாகத்தின் தலை போன்று தென்படுகின்ற அந்தக் குன்றில் பாம்பின் முகத்தில் தெரிகின்ற பக்க வளைவுகள் விளிம்புச் சதைகளைப்போன்ற உன்னிப்பான அவதானத்திற்குரிய கற் சிற்ப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. நாக பாம்புகள் அவ்விடத்தில் உலவுவதாகவும் தாங்கள் பிரசாதமாக படைக்கின்ற பாலை அவை குடிப்பதாகவும் நம்புகின்றார்கள் கிராம மக்களும் பக்தர்களும்.

அந்தப்பகுதியில் இருந்து மலையில் செங்குத்தாக இன்னும் மேல் நோக்கிச் செல்ல மலையின் உச்சிப்பகுதிக்குச் செல்வதற்குரிய சிறு சமவெளிப் பகுதி தென்படுகின்றது. இச் சமவெளிப்பகுதிக்கு செல்வதற்காக அலுமினிய வேலைப்பாடுகளுடைய படிகளை ஆலய நிர்வாகத்தின் முயற்சியால் அமைத்திருக்கிறார்கள். ஆனால் முழுமையாக அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதியை வழங்காத நிலையில் அச் செயற்பாட்டிற்கு எதிராக வழக்கினையும் தொடர்ந்திருக்கிறது திணைக்களம்.

மலையின் சிறு சமவெளிப்பகுதியிலிருந்து அப்பகுதியின் இரம்மியமான வனப்பையும் சூழலையும் அனுபவிக்க முடிகிறது. பின்னர் அங்கிருந்து மலையின் அடுத்த உச்சிக்கு ஏறிச் செல்வதற்கான எவ்விவிதமான படிகளோ, அமைப்புக்களோ அற்ற நிலையில் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கின்ற சிறிய மரக்குற்றியிலான தாங்கிகளையும், பெருங் கொடிகளையும், மரங்களையும் பற்றிக்கொண்டு மேலே ஏற முடிகின்றது. பெரும் பிராயத்தனத்தின் பின் மேல் நோக்கி ஏறிச்செல்ல மலையின் உச்சியில் கற் பாறைகளை அடுக்கி அவற்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கின்ற புராதன ஆதி இலிங்கேச்சரர் கண்களில் தென்படுகிறார். கூம்பு வடிவிலான பாறைய சதுரக் கற்களின்மேல் அடுக்கி ஒட்டி நிமிர்த்தி வைக்கப்பட்டிருப்பது போன்று தென்படுகின்றது மக்களின் நம்பிக்கைக்குரிய ஆதி இலிங்கேச்சரர் சிவலிங்கம். இந்தச் சிவலிங்கம் இராவணன் காலத்திற்குரியதாக இருக்கலாம் என்கின்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர் கிராம மக்கள்.



இயற்கை மூலிகைகள் நிறைந்த அந்தப் பகுதியிலிருந்து இன்னும் சற்று மேல் நோக்கி ஏறிச்செல்ல அந்த மலையின் சமவெளி தென்படுகின்றது. அங்கு சிவலிங்கம் ஒன்றை பிரதிட்டை செய்து வழிபடுகிறார்கள் கிராம மக்கள்.

சுமார் முன்நூறு அடிகளுக்கு மேற்பட்ட மலையுச்சியின் சமவெளியில் ஏறிநிற்க காட்டின் காற்று மேனியைத் தழுவ அங்கிருந்து வன்னிப் பிராந்தியத்தின் அழகை கண்டுகொள்ள முடிகின்றது. ஒரு பக்கம் வவுனியாவின் காட்சிகளும், மறுபக்கம் மதவாச்சியின் காட்சிகளும், இன்னும் ஒரு பக்கம் பதவியா போன்ற பிரதேசங்களும் தென்படுகின்றன என்பது கிராம மக்களின் கணிப்பு.

புவியின் பௌதீகவியல் ரீதியில் இப்படியான மலை உருவாக்கச் செயற்பாட்டிற்கு பல்வேறு காரணிகள் துணை புரிகின்றன. புவியின் உட்பகுதியில் இயங்குகின்ற மேற்காவுகளை ஓட்டங்களின் காரணமாகவும், புவித்தகடுகளின் ஒருங்குதல் செயற்பாட்டின் காரணமாகவும் மலை உருவாக்கச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. அந்த வகையில் நெடுங்கேணிப் பிரதேசத்தின் பௌதீக இட அமைவும், இவ் வெடுக்குநாறி மலையின் புவியியற் காரணிகளும் கற்றுணரப்பட வேண்டிய அதே நேரத்திலே கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பரந்து விரிந்திருக்கின்ற அந்தக் காடுகளும் காட்டு மரங்களும், இந்த மலையும் தேக்கி வைத்திருக்கின்ற தொன்மத்தின் கதைகள் பலவாகும்.


இலங்கையின் குடித்தொகை வரலாற்றில் வன்னிப்பிராந்தியம் காலத்தால் முற்பட்ட வரலாற்றைப் பதிவு செய்கின்றது. இங்கு குளங்களை அடிப்படையாக வைத்து உருவாகிய குடியேற்றத்திட்டங்கள் பெருங்கற்காலத்தின் எச்சங்களையும் அதற்கு முந்திய குறுணிக்கற்கால எச்சங்களையும் பறைசாற்றுபவை என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். குளங்களை அச்சொட்டாகக் கொண்ட கிராமங்களும் இன்னும் பூனகரி, மன்னாரின் கட்டுக்கரை மற்றும் தேக்கம் பகுதிகள், வவுனியாவின் செட்டிகுளம், மாமடுவ போன்ற பல பிரதேசங்கள் இவற்றின் எச்சங்களாக எஞ்சி நிற்கின்றன. இங்கு கண்டு கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்கள் இதனை உறுதி செய்கின்றன. இலங்கையில் விஜயன் வருகைக்கு முன்னர் இங்கு இயக்க, நாக என்கின்ற இரண்டு இனக்குழுக்கள்



வாழ்ந்ததாகவும் அவர்களுக்கிடையே பண்பாட்டு ரீதியான வேறுபாடுகள் காணப் பட்டதாகவும் உடலியல் அடிப்படையில் ஒத்த இயல்புகளைக்கொண்டிருந்ததாகவும் வரலாறு சொல்கிறது.

அந்த வகையில் புராதன இலங்கையில் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தை ஆரம் பித்து செயற்படுத்தியவர்கள் நாகர்கள்தான் என்பது 'சிரான் தெரணியகல' உட்பட்ட வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நாகர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் பரவியிருக்கின்றன. கிழக்கி லங்கையின் படுவான்கரையின் வெல் லாவெளியில் அமைந்திருக்கின்ற பிராமி சாசனங்களும் குடைவரை எச்சங்களும் இவற்றை பலப்படுத்துகின்றன.

இதேபோன்ற பிராமி எழுத்துக்களைக் கொண்ட சாசனம் இந்த வெடுக்கு நாறி மலையிலும் பதியப்பட்டுள்ளது. பிராமி எழுத்துக்களை முதன் முதலில் வட இந்தி யாவில் அசோகச் சக்கரவர்த்தி பயன்படுத் தினார் என்றும் பிற்காலத்தில் பரப்பப்பட்டு பின்னர் திராவிட மொழிக் குடும்பத்தோடு



கலந்த காரணத்தினால் தமிழில் தமிழ் வரி வடிவத்திற்கு ஏற்ப பிராமி எழுத்துக்களை உள்வாங்கி இங்குள்ள மக்கள் பயன்படுத் தினார்கள் என்பதும் மொழியியலாளர்களின் கருத்தாகும்.

ஆக நெடுங்கேணி ஒலுமடுவின் வெடுக் குநாறி மலைப் பிரதேசத்திலுள்ள இந்த பிராமி எழுந்துக்களோடு இணைந்த ஏனைய எச்சங்களும், நாக வழிபாடும், நீர்ப்பாசன அமைப்புக்களும் நாகர்களின் தொன்மத் தின் நீட்சி என்று கருதுவதற்கான வாய்ப் புக்கள் பல உள்ளன. இந்த மலைப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள நாகர் குளம் என்கின்ற குளப்பகுதி இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. வட கிழக்கில் பூர்வீர் கமாக வாழ்கின்ற தமிழர்கள் நாகர்களின் வழி வந்தவர்கள் என்கின்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இந்த வெடுக் குநாறி மலையின் கதைகள் உலகறியப்பட வேண்டியவை.

ஆனால் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஆலயப் பகுதியில் பக்தர்கள் வழிபாடுகளை நடாத் துவதற்கும் இயல்பான நடமாட்டத்திற்கும் தடை விதிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் இந்த நிலம் கொண்டி ருக்கின்ற கதைகளை மாற்றுவதற்கான முயற்சிகளாகும். இங்கு கோயிலிற்கு சென்று வருவதற்கென அமைக்கப்பட்டி ருக்கின்ற ஒரு பகுதிக்கான படிகள் தவிர ஏனைய பகுதிகளுக்கான படிகளை அமைப் பதற்கு தொல்லியல் திணைக்களம் தடை வித்துள்ளது.

அதே நேரத்திலே இந்த ஆலயப்பகுதிக் குச் செல்வதற்கான சுமார் நான்கு கிலோ மீற்றர்கள் தூரமுள்ள மண் பாதையில் உரிய முறையில் பாதைகளை அமைப்பதற்கு முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி குறித்தொதுக்கப் பட்டிருக்கின்ற நிலையில் வனவள பாது காப்புத் திணைக்களம் அதற்கான அனும தியை தடுத்து நிறுத்தி வைத்திருக்கின்றது. குறித்த அனுமதியைப் பெறுவதற்காக பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி களை மேற்கொண்ட போதும் அனுமதி இன் னமும் கிடைக்கப்பெறவில்லை. இவற்றிற் கான விளக்கக் கடிதங்கள் முழுமையான சிங்கள மொழியில் ஆலய நிர்வாக சபைக்கு அனுப்பப் பட்டுள்ளது. தமிழும் சிங்களமும் ஆங் கிலமும் இந்த நாட்டின் அரச கரும மொழிகள் என்கின்ற நிலையில் மக்களுக்காக, மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலேயே அரச திணைக்களங்கள் சேவையாற்ற வேண்டும்.

இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை நடாத்தக்கூடாது என்று தொல் லியல் திணைக்களம் தனிச் சிங்களத்தில் கடி தத்தை அனுப்பி பொலிசார் தடுத்து, பின்னர் நீதி மன்ற அனுமதியில் பொங்கல் நிகழ்வுகள் இன்று ஆரம்பித்து பத்தாவதுநாள் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள் ஆலய நிர் வாகத்தினர்.

தொல்லியல் சின்னங்கள் முறையாகப் பராமரிக்கப் பட வேண்டிய அதே நேரத்திலே, வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை, ஆனால் இலங்கையின் புராதன சின்னங்களில் ஒன்றா கிய சிகிரிய சிங்க மலையில் உரிய முறையில் படிகள் அமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள்



சென்று வரமுடியும் எனில் வெடுக்குநாறி மலையில் படிகள் அமைத்து மக்கள் வழிபாடு செய்வதில் உள்ள தடைகள் என்ன?

பாதுகாக்கப்பட்ட உலக வனங்களில் ஒன்றா கிய சிங்கராஜ வனப்பகுதிக்கு மக்கள் செல்வ தற்காக, காட்டின் மக்கள் நடமாட்டம் உள்ள முதலாவது வலயப் பகுதிவரை கற்பாதைகள் அமைத்து சென்றுவர முடியும் எனில் அதே போன்று வனத்தினை பாதிக்காத வகையில் கற்பாதைகளை அமைத்து பயணிகள் மற்றும் பக்தர்கள் உரிய முறையில் நடந்து சென்று வழிபாடுகளை நடாந்தி வருகின்ற வகையில் வெடுக்குநாறி மலைக்குச் செல்லும் பாதையில் உரிய கற் பாதைகளை அமைப்பதற்கேனும் வனவளத் திணைக்களம் அனுமதியை வழங் குவதில் உள்ள தடைகள் என்ன?

இந்த ஆலயத்தின் தொன்மத்தை அறிந்த வெளியிடத்து மக்கள் கிராமத்திற்குச் சென்று ஆலயத்தைத் தேடி வழிபடச் செல்கின்ற போது இனம் தெரியாதோரால் கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுவதன் பின்னுள்ள கதைகள்தான் என்ன??

இவைதான் கிராம மக்களின் விடையற்ற வினாக்களாக உள்ளன.




நவீனன்

# உலக வரலாற்றில் பெண்களின் உண்ணாவிரதப் போராட்டங்கள்

## ஈழத்தில் அன்னை பூபதியின் உயிரீகத்தின் உச்சம்!!

### அமெரிக்காவில் பெண் உரிமைக்காகப் போராடிய அலஸ்ஸ்டோக்ஸ் பால்:

தலைமை சரியான கிளர்ச்சியை பிரதிநிதித்துவப் படுத்துவதாக அமைந்தது. 1913 மார்ச் 3 ஆம் தேதி பெண் வாக்குரிமை ஊர்வலத்தை அவர்கள் ஏற்பாடு செய்தனர். 8,000 க்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஊர்வலத்திற்காக அணிவகுத்துச் சென்றனர்.

அமெரிக்காவில் பெண் உரிமைக்காக ஊர்வலம், அலஸ் ஸ்டோக்ஸ் பால் (Alice Stokes Paul) ஓர் அமெரிக்க பெண்ணியவாதியும், பெண்கள் உரிமை ஆர்வலர் ஆவார். அமெரிக்க அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்திற்கான பிரச்சாரத்தின் முன்னணி மூலோபாயவாதிகளில் இவரும் ஒருவர்.

அக்காலத்தில் தடைசெய்யப்பட்ட பெண் வாக்களிக்கும் உரிமைக் காகவும் பாலின பாகுபாட்டை எதிர்த்து அலஷ் பால், லூசி பர்ன்ஸ் மற்றும் பிறருடன் இணைந்து, பெண் வாக்குரிமை போராட்டங்களை முன்னின்று நடாத்தியவர்.

உரிமைக்கான பெண்கள் ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடியதன் வெற்றிகரமான பிரச்சாரத்தின் மூலம் அமெரிக்காவில் பிரபல்யமானார். இதன் விளைவாக ஆகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

1885 இல் நியூ ஜெர்சியில் பிறந்த அலஷ் பால், [ஜனவரி 11, 1885 – ஜூலை 9, 1977] ஒரு சிறு வயதிலிருந்தே பெண்களுக்கான வாக்குரிமை நிகழ்வுகளில் கலந்து கொண்டார். அவர் சமூகப் பணியைப் படித்தாலும், குடியேற்ற வீடுகளில் ஏழைகளுக்குச் சேவை செய்தாலும், பெண்களுக்கான உரிமைக்காக சமூகப் பணியை மேற்கொண்டார்.





உயர் கல்வியில் அவர் உயிரியல் மற்றும் சமூகவியலில் பட்டங்களை முடித்த பிறகு, பொருளாதாரம் மற்றும் சமூகவியலில் தனது படிப்பைத் தொடர 1907 இல் பிரிட்டனுக்குச் சென்றார்.

அவர் பிரிட்டனில் பெண்கள் சமூக மற்றும் அரசியல் ஒன்றியத்தில் (WSPU) சேர்ந்து, பெண்களின் சம உரிமைகளுக்காக ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சிவில் ஒத்துழையாமை ஆகியவற்றில் பங்கேற்றார். இதன் விளைவாக, அவரும் பிரிட்டனில் உள்ள மற்ற பெண் வாக்குரிமையாளர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

### பெண்வாக்குரிமைக்காக போராட்டம்:

Emmeline மற்றும் Christabel Pankhurst தலைமையில், WSPU உறுப்பினர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி சிறையில் தங்கள் கட்டாய சிகிச்சை, உணவு அருந்துதலை எதிர்த்தனர்.

உண்ணாவிரத போராட்டங்கள் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமாக மாறியது. ஏனெனில் அவை கூடுதல் தாக்கத்தை மக்களிடத்தில் ஏற்படுத்தியது. அதே காரணத்திற்காக மக்களிடம் அனுதாபத்தை பெரிதும் உருவாக்கியது. 1910 ஆம் ஆண்டில், பால் கிரேட் பிரிட்டனில் இருந்து அமெரிக்கப் பெண்களுக்கான சட்ட மற்றும் பொருளாதார சமத்துவத்திற்காக வேலை செய்யத் திரும்பினார், தேசிய அமெரிக்க பெண் வாக்குரிமைச் சங்கத்தில் (NAWSA) சேர்ந்தார். 1890 மற்றும் 1910 க்கு இடையில், மாநில வாரியான மூலோபாயம் சில மேற்கு மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தெருக் கூட்டங்கள், அணிவகுப்புகள் மற்றும் மறியல் போராட்டங்கள் உட்பட இங்கிலாந்தில் அவர் பங்கேற்றது போன்ற தேசிய அளவில் போர்க்குணமிக்க எதிர்ப்பு உத்திகளுக்கு மாற வேண்டியது என்று அலஷ் பால் நம்பினார்.

### பெண் உரிமைக்காக உண்ணாவிரதம்:

இந்த அகிம்சை நடவடிக்கைகள் அனைத்தும் பெண்களின்உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடியதன் மூலம் ஆகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

### தமிழ் நாட்டில் சுதந்திர போராட்ட முதல் பெண்மணி பத்மாசனி:

இந்திய தேசத்தின் விடுதலைக்காக மாபெரும் அர்ப்பணிப்பை அளித்த பத்மாசனி வரலாற்றில் மறக்கப்பட்ட பெண் போராளி யாவார்.

200 ஆண்டுகளுக்கு மேலாக அந்நியர்களுக்கு அடிமைப்பட்டு கிடந்த இந்திய தேசத்தின் சுதந்திரம் பல்லாயிரக்கணக்கான தியாகிகளின் தியாகத்தால் உருவானது. பத்மாசனி எனும் பெண் இந்த சுதந்திர போராட்டத்தில் தன் குழந்தைகளையே தியாகித்த ஒரு வீரத்தாயின் வரலாறு இன்று பலருக்கும் தெரியாது.

பாரதியாரின் பாடல்களை பட்டிதொட்டி எல்லாம் தமிழ் நாட்டில் பரப்பிய முதல்



பெண்ணும் இவர்தான். நாட்டின் விடுதலைக்காக சிறை சென்ற முதல் பெண்.

மதுரைக்குப் பக்கத்தில் இருக்கும் சோழவந்தானில் 1897-ல் பிறந்தவர். மதுரையைச் சேர்ந்த சீனிவாசவரதன் என்பவரை திருமணம் செய்து கொண்டவர். சீனிவாசவரதனும் மகாகவி பாரதியாரும் மிக நெருங்கிய நண்பர்கள்.

ஒருமுறை பாரதியார் ‘உன் சொத்தை விற்றேனும் பத்திரிக்கை நடத்த பணம் அனுப்பு’ என்று கடிதம் எழுதியிருந்தார். மறுநாளே தனது சொத்தை விற்று பாரதியாருக்கு பணம் அனுப்பி வைத்தவர் வரதன். அத்தனை நெருக்கம்.

பாரதியார் பாடல்களை நாம் எல்லா இடங்களிலும் இன்று கேட்கலாம். ஆனால் அன்றைக்கு அப்படியில்லை. பாடல்கள் வெறும் காகிதத்தில் மட்டுமே இருந்தன. அதை தெரு தெருவாக பாடி, பஜனைகளில் பாடி மக்கள் மத்தியில் எழுச்சி ஊட்டியவர்கள் சீனிவாசவரதனும் பத்மாசனியும்தான்.

1922-ல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதற்காக வரதன் கைது செய்யப்பட்டார். சேதி கேட்டு ஓடிவந்த பத்மாசனி தனது கணவருக்கு திலகமிட்டு மாலை அணிவித்து சிறைக்கு அனுப்பி வைத்தார்.

அதுவரை கணவருக்கு உறுதுணையாக இருந்த பத்மாசனி முழுமூச்சாக நாட்டின் விடுதலைக்காக தானும்போராட்டத்தில் குதித்தார். தமிழ்நாட்டில் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட முதல் பெண்மணி என்ற பெருமை இவரை வந்து சேர்ந்தது.

கணவர் சிறைக்கு சென்றபின் தன்னை முற்றிலுமாக மாற்றிக்கொண்டார். தினமும் மாலை நேரத்தில் பாரதியார் பாடல்களை பாடியபடியே வீடு வீடாகச் சென்று கதர் விற்று வருவார். சுதந்திரத்திற்கு எதிராக இருப்பவர்களையும், ஆங்கிலேய அரசிடம் வேலைப் பார்ப்பவர்களையும் கூட கதர் வாங்க வைத்து விடுவார். அவர் பேச்சில் அத்தனை வல்லமை இருந்தது.

பெண்களும் விடுதலைப் போரில் ஈடுபட வேண்டும் என்று இவரின் பேச்சால் பல பெண்களை சுதந்திர போராட்டத்திற்கு இழுத்து வந்தது.

1930-ல் மூன்று மாத கர்ப்பிணியாக இருந்த பத்மாசனி மதுரை ஜான்சி ராணி பூங்கா முன் பேசிய பொதுக்கூட்டத்தில், இவர் பேசியதற்காக ஆங்கிலேய அரசு பத்மாசனியை கைது செய்து ஆறு மாத சிறையில் தள்ளியது.

### பத்மாசனி சிறையில் உண்ணாவிரதம்:

சிறையில் உணவு தொடர் உண்ணாவிரதம் இருந்தார். கர்ப்பவதிக்கான ஊட்டச்சத்து உணவு இல்லாததாலும் உடல்நிலை மோசமாக இருந்ததாலும் கர்ப்பம் கலைந்தது.

சிறையில் இருந்து வெளிவந்ததும் மீண்டும் போராட்டத்தில் குதித்தார். அன்றைய கால கட்டத்தில் பொதுக் கூட்டங்களில் பத்மாசனி பேசும் போது அனல் தெறிக்கும். இவரின் பேச்சு என்றாலே அக்கம் பக்க ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் ஒன்று கூடிவிடுவார்கள். அவரது குரல் வெண்கலம் போல் கணீரென்று இருக்கும். பேச்சில் உணர்ச்சியும் வேகமும் குவிந்துக் கிடக்கும். மரகட்டைக் கூட வீறுகொண்டு எழும். தொண்டர்கள் பாதி கூட்டத்திலே ஆவேசமாக எழுந்து, இப்போதே வெள்ளையர்களை கூண்டோடு அழித்துவிடுகிறோம் என்று புறப்படுவார்கள். அத்தகைய



வீரம் அவரது பேச்சில் இருக்கும். நாட்டின் விடுதலையை தவிர வேறு எதைப்பற்றியும் சிந்தனை செய்யாத பத்மாசனிக்கு ஏற்கனவே இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து இறந்திருந்தன. தேச சேவைக்காக தன்னை அர்பணித்துக் கொண்ட அவருக்கு இரண்டு குழந்தைகளுமே ஒரு வயதை அடையும் முன்னே இறந்து போயிருந்தனர்.

## அனல்தெறிக்கும்வீரப்பேச்சு:

காவிரி நடையாத்திரையில்விடுதலையைத் தவிர எனக்கு வேறு எதுவும் பெரிதல்ல என்று கலந்து கொண்டார். வழிநெடுக சுதந்திரப் பிரச்சாரம், பாரதியார் பாடல்கள், சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிரை தந்த தியாகிகளின் வரலாறு என்று நடைப் பயணம் முழுவதும் சுதந்திர வேட்கை ஜோதி சுடர் விட்டு எரிந்தது. எட்டு மாத கர்ப்பத்துடன் 48 மைல் தூரம் நடந்தே வந்தார்.

அந்த நேரத்தில் அவருக்கு பிரசவம் ஆனது. அழகான பெண் குழந்தை பிறந்தது. கடுமையான குளிர், பாதையோரம் தங்குவதற்கு நல்ல இடம் வேறு இல்லை. பிறந்த மூன்றாவது நாளில் அந்த குழந்தையும் இறந்தது. அம்மையாரின் உடலும் மோசமாக பாதிக்கப் பட்டது. ஓய்வுக்காக உடல் கெஞ்சத் தொடங்கியது. சில நாட்கள் மட்டும் ஓய்வெடுத்தார். உடலில் கொஞ்சம் தெம்பு வந்ததும் மீண்டும் நடக்கத் தொடங்கினார். பத்மாசனியின் பேச்சு மகாத்மா காந்தியடிகளையும் கவர்ந்திருந்தது. பெல்காமில் காந்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு சிறப்பு பேச்சாளராக பத்மாசனியை காந்தி அழைத்திருந்தார்.

## இந்திய விடுதலைக்காக மூன்று குழந்தைகளை இழந்தவர்:

விடுதலைக்காகவே தனது மூன்று குழந்தைகளையும் பலிகொடுத்த இந்த தாய் இந்தியாவின் விடுதலையை பார்க்காமலே இந்த மண்ணை விட்டு மறைந்தார். தன் உடல்நிலையைப் பற்றி கவலைப் படாமல் நாட்டைப் பற்றியே சிந்தித்த இவர் கடைசியில் 14.1.1936 இந்திய சுதந்திரத்தை காணாமலேயே விண்ணுலகம் சென்றார்.

## மணிப்பூர் மக்களுக்காகப் போராடிய ஷர்மிளா இரோம்:

இந்திய சுதந்திரத்தின் பின் ஒரு பெண்14 வருடங்களாக உண்ணா விரதம் இருந்தார். அந்த உண்ணாவிரதத்தை முடித்து வைக்க அரசாங்கமே தலை கீழாக நின்று முயற்சி எடுத்து தடுக்க முற்பட்டது.

1942-ம் ஆண்டு மணிப்பூரின் இம்பால் பகுதியில் பிறந்த ஷர்மிளா இரோம் சிறுவயதிலிருந்தே சமூகச் சிந்தனையோடும், சமுதாயம் சார்ந்த கட்டுரைகளை எழுதுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தவர். 2000-ம் ஆண்டு நவம்பர் 2 அன்று மணிப்பூரின் மலோம் பகுதியில் ஒரு பேருந்து நிறுத்தத்தில் இருந்த பத்து பொதுமக்களை ராணுவ வீரர்கள் சுட்டுக் கொன்றதைப் பார்த்த மனித உரிமைப் போராளியான ஷர்மிளா இதனைக் கடுமையாக எதிர்த்தார்.


ஆயுதப்படைக்கு அளித்துள்ள சிறப்புஅதிகாரச் சட்டத்தைத் திரும்பப்பெற வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்து 14 வருடங்களாக உண்ணா விரதம் இருந்த ஒரு பெண் போராளியாக உலகின் கவனத்தை ஈர்த்தார்.

அவர் உண்ணா விரதம் இருக்கத் தொடங்கியதை அடுத்து ராணுவம் அவரை கைது செய்தது. அப்போதும் அவர் உண்ணா விரதத்தைக் கைவிடவில்லை. ஆனால், அவர் இறந்துவிடுவாரோ என்கிற பயத்தில் ராணுவம் அவரை விடுதலை செய்தது.

அதன்பிறகும் அவர் உண்ணா விரதத்தை கைவிட்ட பாடில்லை. உண்ணா விரதம் தற்கொலைக்கான முயற்சி என ஷர்மிளாவை சாப்பிட வைக்கும்படி உறவினர்களை மிரட்டியது ஆளும் அரசு. ஆனாலும் ஷர்மிளாவோ தன் கோரிக்கையைக் கைவிடவில்லை.

## 15 ஆண்டு உண்ணாவிரதம் இருந்த பெண்போராளி:

உடல் உபாதைகளினால் அவரது ஒவ்வொரு உறுப்பும் வலுவிழந்தது. அப்போது அவரது மூக்கின் வழியே திரவ உணவு மட்டும் செலுத்தப்பட்டது. 14 ஆண்டுகளாகத் தொடர்ந்த இந்த உண்ணாவிரதத்தை பார்த்த மணிப்பூர் மக்கள், 'அரசியலுக்கு வாருங்கள், உங்களுக்கு ஓட்டுப் போடுகிறோம்' என்று







அழைத்தனர். 'நான் மணிப்பூர் மக்களுக்காகப் போராடும் போராளி, அரசியல்வாதி அல்ல' என்றுகூறி மறுத்தார்.

ஷர்மிளாவின் உண்ணா விரதம் 15-ம்ஆண்டில் அரசின் தலையீட்டால் நிறுத்தப்பட்டாலும், 'என் உயிர் போனாலும் பரவாயில்லை. என்றாவது ஒரு நாள் என்பகுதி மக்களின் நிலை மாறும்' என்கிற விடாமுயற்சியில் ஷர்மிளாவின் உண்ணாவிரதம் தொடர்ந்தது. ஷர்மிளாவின் விடா முயற்சி உலகின் கண்கள் மணிப்பூர் மக்களுக்காக விழிப்படைந்தது என்பது உண்மையே.

## ஈழத்தில் அன்னை பூபதி உயிரீகத்தின் உச்சம்:

ஈழத்தில் கோரமான போர் தீவிரம் அடைந்திருந்த 1988 இல் உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தி, பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டி, அறப் போராட்டங்களை நடத்த மட்டு-அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது.

31 நாள் நோன்பிருந்த பத்துப்பிள்ளைகளின் தாயானஅன்னை பூபதி மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணியின் முக்கிய செயற்பாட்டாளர்.பூபதியம்மாவின் கணவர் பெயர் கணபதிப்பிள்ளை.

அன்னை பூபதி (நவம்பர் 3, 1932 - ஏப்ரல் 19, 1988), மட்டக்களப்பில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக சாகும் வரை உண்ணா நிலையிருந்து உயிர் நீத்தவர்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டு-அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர். உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.




போரிடும் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும். இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையின் பின்னர் அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப் படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை.

ஆனால், தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணாநோன்புப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில், 1988ம் ஆண்டு ஜனவரி 4 ம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப் படவில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது.

1988 ம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் தேதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை முறியவே, சாகும் வரை உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

## அன்னையர் முன்னணி போராட்டம்:

அப்போது பலர் சாகும் வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில் குதிப்பதற்காக முன்வந்தனர். இறுதியில் குலுக்கல் முறையில் தேர்வு இடம் பெற்றது. முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார்.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் அன்னம்மாவின் உண்ணா நோன்புப் போராட்டம் தொடங்கியது. ஆனால் படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றதால் அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

## அன்னை பூபதி போராட்டம் :

இந்த நிலையில் தான் பூபதியம்மாள் தன் போராட்டத்தை மார்ச் 19 1988 இல் தொடங்கினார். முன்னெச்சரிக்கையாக 'சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது' எனக் கடிதம் எழுதி வைத்தார்.


பத்துப் பிள்ளைகளுக்கு, தாயார் இவர். நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணா நோன்பு இருந்தார்.இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணா விரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை.

அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று உயிர் நீத்தார்.

அன்னை பூபதியின் நினைவுநாள் ஈழத்தில் நாட்டுப்பற்றாளர் நாளாக என்றும் நினைவு கூறப்படுகிறது. உலகளாவிய ரீதியில் பெண்கள் அடக்குமுறைகளை எதிர்க்க உண்ணாவிரதப் போராட்டத்தை ஓர் எழுச்சி வடிவமாகவே கருதி போராடி இருக்கின்றனர். உயிரீகத்தின் உச்சம் தொட்ட அன்னை பூபதியம்மா ஈழ மண்ணில் தன் உயிர்க் கொடையால் தியாகத் தாயாக என்றும் விளங்குகின்றார்.



# நான் வீழேன்...!



மாலினி (கொட்டகலை)

வேர்விட்டு கொண்டுதான்
இருக்கிறது
என் நம்பிக்கைகள்...
என் வெற்றிகளை
வெட்டிவிட்ட
ஓர் கூட்டம் எனை சுற்றி
வரும் போதெல்லாம்...
தொடர் மழையில்
தொலைந்தது என்
உடல் வெப்பம்...

அங்கும் மூச்சின்
உஷ்ணத்தை முகர்ந்து
கொள்ள முயற்சித்தேன்..
அடை மழையில்
நனைந்தது என் ஆடை
என் நிழலை உடையாக்கி
உடனே உடுத்திக்கொண்டேன்...

சில பருந்துகளின் பார்வையும்
கழுகுகளின் கூர்மையும்
எனை பொசுக்கி விட
மீண்டும் எழுகிறேன்..
என் சங்கமம் கடலில்
தான் என்பதால்...

ஊசிகொண்டு துளையிட்டு
எனை உராய்வித்த போதெல்லாம்
நூல் கொண்டு
தைத்து கொண்டேன்
என் கிழிசல்களை...
இதயத்தில் தூர்விட்ட
துளைகளையும் சேர்த்து...


விமர்சனங்களும்
எதிரொலிகளும் எனை
துரத்தி வருவதால்
தினமும் நிரூபிக்க
வேண்டியதாயிற்று...
நான் இன்னும் சாகவில்லை
என்பதை...

தடை கற்கள் வீச்சில்
அதன் துகள்கள் மிதித்து
இரத்தம் வழியவே
தொடர்ந்து முன் நடந்தேன்..
வலித்த கால்களுக்கு
இதயம் சொன்ன ஒரே ஆறுதல்
இதுவும் கடந்து போகும்....!
ஆம் நான் பீனீக்ஸ் பறவை தான்
பாலைவன வெயிலிலும்
பாறைகளின் இடுக்கிலும்
பசுந்தோல் போர்த்திய
புலிகளிடமும்
முட்டி மோதி (பி)பறக்கிறேனே..





# தமிழின அழிப்பிற்கு எதிராக

## தமிழினம் ஒன்றிணைவதே காலத்தின் தேவை



வடக்கு – கிழக்கில் சிங்கள – பௌத்த மயமாக்கல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், தமிழர் மீது 40 வருடங்களுக்கு மேலாகத் தலைவிரித்தாடிய கொடிய பயங்கர வாதச் தடைச் சட்டம் புதுப்பிக்கப்படுவதும் உடன் நிறுத்தப்பட வேண்டும். 1979ம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவினால் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்பு சட்டத்திற்கு பதிலாக, தற்போதைய அரசாங்கத்தினால் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்பு சட்டத்தினால் பெரும்பாலும் தமிழர்களே பாதிக்கப்பட்டிருந்தார்கள். பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தமிழ் இனத்திற்கு பாதகமான மற்றும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் கருத்திற் கொள்ள வேண்டும். இந்நிலையில் இன்றைய தினம் வட, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் இனத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கும் சிங்கள பேரினவாத அரசின் திட்டமிட்ட, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நீர்த்துப் போக வைக்கும் வகையில் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணி அபகரிப்பு, சிங்கள குடியேற்றங்களின் மூலம் குடிப்பரம்பலை சிதைத்தல், தமிழ் மக்களின் தொன்மையை வெளிப்படுத்தும் அடையாளங்களை அழித்தொழித்தல், அதாவது தமிழ் மக்களின் அடையாளங்களாக காணப்படும் இந்து ஆலயங்களை இடித்தும், அழித்தும், சிங்கள பௌத்த சின்னங்களை நிறுவி இந்நாட்டின் பூர்வீக குடிகளான தமிழ் மக்களின் வரலாற்றை சிதைக்கும் பேரினவாத அரசாங்கத்தின் மிலேச்சத்தனமான செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஹர்த்தால் நடவடிக்கை ஏற்பாடு செய்யப்பட்டது.



புனிதப்ரியா
பன்னீர்செல்வம்

அரசியல் கட்சிகள், மத அமைப்புக்கள்,




தொழிற்சங்கங்கள், பொது கட்டமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மாணவர்கள் மற்றும் தமிழ் தேசியப் பற்றாளர்கள் என அனைத்து மக்களும் ஒன்றிணைந்து 25.04.2023 செவ்வாய்க் கிழமை முன்னெடுத்த ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை நாம் அனைவரும் அறிந்த விடயமே.

இலங்கையில் தற்போது அமலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும், அரசாங்கத்தினால் தற்போது முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமானது ஆயிரம் மடங்கு ஆபத்தான சட்டம் தான் இந்த சட்டம். அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், போராடுவதற்கான சுதந்திரம், ஊடக சுதந்திரம் உள்ளிட்ட சுதந்திரங்களை இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் முடக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியும். எனவே தான் நம் தமிழ் சமுதாயம் இந்த பயங்கரவாத தடை சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யுத்தநிறுத்தத்தின் பின்னர் இந்த நாட்டில் தமிழ் மக்கள் மீது பல்வேறு வகையிலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிங்கள பேரினவாத அரசு தமிழ் மக்களை அடக்கி அடிமைப்படுத்தும் நோக்கில் தமிழ் இனத்தின் மீது தனது அடக்குமுறைகளை காட்டி வருகின்றது. பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் நடைமுறைக்கு வருமானால் முள்ளைப் பிடுங்கிவிட்டு ஆப்படித்த நிலைமையே தமிழ் இனத்திற்கு ஏற்படும். இந்தச் சட்டம் மிக மோசமான சட்டம்,மனித உரிமைகளை



**பயங்கரவாத எதிப்புச்சட்ட மூலம் என்ற சிங்களப் பேரினவாத அரசின் திட்டத்தை தோற்கடிப்பதுடன், தமிழர்களின் மரபுவழித்தாயகமான வடக்கு, கிழக்கில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையையும் சிதைக்கும் நோக்குடன் தமிழர்களின் தொன்மையான வழிபாட்டுத் தலங்கள் மீது திட்டமிட்டு நடைபெறும் சிதைப்புகள், தாக்குதல் களை தடுத்து நிறுத்த வேண்டும். தமிழர்களின் விடுதலைக்காக ஏனைய தமிழ் தேசிய சக்திகளும் இணைந்து தமிழ் இனத்தின் விடுதலையை உறுதி செய்ய வேண்டும். போராடித் தான் நம் உரிமையை மீட்க வேண்டுமெனில் தயக்கம் ஏதுமின்றி தமிழர் தாயகத்தை மீட்க வேண்டும். வெவ்வேறு வடிவங்களில் வீரியம் பெற்றுள்ள தமிழின அழிப்புக்களிற்கு எதிராக ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்றிணைந்து எதிர்ப்பதே காலத்தின் கட்டாய தேவையாகும்.**




மீறக்கூடிய சட்டம். பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஊடாக தமிழ் மக்கள் படுமோசமாக பாதிக்கப்பட்டவர்கள். அதனைவிட மோசமான சட்டம் வருகின்றபோது வெள்ளம் வருவதற்கு முன்பாக அணைகோல்வது போல இந்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என பல அமைப்புக்களும் தெரிவித்து வருகின்றன.

பயங்கரவாத எதிப்புச்சட்ட மூலம் என்ற சிங்களப் பேரினவாத அரசின் திட்டத்தை தோற்கடிப்பதுடன், தமிழர்களின் மரபுவழித்தாயகமான வடக்கு, கிழக்கில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையையும் சிதைக்கும் நோக்குடன் தமிழர்களின் தொன்மையான வழிபாட்டுத் தலங்கள் மீது திட்டமிட்டு நடைபெறும் சிதைப்புகள், தாக்குதல்களை தடுத்து நிறுத்த வேண்டும்.

தமிழர்களின் விடுதலைக்காக ஏனைய தமிழ் தேசிய சக்திகளும் இணைந்து தமிழ் இனத்தின் விடுதலையை உறுதி செய்ய வேண்டும். போராடி தான் நம் உரிமையை மீட்க வேண்டுமெனில் தயக்கம் ஏதுமின்றி தமிழர் தாயகத்தை மீட்க வேண்டும். வெவ்வேறு வடிவங்களில் வீரியம் பெற்றுள்ள தமிழின அழிப்புக்களிற்கு எதிராக ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்றிணைந்து எதிர்ப்பதே காலத்தின் கட்டாய தேவையாகும்.

# ஊடகர் லசந்த விக்ரமதுங்கவின் "Unbowed and Unafraid" வரலாற்று நூல் வெளியீடு




ஈழப்போர் உச்சமடைந்திருந்த 2009 இல் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை சில மாதங்களாக மௌனமாகியது. சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள்.

### Unbowed and Unafraid வாழ்க்கைவரலாற்று நூல் :

படுகொலை செய்யப்பட்ட ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் வாழ்க்கை வரலாறு

## என் மரணத்தின் பாதையை நான் அறிவேன்! என் மறைவு சுதந்திரத்தை வீழ்த்தாது!!

"Unbowed and Unafraid' என்ற ஆங்கில நூல் 27/3/23 அன்று கொழும்பில் வெளியிடப்பட்டது. இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியதாக கூறப்படும் சில பொய்யான வாக்குறுதிகளையும் இந்நூல் அம்பலப்படுத்தி உள்ளது.

2015 தேர்தலுக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் லசந்த விக்ரமதுங்கவின் குடும்பத்தாருக்கு கொலையில் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்ததாக கூறப்படுகிறது.

விக்கிரமசிங்கவிற்கும் லசந்த விக்கிரமதுங்கவிற்கும் இடையில் இடம்பெற்ற சில கலந்துரையாடல்களையும், அப்போதைய பிரதமர் வழங்கிய உறுதிமொழிகளையும் இந்நூல் வெளிப்படுத்துகிறது.

அவரது முன்னாள் மனைவி ரெய்ன் விக்கிரமதுங்கவால் எழுதப்பட்ட இந்நூல், 2009 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட தி சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் சகாக்கள், ஊடகவியலாளர்கள், நண்பர்கள் மற்றும் முன்னாள் சகாக்கள் ஆகியோரின் முன்னிலையில் இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் வெளியிடப்பட்டது.

### மனைவி எழுதிய நூல் ;

வரவேற்பு உரையை லசந்த விக்ரமதுங்கவின் புதல்வியும், ஊடகவியலாளருமான ரைசா விக்கிரமதுங்கவும், அதனைத்

ஐங்கரன் விக்னேஸ்வரா



தொடர்ந்து பீட்டர் டி அல்மெய்டாவின் பிரதான உரையும், கலாநிதி காயத்திரி பெர்னாண்டோவின் விமர்சனமும் இடம்பெற்றன. முதல் பிரதியை நூலாசிரியர் திருமதி சந்தியா எக்னலிகொடவிடம் வழங்கினார்.

'லசந்த உண்மையின் நாட்டத்தில் வாழ்ந்து, சுவாசித்து, இறுதியாக இறந்தார். லசந்த ஆழ்ந்த அன்பு கொண்ட இலங்கை மக்களுக்கு இந்நூலை வழங்குவதில் நான் பெருமையடைகிறேன்' என நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் பேசிய ரெய்ன் கூறினார்.

2009 ஜனவரியில் கொழும்பு வீதியில் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட பின்னர், தி சண்டே லீடர் நாளிதழில் வெளியிடப்பட்ட அவரது மரணத்திற்குப் பின் வெளியான தலையங்கம் 'அதன் பிறகு அவர்கள் எனக்காக வந்தார்கள்' என்ற தலைப்பில் இலங்கையர்கள் மட்டுமல்லாது உலகம் முழுவதும் எதிரொலித்தது.

'எனது கொலை சுதந்திரத்தின் தோல்வியாக கருதப்படாது, ஆனால் உயிர் பிழைப்பவர்களுக்கு அவர்களின் முயற்சிகளை முடுக்கிவிட ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். உண்மையில், இது நமது அன்புக்குரிய தாய்நாட்டில் மனித சுதந்திரத்தின் புதிய சகாப்தத்தை உருவாக்கும் சக்திகளை ஊக்கப்படுத்த உதவும் என்று நான் நம்புகிறேன்.'

இந்நூல் மறைந்த ஊடகர் விக்கிரமதுங்கவின் வாழ்க்கை மற்றும் வேலையைப் பற்றிய ஒரு உள் பார்வையை வழங்குகிறது. இலங்கையின் முன்னேற்றத்திற்கான தனது தைரியம் மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக ஒரு தேசத்தின் கூட்டு இதயங்களை வென்ற ஒரு மனிதனின் வாழ்க்கையின் தனிப்பட்ட, உத்வேகமான பதிவு இது.

இந்த புத்தகம் விக்கிரமதுங்கவின் ஆரம்பகால வாழ்க்கை, பத்திரிகைத்துறையில் அவர் மேற்கொண்ட பயணம், ஆசிரியர் மற்றும் அவர்களது மூன்று குழந்தைகளுடனான அவரது குடும்ப வாழ்க்கை மற்றும் அவரது அரசியல் பணி ஆகியவற்றையும் தெளிவாக விவரிக்கிறது.

புத்தகம் முக்கியமாக ஒரு பத்திரிகையாளராக அவரது குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் மோதல்கள், குறிப்பாக தி சண்டே லீடரின் ஆசிரியராக, அவரது துயரமான படுகொலை மற்றும் அதன் பின்னர் நடந்த கொலை விசாரணையில் கவனம் செலுத்துகிறது. கனதியான இந்நூல் 400+ பக்கங்களில் 25 பக்க வண்ணப் புகைப்படங்களுடன் வெளியாகி உள்ளது.

**தமிழ் ஊடகம் மீதான அடக்குமுறை :**

சிங்கள ஊடகவியலாளர்கள் அடக்கப்படுவதிலும் மேலாக, ஈழத்தில் தமிழ் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. 1981இல் ஈழநாடு எரிப்புமுதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி,



ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

**சிங்கள ஊடகவியலாளர் கொலை:**

இலங்கையில் சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறிலங்காவில் 1990ம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு றிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம் தமிழ் நெற் இணையத்தினுடய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. இதன்பின் தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத்தகவல்களை வெளிக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

**14 வருடமாகும்**
**லசந்த விக்ரமதுங்கபடுகொலை :**

லசந்த விக்கிரமதுங்க இலங்கை அரசுக்கெதிராகவும் பல அரசியல்வாதிகள் தொடர்பாகவும் ஆயுதக் குழுக்கள் தொடர்பாகவும் மிக நீண்டகாலமாக மிகக் கடுமையான கட்டுரைகளை சண்டே லீடர், மோர்னிங் லீடர் மற்றும் ஞாயிறு சிங்களப் பத்திரிகையான இருதின என்பன வெளியிட்டு வந்ததால் இவர் பல ஆண்டுகளாக்க தொடர்ந்து கடுமையான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வந்திருந்தார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 14 வருடங்கள் ஆகின்றன. 2009ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி, சண்டே லீடர் பத்திரிகையின்



பிரதம ஆசிரியர், சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவின்படி, லசந்த விக்ரமதுங்கவின் சடலம் மீணடும் தோண்டி எடுக்கப்பட்டு, மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் இதுவரை முழுமையான தீர்ப்பு வரவில்லை.

மிகவும் இளவயதிலேயே சன் பத்திரிகையில் ஒரு செய்தியாளராகச் சேர்ந்து தனது ஊடகத்துறை வாழ்வை ஆரம்பித்த லசந்த 1982 ஆம் ஆண்டில் தி ஐலண்ட் பத்திரிகையில் இணைந்தார்.

அதே நேரம் அரசியலிலும் தன்னை இணைத்துக் கொண்டார். 1989 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு வடக்குத் தொகுதியில் போட்டியிட்டார். ஆனாலும் அவர் தெரிவு செய்யப்படவில்லை. 1994 ஆம் ஆண்டில் சண்டே லீடர் பத்திரிகையை ஆரம்பித்தார்.

## லசந்த மீதான கொலை முயற்சிகள் :

லசந்தவைக் கொலை செய்வதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 1995 பெப்ரவரியில் லசந்த அவரது வாகனத்திற்குள் வைத்துத் தாக்கப்பட்டார். 1998 ஜூனில் அவரது வீட்டின் மீது கிரனேட் வீசப்பட்டது. 2005 அக்டோபரிலும் 2007 நவம்பரிலும் சண்டே லீடர் அச்சகத்திற்கு தீவைத்து நிர்மூலஞ் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2009, ஜனவரி 8 வியாழக்கிழமை காலை 09:30 மணியளவில் கொழும்பு கல்கிசையில் உள்ள 'லீடர் பப்ளிகேஷன்' அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். தலையிலும் மார்பிலும் குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் இவர் உடனடியாக களுபோவில மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைக்குஉட்பட்டாலும், பிற்பகல் 1.45 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## லசந்த படுகொலையை கண்டித்த சர்வதேசம்:

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதனை கண்டித்து கொழும்பில் 2009 சனவரி 9 ஆம் நாளில் பெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி, உலக சமாதான சபை அத்தனையும் அவருக்காகக் அறிக்கைகள் வெளியிட்டன.

படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கு ஐநாவின் கல்வி மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ 2009 ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை சுதந்திர விருதை வழங்கியுள்ளது. இவ்விருது 2009, மே 3 ஆம் நாளன்று உலக பத்திரிகை சுதந்திர தினத்தில் கட்டார் நாட்டில் வழங்கப்பட்டது.

## இறுதி ஆசிரிய தலையங்கம் :

ஜனவரி 11-ம் தேதி வெளியாக வேண்டிய 'சண்டே லீடர் பத்திரிகைக்கு, மரணத்தின் பாதையை நான் அறிவேன் என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தை ஜனவரி 7-ம் தேதியே லசந்த எழுதுவிட்டார். இந்த தலையங்கம் அவர் இறந்த பின் பிரசுரமானது. லசந்த விக்கிரமதுங்க எழுதிய தலையங்கத்திலிருந்து சில பகுதிகள். என் மரணத்தின் பாதையை நான் அறிவேன். நீ போலியான சத்தத்தை எழுப்பிக்கொண்டு, போலீஸை அழைத்து வேகமாக விசாரணை மேற்கொள்வாய். கடந்த காலங்களில் நீ உத்தரவிட்ட விசாரணைகளைப் போலவே, இப்போதும் நடக்கும். ஆனால், ஒன்றும் வெளியில் வராது. நம் இருவருக்கும் தெரியும், என் மரணத்துக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று. ஆனால், துணிந்து அவர் பெயரைச் சொல்ல முடியாது உன்னால். என் வாழ்க்கையில் மட்டுமல்ல, உன்னைப் பொறுத்து இதுதான் உனக்கும். உன் காலத்தில்தான் என் மரணம் நடந்தது என்பதை எந்த நேரத்திலும் உன்னால் மறக்க முடியாது!



என் மறைவு, சுதந்திரத்தை வீழ்த்தாது. இதற்காகப் போராடுபவர்கள் தொடர்ந்து பணியாற்ற ஊக்கமாக அமையும். நமது தாய்நாட்டின் மனித சுதந்திரத்துக்கு ஒரு தொடக்கமாக அமையும். தேசப்பற்று என்ற பெயரால் பலர் தங்களது உயிரைத் துறக்கும் உண்மையை தெரிந்துகொள்ள இது உதவும். மனிதநேயம் வளம் பெறும்.'

லசந்த கொலை செய்யப்பட்டு பதினான்கு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன.

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி அத்திடிய பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.

இதேவேளை, மிக் இராணுவ விமானக் கொள்வனவின் போது இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் நாட்டுக்கு உண்மைகளை வெளிக் கொணர்ந்த காரணத்தினால் லசந்த படுகொலை செய்யப்பட்டதாக முன்னாள் சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரட்ன குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்:

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் 'கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்' என்ற அமைப்பு இலங்கையில் 1992ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2022ஆம் ஆண்டு காலம் வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 39க்கும் அதிகம் என்பதே உண்மையாகும். வட கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39 க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.



# யாழ். பனை வளம் பற்றி

யாழ்ப்பாண மண்ணின் அளப்பெரும் சொத்துக்களாகவும், தனிச் சிறப்பு அம்சமாகவும் திகழ்பவையே பனைமரங்கள் ஆகும். கூடுதலாக வடபகுதியின் தீவகப் பகுதியில் அதிகளவு பனைவளங்கள் காணப்படுகின்றது. ஆகவே தான் 'நாற்புறமும் பனை சூழும் யாழ்ப்பாணம்' என்று சின்னத்தம்பிப் புலவரால் சித்தரிக்கப்படுகின்றது. அள்ள அள்ளக் குறையாத வளங்களையும், ஒப்பில்லாத நன்மைகளையும் மனிதர்களுக்கு அளிப்பதாலேதான் பனைமரங்கள் 'பூலோக கற்பக விருட்சம்' என்று அழைக்கப்படுகிறது. அந்த அளவிற்கு பனை மரம் தரும் வளங்கள் எல்லையில்லாதவை. அடி தொடக்கம் முடிவரை பனையின் வளங்கள் சிறப்பு மிக்கவை. பனையின் ஓலை தொடக்கம் வேர் வரை பயன்மிக்கது.

தற்காலத்தில் குறைந்தளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாகவுள்ள போதிலும் ஆரம்ப காலத்தில் அதாவது பண்டைய காலங்களில் வீட்டின் கூரை வேய்வதற்கு பனையின் ஓலைகளே பயன்பட்டன. வெயில் காலத்தில் குளிர்ச்சியையும், மழை காலங்களில் சூட்டையும் வழங்கி மனிதர்களைக் காப்பாற்றின. எனினும் கல் வீடுகளின் ஆதிக்கம் அதிகரித்து விட்ட இக்காலத்தில் கூட பனையின் பங்கு இன்றியமையாதது. ஓட்டினாலான வீட்டுக் கூரை அமைப்பதற்கு பனை மரத்தின் தண்டாகிய கிராய் மரங்களே அதிகம் இன்றுவரை பயன்படுத்தப்படுகின்றது. தற்காலத்தில் பனை ஓலையைக் கொண்டு பாய்கள் பின்னப்பட்டு, மற்றும் அழகுசாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, வடிவமைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. அத்தோடு விற்பனைக் கூடங்களை அமைத்து நாட்டின் உற்பத்திகள் ஏற்றுமதி பொருட்களாகவும் வெளிநாடுகளுக்கு விநியோகிக்கப்படுவதன் மூலம் நம் நாட்டின் அபிவிருத்தியிலும் பனைசார் உற்பத்திகள் பங்கு வகிக்கின்றன.

அதுமட்டுமின்றி பனை மரத்திலிருந்து கள்ளு, பதநீர், கருப்பட்டி, கருவெல்லம், நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு போன்ற உணவுப் பொருட்களும் கிடைக்கப்பெறுகின்றன. இதுபோன்ற அளவிடமுடியாத பயன்களையும் வளங்களையும் கொண்டிருப்ப





தால்தான் பனைமரங்கள் ‘பூலோகக் கற்பக விருட்சம்’ என்று சிறப்பித்துக் கூறப்பட்டன. பனைமரம் தனது வானளாவி ஓங்கிய உயரத்தைப் போலவே தனது பயனிலும் உயர்ந்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. நம் முன்னோர்களின் வாழ்வில் இப் பனைமரங்கள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. ஆகையால் தான் நம் முன்னோர்கள் அதிக ஆயுளுடன் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்ந்துள்ளனர்.

பனைமரத்தின் ஓலை வேலி அமைப்பதற்கும் மிகவும் ஏற்றது. பனை மரத்தின் வேராகிய கிழங்கும் மிகவும் சிறந்தது. பனைமரங்கள் காக்கப்பட வேண்டிய அளவு அளப்பெரும் சொத்துக்களாகும். பனைமரத்திலிருந்து கிடைக்கப்பெறுகின்ற ‘நுங்கு’கோடை காலங்களில் ஏற்படும் உடல் உஷ்ணமாதல், உடல் வறட்சி, நாவறட்சி போன்றவற்றை நீக்கி உடலைப் புத்துணர்வுள்ளதாகவும், உடலை உற்சாகமுள்ளதாகவும் மாற்றவல்லது.

பனைமரத்திலிருந்து கிடைக்கப்பெறும் பனைவெல்லம், கருப்பட்டி என்பன சீனியை விடவும் சிறப்பு வாய்ந்தவை. இவை இனிப்புள்ள பதார்த்தமாகவுள்ள உள்ளபோதிலும் மருத்துவ குணம் வாய்ந்தவை ஆகும். மகப்பேற்றுத் தாய்மார்கள், சர்க்கரைநோய், கொலஸ்ட்ரேல் போன்ற பல்வகை நோய்களால் அவதியுறுவோருக்கு இப்பனை வெல்லமானது அருமருந்தாகப் பயன்படும். பனையிலிருந்து கிடைக்கப்பெறும் பனங்கள்ளு உடலுக்கு புத்துணர்வும் அளித்து உடலைக் குளிர்விக்க வல்லது.

பனம் பழத்தைப் பிழிந்து பாகு எடுத்துச் செய்யப்படுகின்ற ‘பனங்காய் பணியாரம்’ தின்னத் தின்னத் தெவிட்டாத தேன் சுவை மிக்கதாகும். இதனை விருப்பியுண்ணாத மக்களே இல்லை எனலாம். நம் நாட்டில் மட்டுமின்றி தமிழர் வாழும் புலம்பெயர் தேசங்களிலும் இப் பனங்காய் பணியாரம் விரும்பி உண்ணப்படுகின்றன. பனம்பழத்தின் பாகிலிருந்து தயாரிக்கப்படுகின்ற பனங்காய்ப் பனாட்டும் சிறப்பு வாய்ந்ததும், சுவை மிக்கதும், நீண்ட நாள் பாவனைக்கு உகந்ததுமாகும்.

பனம்பழத்தின் சுவைக்கும், அதன் தன்மைக்கும் ஏற்பவே பனம் பழமானது ‘தேம் படு பனை’ என்று பண்டைய இலக்கியங்களிலே சிறப்பிக்கப்படுகின்றன. இத்தகைய சிறப்புகளையும் ஒப்பற்ற நன்மைகளையும் தரக்கூடிய இப் பனைமரங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவையே ஆகும். பனைமரத்தின் பயன்பாடுகள் அளப்பரியவை. பனை மரங்கள் நம் மண்ணுக்குரிய சிறப்பு மிக்கவை. அவற்றை நாம் அழியாமல் பாதுகாத்துப் பயனடைவோம்.





# சரித்திரம்

*சரித்திரம்*
*என்பது என்ன?*
*சாதனை*
*படைத்தவர்களின்*
*வரலாறா?*

*என் தமிழீழ தேசமே!!*
*ஒரு சரித்திரத்தின்*
*வரலாறு*
*மாவீரர்களின்*
*குருதியிலும்*
*தமிழ் மக்களின்*
*இரத்தத்திலும்*
*எழுதி வைத்த*
*இரத்த சரித்திரம்!!*

*வலிகள் சுமந்து சுமந்து,*
*மரத்த இதயங்களுடன்*
*மண்ணில் விழுந்த*
*தமிழர்களின் வாழ்வே*
*இரத்த சரித்திரம்!!*

*கணவனை இழந்த*
*கைம்பெண்ணாக,*
*பெற்றவரை இழந்த*
*பிள்ளைகளாக,*
*கொத்துக் கொத்தாய்*
*வந்த குண்டுகளின்*
*குருதியில் குளித்த*
*இரத்த சரித்திரம் இது!!*

*அந்நிய நாட்டில்*
*அகதியாக.,*
*இழந்தவர்களின்*
*நினைவில்*
*நிம்மதியற்று.,*
*நிலைகுலைந்து,*
*இயந்திர வாழ்க்கை*
*வாழும்*
*சரித்திரம் தன்னில்..*

*கோவிட்-19 என்ற*
*கொடிய வைரசால்*
*மீண்டும் தனிமையில்.!!*


*வாழ்க்கை*
*வட்டம் போல*
*மீண்டும் மீண்டும்*
*நினைவுகள்*
*நிழற்படமாக*
*சரித்திரமாக.!*
*போராடி வாழ்ந்த*
*தமிழீழ மக்களின்*
*இரத்த சரித்திரத்தின்*
*ஒரு சிறு துளியாக*
*நானும்!*
*காலங்களின்*
*காத்திருப்பில்!!*

**கலை**



# விதவை – கைம்பெண், தமிழச்சி – சிங்களத்தி = வித்தியாசம் (பொட்டு)






ஈழத்துத் தமிழ் நவீன இலக்கியப் பரப்பில் தங்களது நெடிய பார்வையை வைத்திருப்பவர்களுக்குத் தெரிந்த வெளிப்படையான உண்மை யாதெனில், ஈழத்து எழுத்தாளர்களும், புலம் பெயர் புலமையாளர்களும் தங்களது கடிவாளம் பூட்டிய பேனாவினை சாதியப்புலத்திற்குப் பின்னரும், போர்ச்சூழலின் முன்னரும், பின்னருமாகவே ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதாகும்.

நீண்ட குடிமுறை, சாதிய வரலாற்றைக் கொண்ட ஈழத்தமிழர்கள் முப்பது வருடகாலமாக யுத்தச் சூழலில் வாழ்ந்ததில் அவர்களுக்குள் இருந்த காதல், வீரம், கருணை, காமம் எதுவொன்றாக இருந்தாலும் அது சாதிய இலக்கியமாகவோ, அல்லது போர் இலக்கியமாகவோதான் பொத்துக் கொண்டு வருகிறது. இதைத் தவறென்றும் கூறிவிட முடியாது.

'இலக்கியம் காலத்தின் கண்ணாடி' என்ற வசனம் உண்மையென்றால் தமிழர்கள் யுத்தம் தாண்டி வந்த சூழலையும், சாதியை மிதித்தேறிக் கடக்க முடியாதிருக்கும் கடுமையினையும் தங்களது படைப்புக்களில் பதியம் வைப்பதில் தவறொன்றுமில்லை. அப்படி வருகிற கவிதை, உரைநடைப் படைப்புக்களுக்கே மவுசு அதிகம் என்பதாலும், தமிழ் நாட்டுச் சந்தையில் தாறுமாறாக விற்றுத்தள்ளுவதாலும் அவர்கள் அதனையே மீண்டும் மீண்டும் மாற்றி எழுதி குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் இப்படியே எழுதிக் கொண்டிருக்கிற நேரத்தில், எப்படித் தமிழ் சினிமா மசாலாப் படங்களின் மாயை வலையில் வீழ்ந்திருப்பதை பிடிக்காத தமிழ் ரசிகர்கள் மலையாள, பிரெஞ்சு, துருக்கிய படங்களை பார்க்கத் தொடங்கிவிட்டார்களோ அப்படித்தான் இலக்கிய வாசகர்களும் ரஷ்ய நாவல் வரிசையில் தொடங்கி மொழிபெயர்ப்பு இலக்கியங்களுக்குள் குதித்துவிட்டார்கள். இப்போது டால்ஸ்டாய், காஃப்கா, ட்ரோவ்ஸ்கி, ஹருகி முரகாமி, சார்லஸ் புக்கோவ்ஸ்கி என்று அவர்களின் வாசிப்பு நீண்டு கொண்டிருக்கிறது.

இப்படியான ஒரு வாசக அனுபவத்தை முன்னிறுத்தியே இப்போது இந்த இலக்கிய விமர்சனத்திற்குள் உங்களை அழைத்துச் செல்கிறேன். நான் ரஷ்யா வரை செல்லவில்லை. நாம் சொல்கிற போர்க்கதைகளை விடுத்து எளிய சாமான்ய மக்களிடமும் இந்த பயங்கரவாதச் சூழல் மாற்றங்களைப் புகுத்தியிருக்கிறது என்று கூறுகின்ற சகோதர மொழி பெண் எழுத்தாளர் தக்ஷிலா சுவர்ணமாலியின் ஒரு சிறுகதைக்குள்ளே உங்களை வரவேற்கிறேன்.

சிங்கள எழுத்துலகில் காத்யான அமரசிங்ஹ, இசுரு சாமர ஷோமவீர, சந்தினி ப்ரார்த்தனா,சுநேத்ரா ராஜ கருணாநாயக்க, மனுஷா பிரபாஷினி திசாநாயக்க போன்றோரது மொழிபெயர்ப்புக்கதைகள் தமிழ் வாசகர் பரப்புக்குள் முக்கிய இடம் பிடித்துள்ளன. 2020–2021 அரச இலக்கிய விருதுகளின் சிறந்த மொழிபெயர்ப்பு சிறுகதை நூலுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற அயல் பெண்களின் கதைகள் நூலில் இருக்கும் 'பொட்டு' எனும் கதையை தொட்டுச் செல்வோம்.




நீலாவணை இந்திரா
(விஞ்ஞான பீடம்,
கொழும்புப்
பல்கலைக்கழகம்)

குறித்த தொகுப்பிலும், தக்ஷிலா சுவர்ணமாலியின் 'அந்திம காலத்தின் இறுதி நேசம்' எனும் மொழிபெயர்ப்புத் தொகுப்பிலும் இடம்பெற்றுள்ள குறித்த கதையானது, எம். ரிஷான் ஷெரீப் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வழக்கமான இலக்கிய விமர்சனத்திற்கு அப்பால் நின்று கதையை அணுகும் போது....இந்த ஜீவிதம் வாழ்தலைக் குறிக்கிறது,

எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டுமென்பதைக் குறிக்கிறது. சிறுமழையிலும் மூழ்கிவிடக் கூடும் என்று இருக்கிற வீட்டின் வெளிப்புற அறையினை வாடகைக்குக் கொடுப்பதில் தான் தனக்காக மாத வருமானம் அடங்கியுள்ளது எனும் நிலையில் வாழுகின்ற ஸந்தா எனும் கைம்பெண்ணின் நிலையை எந்தவொரு பட்டாம்பூச்சி விளைவுகளும் (butterfly effects) ஏற்படுத்திவிடவில்லை. பயங்கரவாதமே ஏற்படுத்தியது.

தோடம்பழப்பெட்டியை தலையில் சுமந்தவாறு அன்றைய வருமானத்திற்காக புறக்கோட்டையில் அலைந்து கொண்டிருந்த அவளது கணவனை குண்டொன்று தின்று செரித்திருந்தது. தமிழர்கள் பரப்பிலேயே போரின் வடுக்களை காண்கிற நாங்கள் சாமான்ய சிங்கள மக்களிடமும் அவ்வடு இருக்கின்றது என்பதை உணர்வதேயில்லை. இதுவும் ஒரு போரிலக்கியம் தானே என்றால் ஆம் என்பேன். இருந்தாலும் இப்படியொரு கோணத்தை நாம் திறனாய்வு செய்ததே இல்லை. இருந்தாலும் இக்கதை வேறொன்றைச் சொல்லிச் செல்கிறது.

இந்த ஸந்தாவின் வீட்டில் தற்போது அறை காலியாகவுள்ளது. ஹொரவப்பொத்தானையைச் சேர்ந்த பெண் ஒருத்தி அந்த அறையை வாடகைக்கு காலி செய்த பிறகு



ஸந்தாவின் மாத வருமானத்தில் துண்டு விழுந்தது. எப்போதும் அவளுக்கு துணையாக இருக்கும் அயலட்டையைச் சேர்ந்த மார்க்கிரட் சகோதரிதான் ரகுநாதன் என்ற தமிழரை இப்போது அழைத்து வருகிறாள்.

முன்கதை கூறல் (flashback ) எனும் பின்நவீனத்துவ இலக்கிய உத்தியில் நகரும் கதை, புதிதாக அறைக்கு வந்திருக்கும் ரகுநாதன் என்பவரை ஏற்கனவே அறையில் இருந்த ஹொரவப்பொத்தான சகோதரியோடு ஒப்பிட்டு நிகழ்கால, இறந்தகால அலைகளாகக் கட்டமைக்கப்படுகிறது. கதையின் கதை சொல்லியாக இருக்கும் ஸந்தா எனும் பெண்ணும், வாடகை அறையில் இருக்கும் ரகுநாதனும் பிரதான கதாமாந்தர்களாக அமையும் வண்ணம் கட்டமைக்கப்பட்ட கதையில், கதையின் தலைப்பிற்கான பகுதி வருகிற இடம் தமிழ் வாசகர்களுக்கு மட்டுமே புதியதொரு கோணத்தை திறந்து விடுகிறது.

ரகுநாதன் ''நீங்கள் பொட்டு வைத்தால் இன்னும் அழகாக இருப்பீர்கள்?'' என்று ஸந்தாவிடம் கூறுகிறான். அதற்கு ஸந்தாவோ ''சிங்கள முறைப்படி தான் பொட்டு வைப்பதில்லையே. தமிழ் பெண்களுக்கு பூவும், சேலையும், பொட்டும் அடையாளங்களாக இருக்கின்றன. முஸ்லீம் பெண்களுக்கோ பர்தா அடையாளமாக இருக்கிறது. தங்களுக்கு ஏதும் இப்படி இல்லை'' என்பதாக கதை கூறுகிறது. சிங்களத்தில் வாசிப்பவர்களுக்கு இது சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் மொழிபெயர்ப்பில் இவ்வசனம் பெரிய பாய்ச்சலை நிகழ்த்துகிறது.

நீங்கள் பொட்டு வைத்தால் அழகாக இருப்பீர்கள் என்று ரகுநாதன் சொல்வது ஒரு விதவைப் பெண்ணிடம் சொல்லும் வார்த்தையா? உடனே அவள் சிங்களப் பெண்ணாக இல்லாமல் தமிழ்ப்பெண்ணாக இருந்திருக்க முகாரி ராகமொன்று பின்னணியில் ஓடியிருக்கும். அவள் ரகுநாதனை ஐயா என்று அழைத்து, பின்னர் அண்ணா என்று அழைத்து அவன் மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் போது வந்த பழைய ஓயில் திரவக்கறையை அவளுக்குப் பொட்டாக வைக்கும் கணத்தை வாசிக்கும் தமிழ் வாசகர்களுக்கு 'பொத்தி வச்ச மல்லிகை மொட்டு பூத்திருச்சு வெட்கத்தை விட்டு... ' என்று இளையராஜா பாடல் பின்னணியில் ஓடுவதாக இருக்கும்.

அதன் பின்னர் அவள் 'அண்ணா' என்று கூப்பிட்டாலும் ரகுநாதனை 'ரகு' என்று அழைப்பதில் உள்ள கனிவு, வடமொழிச் சொல்லான விதவையை தமிழ், பொட்டு வைத்து கைம்பெண் ஆக்கிவிடுகிறது. என்பதைப் போல பொட்டிழந்த, பொட்டு வைக்காத சிங்களத்திக்கு தமிழன் ஒருவன் பொட்டு வைக்கிறான் என்பதாக அழகாகிறது. இது தமிழ் வாசகர்களுக்கு மட்டுமே தோன்றும் இடைக்காலப் படத்தின் அழகை சிறுகதை தருகிறது. அவர்கள் இருவரும் முரளியையும், ரேவதியைப் போலவும் மனதில் பதிந்து கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட ரகுநாதன் பக்கத்து அறையில் இருக்கும் போது இடையில் உள்ள பலகை இடைவெளிகளால் அவனை அடிக்கடி பார்க்கும் ஸந்தா அவனைக் காதலிக்கிறாள் என்றால் தக்ஷிலா இன்னுமொரு பெண்ணின் உளவியல் உத்தியையும் அங்கு வைக்கிறார். அந்தப் பலகை இடைவெளிகளினூடு அவள் கள்ளத்தனமாகப் பார்ப்பது போல ரகு தன்னைப் பார்ப்பதில்லை என்று ஸந்தா நம்புவதாகச் சொல்லப்படும் கணம் ஒரு பெண் ஒருவனை மனதார விரும்புவதற்குத் தேவையான நம்பிக்கையை கூட ஸந்தா அவன் மீது வைப்பதாக கதை, மறைமுகமான ஸந்தாவினது காதலை குறித்து நிற்கிறது. இப்போது கதையில் முரண்நகை. இதை வாசகர்கள் இரண்டு விதமாக அணுகலாம் அவர் அவர் விருப்பத்தை பொறுத்தது. இந்தத் திருப்பம் இப்படியானதா என்பதை உங்கள் முடிவிற்கு விடவே நானும் எண்ணுகிறேன். எனது முடிவு இதுவென்று எதையும் திணிக்கும் விருப்பமும் எனக்கில்லை.

கதையின் உச்சகட்டத்தில் ரகுநாதனைத் தேடிக் கொண்டு வரும் போலீஸ் அவனைப் பிடித்து ஜீப்பில் ஏற்றுகிறது.

அதற்கு ஏற்கனவே தயாராக இருந்தவன் போல அவனும் ஏறிச் செல்கிறான் என்ற ஒரு வசனமும். பலகை இடைவெளிகளினூடு அவனது அறையை அவள் பார்க்கும் போது ரகு சில வயர்களோடும், தகட்டுத் துண்டங்களோடும் இருந்தான் என்று ஒரு நிகழ்வும் கதையில் சொல்லப்படுகிறது. அப்படியானால் அவன் உண்மையில் கலகக்காரனா? தீவிரவாதியா? இப்படி ஒருவன் வைத்த குண்டுதானே அவளது கணவனைக் கொன்றது?அப்படியானால் அவள் கணவனைக் கொன்றவன் என்கிற நிலையிலுள்ளவனையே அவள் விரும்பினாளா?

இல்லை., அவன் வேறு தவறுக்காக பொலீஸ் வரும் போது அமைதியாக ஏறிச் சென்றானா? உண்மையில் அவள் பார்த்தது குண்டு என்று சொல்லப்படவில்லை, ஒரு வேளை அவை அவனுடைய மோட்டார் வாகனத்தின் உதிரிப்பாகங்களா? இப்படியாகவும் பார்க்கலாம்.


எது எவ்வாறாக இருப்பினும் அவள் அண்ணா என்று ரகுவை அழைத்தாலும் கடைசியில் அவனுக்காக அவள் ரகு... ரகு... என்று போலீஸ் ஜீப்பின் பின்னால் அவனுக்காக அழுதபடி ஓடும் காட்சி அவன் மீது அவளுக்கு உண்டாகியிருந்த தீராக்காதலை கூறும் விதமாகவே இருக்கிறது.

கதையின் கூறலில் பின்நவீனத்துவத்திற்கான பல உத்திகள் தென்படினும் மொழிபெயர்ப்பாளருடைய மொழி ஆளுகையும், தமிழைக் கடத்தியுள்ள விதமும் கதையை ஒரு எளிமையான ஓட்டத்துடன் சமர்ப்பிக்கிறது. பொட்டு என்ற இச்சிறு கதையின் உட்பொருள் சிங்கள மொழியை விட தமிழிற்கே பெரிதும் பொருந்திப்போவதாக உள்ளமையே இக்கதை தமிழ்ப்பரப்பில் பேசப்பட்டதற்கான அடிப்படை காரணமாகக் கூட இருக்கலாம்.

கதையின் முடிவு எதிர்பாராத ஒரு முடிவில் வைக்கப்பட்டாலும் கதை அதிபயங்கர சுவாரசியமானதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். காரணம் ஒரு பெண்ணின் உளவியலை காலம்காலமாக விபரிக்கும் கதைகளெல்லாம் கடைசியில் காதலிலோ அல்லது பகையிலோதானே முடிகிறது. இரண்டுக்கும் இடைப்பட்ட இடைவெளியில் சூன்யப் புள்ளியில் இருக்கும் அறியமுடியாத பெண்ணின் மனத்தினைப் பற்றி பெண் எழுத்தாளர்களாலேயே எழுத முடியவில்லை என்றால் கடினம். இதை எழுதிக் கொண்டிருக்கும் என்னாலும் எழுவது கடினமே.

'பீடி' எனும் நாவலின் மூலம் மீளவும் தமிழ் இலக்கியப் பரப்பிற்குள் பிரபலமடைந்துள்ள தக்ஷிலா சுவர்ணமாலியின் திடல், 'நந்தியா வட்டை பூக்கள்', 'அந்திம காலத்தின் இறுதி நேசம்' போன்ற கதைகளும் கவனிப்புக்குள்ளாகி வருகின்றன. மேலும் மொழிபெயர்ப்பாளர் ரிஷான் ஷெரீப் இன் இப்பணி தமிழுலகிற்கு பல முக்கிய படைப்புக்களை அடையாளம் காட்டுவதோடு நின்றுவிடாமல் சிங்கள மொழிக்கு தமிழின் முக்கிய கதைகளையும் அறிமுகப்படுத்துகிறது. இது வரவேற்கத்தக்கதே.

எது எவ்வாறாயினும் ஸந்தா – ரகுவின் இக்கதை நடுத்தர வர்க்கத்தில் போரும் அதன் பின்னரான வாழ்தலும் என்றே கூற முடிகிறது. காதலோ காமமோ இல்லாத கதை நம்மை ஈர்ப்பதிலை. அப்படி இந்தக் கதையில் வரும் காதல் புரியாத புதிரோடு நிறையாமல் கடந்தேறுகிறது.



# பட்டறிவு









தோட்டக்காரர் ஒருவர் தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது பறவையின் சிறிய கூடு ஒன்றைக் கண்டு, அதன் அருகில் போய் அந்த கூட்டில் என்ன இருக்கிறது என்று பார்க்க ஆசைப்பட்டார். தோட்டக்காரர் அதன் அருகில் சென்று பார்த்த போது அதில் பறவையின் சில முட்டைகள் இருப்பதைக் கண்டு அந்த கூட்டைப் பத்திரமாக எடுத்து வைத்துவிட்டுச் செல்கிறார்.

அடுத்த நாள் வந்து பார்க்கிறார்.. அந்த முட்டைகளில் ஒரு சிறிய வெடிப்பு (cracks) ஏற்பட்டிருப்பதைக் காண்கிறார். அப்போது இந்த முட்டைகளில் இருந்து குஞ்சுப் பறவைகள் வெளிவரப்போகிறது என்பதை உணர்ந்த தோட்டக்காரர் சந்தோசத்தில் கூட்டை மேலும் கவனமாகப் பார்த்துக் கொண்டார்.

இப்போது தோட்டக்காரருக்கு பயிர்களைப் பார்ப்பதைக் காட்டிலும், பறவையின் கூட்டையும் முட்டைகளையும் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாக இருந்தது. அதற்காகவே தோட்டத்திற்கு வரத் தொடங்கினார்.

ஒவ்வொரு முறையும் அந்த முட்டைகளில் ஏற்பட்ட வெடிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாயிருப்பதை அவதானித்தார். அவற்றின் மீதான எதிர்பார்ப்பு அவருக்கு அதிகமாகிக் கொண்டே செல்லத் தொடங்கியது..

வழமைபோல ஒரு நாள் கூட்டைப் பார்க்க தோட்டக்காரர் வந்தபோது, முட்டைகள் அசைவதையும் முட்டைகளினுள்ளே குஞ்சுப் பறவைகளின் இறக்கைகள் விரிய வழியில்லாமல் முட்டைகளின் சுவர்களிலே முட்டி மோதுவதையும் கண்டு உடைந்து போனார்.



பாவம்.!! அந்தப் பறவைக் குஞ்சுகள் கருவிலேயே கஸ்டப்படுகிறதே என்று தோட்டக்காரர் உடனே அந்த முட்டைகளில் இருந்த வெடிப்பை தன் கைகளால் கொஞ்சம் பெரிதாக்கி குஞ்சுகள் வெளிவர ஏற்றாற்போல் சௌகரியமாக முட்டைகளை வைத்து விட்டு வீடு சென்றார். மறுநாள் காலையில் புதிய பறவைகளைக் காண மிகுந்த ஆசையோடு கூட்டுக்கு அருகில் சென்ற தோட்டக்காரருக்கு ஏமாற்றமே எஞ்சிப்போனது.

முட்டைகளில் ஒரு மாற்றமும் இல்லை...

சரி! நாளை பார்ப்போம்.. என்று சென்று அடுத்த நாள் வருகிறார்... அன்றும் ஒரு மாற்றமும் இல்லை...இப்படியே நாளை நாளை என்று எதிர்பார்ப்புகள் தவணை முறையில் கடந்தன.

சில நாட்களின் பின்னர், முட்டைகளைச் சூழ எறும்புகள் படை எடுத்தன.

# பட்டறிவு

பறவைக் குஞ்சுகள் செத்துப்போய்க் கிடந்தன.

இதைக்கண்ட தோட்டக்காரர் மனசெல்லாம் வலியோடு வாடிப் போனார்..அப்போது அந்த வழியால் தோட்டக்காரரின் நண்பர் ஒருவர் வந்தார்... இவர் நண்பரிடம் நடந்ததைக் கூறினார்...

'பாவம்..! உன் அவசரத்தாலும், அளவுக்கு மீறிய அன்பாலும்,எல்லையற்ற எதிர்பார்ப்பாலும் அந்த பறவைகளை அழித்து விட்டாயே..!! என்று நண்பர் கூறினார்...

'நானா ...?'

'நீ தான்..! வேறு யாரு...?

அந்தப் பறவைகள் அந்த முட்டைகளில் இருந்து வெளிவரும் போது, அதன் இறக்கைகள் மெதுவாக அசையும், கால்கள் துடிக்கும், முட்டைகளின் சுவர்களில் முட்டி மோதும்..இது தானே இயற்கை..?

அதை அப்படியே விட்டிருந்தால், இந்நேரம் அழகான பறவைகளாகப் பிறந்திருக்கும்... ஒரு சுப பிரசவம் நடந்து முடிந்திருக்கும்.. அழித்து விட்டாயே.!!

நண்பர் கூறியதும், தோட்டக்காரர் மீண்டும் உடைந்து போனார்.. சிதறிப்போனார்.

இந்தப் படிப்பினையை நாம் நமது பிள்ளைகளின் வாழ்வியலுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இப்படித்தான் நாமும் நம் பிள்ளைகளுக்கு கஷ்டத்தையே காட்டக் கூடாது என்று தாங்கு தாங்கு என்று தாங்குகிறோம்... வலிக்கவே கூடாது என்று வளர்த்தெடுக்கிறோம்..


*உழைப்பின் பெறுமதியை..,*
*வியர்வையின் கனதியை.,*
*வெற்றியின் தடங்களை.*
*உணரச் செய்யாமலேயே*
*உருவாக்கி விடுகிறோம்...!!*


நாம் மறந்துவிடக்கூடாது.எல்லோரும் பயணிக்கும் பாதையில் நமது பிள்ளைகளையும் பயணிக்கக் கற்றுக் கொடுப்போம். பயணத்தை சரி செய்யவும் சொல்லிக்கொடுப்போம்.

அவர்களுக்கென்று தனியான ஒரு பாதையை அவர்களாகவே உருவாக்கட்டும்.நாம் தள்ளி நின்று அன்பாகவும், அக்கறையுடனும் தட்டிக்கொடுப்போம்..

பிள்ளைகளுக்கு விழவும் தெரிய வேண்டும். அப்போது தான் எழும்புவது எப்படி என்று தெரிய வரும்..

'எங்கள் சுட்டு விரல்களைப் பிடித்துக்கொண்டேஎத்தனை காலம் தான் இன்னும் அவர்கள் நடை பயில்வது?'





# முயற்சி!

## முல்லை பாஸ்கர்

*முயன்று பார்!*
*அலைகளைப் போல்..*
*ஓய்வில்லாமல்!*
*காற்றைப் போல்*
*களைப்பில்லாமல்!*

*முட்டி முட்டி*
*முளைக்கும்*
*விதைகளைப் போல்.*
*தத்தித் தத்தி*
*நடக்கும்*
*குழந்தைகளைப் போல்.*
*விழுந்தாலும்*
*எழுந்து விடு!*

*கைகள் கூட*
*இல்லாமல் பிறக்கலாம்.*
*நம்பிக்கை இல்லாமல்*
*இருக்கலாமா?*
*கண்கள் கூட*
*இல்லாமல் இருக்கலாம்.*
*கனவுகள் இல்லாமல்*
*இருக்கக் கூடாது.*

*முயற்சியும், பயிற்சியும்*
*இரு கண்கள்!!*
*தோல்வி அது*
*வாழ்க்கையின்*
*முற்றுப்புள்ளி அல்ல.*

*அது வெற்றியின்*
*தொடக்கம்!!*
*முத்துக்குளிப்பவனுக்கு*
*முத்துக்கள்*
*கிடைக்கவில்லை*
*என்றால்*
*கடலில்*
*முத்துக்களே இல்லை*
*என்று அர்த்தமா?*

*இல்லை!*
*இல்லவே இல்லை!!*
*உன் முயற்சியில்*
*தான் குறை.*
*நம் முயற்சிகள்*
*தவறலாம்.*
*முயற்சிக்கத்*
*தவறலாமா?*

*சூரியனோ, பூமியோ*
*ஓய்வெடுப்பதில்லை*
*ஓடிக்கொண்டே இருக்கின்றன.!!*
*நாமும் நம்*
*மரதனைத்*
*தொடங்குவோம்!!*

# போர்க்கால செய்திகளின் ஆதர்சக் குரல்!

**ஐங்கரன்**

ஈழத்தின் போர்க்கால நாட்களில் இரவு 9.15மணிக்கு ஒலிபரப்பாகும் பி.பி.சியின் தமிழோசை கேட்காமல், குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் பலரும் உறங்கமாட்டார்கள்.

### இடர்மிகு காலத்தின் குரல் :

நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேசமெங்கும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படுத்திவந்த, ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த பொன்னையா மாணிக்கவாசகம் அன்று 12/4/2023 இன்னுயிர் ஈந்தார்.

யுத்த காலத்தில் எழுத்தாயுதத்தை துணிவுடன் பயன்படுத்தியவரும், பத்திரிகைத் தர்மத்தைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டு சிறந்த ஊடகவியலாளராகச் சேவையாற்றியவருமான திரு. பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளராக என்றும் விளங்குகிறார்.

போர்க்காலத்தில் வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல் என்ன என்பதை காதுகொடுத்துக் கேட்க காத்திருந்த உலகத் தமிழ் மக்கள் அவரை என்றும் மறக்கமாட்டார்கள்.





வவுனியாவில் இருந்து பொ.மாணிக்கவாசகம் தரும் உடனடித் தகவல்கள் அக்காலகட்டத்தில் அவரது செய்திகளை மாத்திரமே நம்பக்கூடியதாக இருந்தது. பொ மாணிக்கவாசகம் அவர்கள் பத்திரிகயாளராக ஆற்றியசேவையும், அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாது ஆற்றிய பணிகளும் மறக்க முடியாதவை. கல்வி, சுகாதாரம், அரசியல்



களங்களில் உண்மை, நேர்மை துலங்கும் வகையில் செய்திகள் தந்த மாண்பு மகத்தானவை.

### வாழ்நாள் சாதனையாளர் விருது :

கடந்த வருடம் 13/12/2023இல் கொழும்பில் நடைபெற்ற இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த விருது விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.



வீரகேசரியிலும், பி.பி.சி.யிலும் நீண்டகாலம் ஆபத்தான ஒரு யுத்தப் பகுதியிலிருந்து செய்தி சேகரிப்புப் பணியை துணிச்சலுடன் – திறம்படச் செய்துவந்தவர். அதனைவிடவும், வேறு சில சர்வதேச ஊடகங்களிலும் அவா் பணியாற்றியிருக்கின்றார். அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பொன்னையா மாணிக்கவாசகம் அவர்கள் 'கால அதிர்வுகள்','வாழத்துடிக்கும் வன்னி', 'மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்' என்னும் நூல்களையும் எழுதியுள்ளார்.



மறைந்த வாழ்நாள் சாதனையாளர் பொன்னையா மாணிக்கவாசகம் தான் கடந்துவந்த கரடு முரடான பத்திரிகைத்துறை அனுபவங்களையும் தொகுத்து அடுத்த நூலையும் விரைவில் வெளியிட உத்தேசித்திருந்தார்.

இந்த நூல்களில் அடங்கியுள்ள விடயங்கள் யாவும் வீரகேசரி நாளிதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்புகள் என்பது வீரகேசரிக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும்.

**தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர்:**

தமிழ் ஊடகவியலாளர்கள் கடுமையான ஆபத்துக்களை எதிர்கொண்டிருந்த ஒரு காலப்பகுதியில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர், அந்தப் பதவியின் மூலமாகச் செய்த பணிகளும் முக்கியமானவை.

ஒரு முழு நேர ஊடகவியலாளராக – சுயாதீனமாகப் பணியாற்றிய அவர், தனது அனுபவங்களின் அடிப்படையில் சில நூல்களையும் எழுதியிருக்கின்றார். அவை தமிழ் மக்களைப் பொறுத்தவரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. பொ.மாணிக்கவாசகம் அவர்கள் பத்திரிகையாளராக ஆற்றியசேவை, அதிலும் விசேடமாக யுத்த காலத்தில் பலமுனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடுநிலை தவறாது ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை.

**'வென்மேரி' விருது கௌரவம் :**

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் 18.8.2022 நடைபெற்ற 'வென்மேரி விருதுகள்' விழாவில் மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் அவர்கள் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

'வென்மேரி அறக்கட்டளை' யின் முதலாவது விருதுவிழாவான நிகழ்வு யாழ்.



நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழின் ஆற்றல்மிகு ஆளுமைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் விழா என்ற மகுடத்துடன் நடைபெற்ற இந்த விழாவில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தார்கள். மூத்த ஆளுமைகள், வாழ்நாள் சாதனையாளர்கள், இளம் முயற்சியாளர்கள் என பலதரப்பட்ட ஆளுமைகள் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஊடகத்துறையில் உயிரையும் பணயம் வைத்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக போரின் மையப் புள்ளியிலிருந்து துணிச்சலுடன் பணிபுரிந்த மாணிக்கவாசகம் கௌரவிக்கப்பட்டமை முக்கியமானதாகும்.



# பிரமிக்க வைக்கும் பிரமிடுகள்



### பிரமிடுகள் எகிப்தைத் தவிர வேறு எந்தெந்த நாடுகளில் உள்ளன? அவைகள் எகிப்திய பிரமிடுகளுடன் எவ்விதத்தில் வேறுபடுகின்றன?

‘பிரமிடு’ என்றால் பலரும் சொல்வது, ‘அது எகிப்தில் இருக்கும் ஒரு கட்டிடம். அதில் அக்காலத்தில் இறந்த மன்னர் போன்றவவர்களின் சடலத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். ‘மம்மி’ என்றழைக்கப்படும் அவற்றின் உடல்கள் இன்னமும் கெடாமல் இருக்கின்றன. அது தவிர பல்வேறு புதையல்களும் அங்கே இருக்கக்கூடும்’ என்பதுதான். ஆனால் இவை மட்டும் தான் பிரமிடா? இன்று உலகில் பல நாடுகளில் பிரமிட்கள் உள்ளன.

எகிப்து நாட்டில் காணப்படும் பிரமிடுகள் கற்களால் கட்டப்பட்ட பிரம்மாண்டங்கள். 2008ம் ஆண்டு வரையிலும் கிட்டத்தட்ட 138 பிரமிடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பிரமிடுகளுக்குப் பின்னாலான மர்மங்கள் கணக்கிலடங்காதவை. பிரமிட்கள் சாதாரண மக்களை மட்டுமல்ல, பொறியியல் வல்லுநர்களையும் வியக்க வைக்கும் அமைப்புகள்.

ஒரிஜினல் ஏழு உலக அதிசயங்களில், இன்று நாம் காணக் கிடைக்கும் ஒரே அதிசயம் பிரமிட்கள்தாம். கிங் குஃபு வின் பிரமிடு என்றும் இது அழைக்கப்படுகிறது.இதுவரை கண்டறியப்பட்ட எகிப்து பிரமிடுகளிலேயே இதுதான் மிகப்பெரிய அளவிலானது. இதன் உயரம் 146 மீட்டர் (கிட்டத்தட்ட 500அடி). கிட்டத்தட்ட 4600 வருடங்களுக்கு முன்னர் இது கட்டப்பட்டதாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

இதில் ஒரு சுவாரசியம் என்னவென்றால் முதன் முதலில் கட்டப்பட்டது கிரேட் பிரமிடு அல்ல. கிங் குஃபு வின் தந்தை கிங் ஸ்நெஃப்ருவினால் கட்டப்பட்ட ஸ்டெப் பிரமிடுதான் முதன் முதலில் கட்டப்பட்ட பிரமிடாகும். கிரேட் பிரமிடு 2.3 மில்லியன் எண்ணிக்கையிலான கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. இவற்றின் மொத்த எடை 5.9 மில்லியன் டன்கள்.கிஸா (Giza) நகரில் இருக்கும் பெரிய பிரமிட் சுமார் 476 அடி உயரமானது, 13.6 ஏக்கர் நிலப் பரப்பு கொண்டது 5,90,712 கற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கம்ப்யூட்டர் கணக்கீடுகள் சொல்கின்றன.

கற்களின் எடை ஒவ்வொன்றும் இரண்டில் இருந்து முப்பது டன் வரை. இதில் முக்கியமான விஷயம்என்னவென்றால் இந்தப் பிரமிடுகளைச் சுற்றி எந்தவிதமான மலைகளோ, பாறைகளோ, கற்குன்றுகளோ கிடையாது. நகரத்தின் அருகில் மட்டுமல்ல,தொலைவிலும் கூட இல்லை. ஒரு புறம் பாலைவனமும், மறுபுறம் கடலும் தான் இந்நகரைச் சுற்றி உள்ளது. அப்படியானால் இந்தப் பிரமிடை எப்படி உருவாக்கியிருப்பார்கள்? இத்தனை லட்சம் கற்களை எங்கிருந்து கொண்டு வந்திருப்பார்கள்? இவ்வளவு பெரிய உயரத்திற்கு அவற்றை எப்படி எழுப்பியிருப்பார்கள்? என்றுதான் வரலாற்று ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

மேலும் இந்த அளவுக்கு அருகில்பூமியில் எங்காவது கற்களைத் தோண்டி எடுத்து இவற்றைக் கட்டியிருப்பார்கள் என்று வைத்துக்



கொண்டால் கூட, அவ்வாறு தோண்டி எடுத்த இடங்களில் மிகப் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.ஆனால் பலமைல் சுற்றளவிற்கு அப்படி எந்த ஒரு பெரிய பள்ளமும் இல்லை. ஆகவே எப்படி இவற்றை உருவாக்கி இருப்பார்கள் என்று இன்னமும் விஞ் ஞானிகள் மண்டையை உடைத்துக் கொண்டுதான் உள்ளனர்.

உச்சியை எட்டும்போது கற்களை 400 அடிகளுக்கு மேல் தூக்கிக் கொண்டு போயிருக்க வேண்டுமே? அவர்களிடம் கிரேன் மாதிரி எந்திரம் இருந்ததா? ஒரு லட்சம் தொழிலாளிகள் இருபது வருடம் பணியாற்றியிருந்தால் மட்டுமே பெரிய பிரமிட் உருவாகியிருக்கும் என்பது கட்டடக் கலை வல்லுநர்கள் கணிப்பு. மிஸிரினஸ் பிரமிடில் உபயோகித்திருக்கும் ஒரேயொரு கல்லின் எடை மட்டும் 285 டன் என்பதும், இவ்வளவு எடையுள்ள கல்லை எப்படி கையாண்டிருப்பார் கள் என்பதும் ஆராயமுடியாத மர்மமாகவே நீடிக்கிறது.

பிரான்ஸ் நாட்டின் மாவீரராக இருந்த நெப்போலியன் இந்தப் பிரமி டுகளில் என்னதான் இருக்கிறது என்று பார்க்க ஆர்வம் கொண்டார். தனி ஆளாக ஓரிரவு முழுக்க இந்தப் பிரமிடில் தங்கினார். மறுநாள் காலை வெளிவந்த அவர், பிரமிப்பின் உச்சியில் இருந்தார். பிரமி டின் பல்வேறு ரகசியங்களைத் தெரிந்து கொண்டிருந்த அவர், அவற்றை முழுமையாக வெளியிடவில்லை. நான் சொல்வதை யாரும் நம்ப மாட்டார்கள் என்ற கருத்தை மட்டும் தெரிவித்தார்.

பிரமிட் என்றால் கூம்பு வடிவம். அடிப்பகுதி நீண்ட சதுரமாக இருக்கும். நான்கு சரிவான முக்கோணப் பகுதிகள் உச்சியில் ஒன்றாக இணையும். இந்தப் பிரமிட்களுக்குள் ராஜா ராணிகள், விஜபிகள் ஆகியோரின் உடல்கள் அவர்கள் மறைவுக்குப்பின் மம்மி களாக, உடல் கெடாதவாறு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த உடல்கள் கெட்டுப் போகாமல் இருக்கின்றன. பிரமிட்களின் கூம்பு வடிவம் இதற்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

பிரமிட்கள் எல்லாமே ஏன் கூம்பு வடிவில் மட்டுமே கட்டப்பட் டுள்ளன? வீடுகளை சாதாரணமாக, சதுர, செவ்வக வடிவங்களில் கட்டியவர்கள், பிரமிட்களை மட்டும் கூம்பு வடிவம் ஆக்கியது ஏன்?

ஆராய்ச்சியாளர்கள், பல ஆண்டுகள் செய்த பரிசோதனைகளின் அடிப்படையில் தரும் விளக்கங்கள் நம்மை பிரமிக்க வைக்கின்றன.

பிரமிட் வடிவ அறைக்குள் காய்கறிகள், பழங்களை வைத்தால், மற்ற அறைகளில் வைக்கப்பட்ட காய்கறிகள், பழங்களைவிட அதிக நாட்கள் கெடாமல் இருகின்றன.

பிரமிட் வடிவக் கட்டடங்களில் தூங்குபவர்களுக்கு, சாதாரண அறை களில் தூங்குபவர்களைவிட, அதிகம் புத்துணர்ச்சி கிடைக்கிறது. பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகள் இறந்த ஒரு பூனையின் உடலை, மரத்தால் செய்த பிரமிட் வடிவப் பெட்டிக்குள் வைத்தார்கள். பல நாட்கள் ஆன பின்னும் இந்த உடல் கெட்டுப் போகவில்லை.

பிரமிட் வடிவ அறைக்குள் இருக்கும் இரும்புப் பொருட்கள் எளி தாகத் துருப் பிடிப்பதில்லை.இப்படி ஆச்சரியமான கண்டுபிடிப்புகள்!

கூம்பு வடிவ அமைப்பு, சுற்றுப்புறத்திலிருந்து ஒரு வித மின் காந்த ஆற்றலை உள் வாங்குகிறது. பிரமிடின் உச்சிப்பகுதி, அந்த ஆற்றலை, பிரமிடின் உள்பகுதியில் ஒரே சீராகப் பரவ வைக்கிறது. இதுதான் ரகசியம் என்கிறார்கள்.





இது முழுமையான விளக்கமா? சரி என்று ஒத்துக்கொண்டாலும், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், எகிப்தியர்களுக்கு இந்த விஞ்ஞான உண்மை எப்படித் தெரிந்தது, புரிந்தது?

பிரமிடு போலவே இன்னுமொரு தீராத மர்மம் அதன் முன்னால் இருக்கும் ஸ்பிங்க்ஸ் சிற்பம். மிகப்பிரமாண்டமான அளவில் கட்டப் பட்டிருக்கும் இந்த சிற்பம் கிரேட் பிரமிடை பாதுகாக்கத்தான் கட்டப் பட்டிருக்கிறது என்ற வாதங்களையும் தாண்டி காலச்சிதைவுகளுடன் அமர்ந்திருக்கிறது.

ஸ்பிங்க்ஸ் பிரமிடைப் போன்ற ஓர் பிரமிடு உருவச்சிலை செவ் வாய்க் கிரக பிரமிடுகளுக்கு அருகே காணப்படுவதாகக் கூறியிருக் கின்றனர். அவர்கள், செவ்வாய்க் கிரகத்தில் சைடோனிக் எனக் குறிக்கப்படும். ஒரு பகுதியில் காணப்படும் பிரமிடு போன்ற அமைப் புகளுக்கும், எகிப்தின்

பிரமிடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கக் கூடும் என்றும் கருதுகின்றனர்.

சில ஆராய்ச்சியாளர்கள் கிரேட் பிரமிடு நாலு லட்சம் மனிதர்களை கொண்டு சுமார் 20 ஆண்டுகள் கட்டப்பட்டிருக்கும் என்று கணக்கிட் டிருக்கிறார்கள். (சிலர் பிரமிடுகளை கட்டியது மனித சக்தியே அல்ல நிச்சயமாய் ஏதோவொரு சூப்பர் பவரோ... இல்லை... வேற்றுக்கிரக வாசிகளோதான் கட்டியிருக்கவேண்டும் என்றும் வாதிக்கின்றனர்.

ஏனென்றால் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்கூட மனிதர்களால் கிரேட் பிரமிடு போன்ற ஒன்றை உருவாக்குவது சாத்தியமில்லாதபோது 5000 வருடங்களுக்கு முன் இது எப்படி மனித சக்தியால் கட்டப் பட்டிருக்கும் என்ற கேள்வியும் வாதத்திற்கு வலு சேர்ப்பதாய்த்தான் இருக்கிறது)

உலகில் கட்டப்பட்ட பிரமிடுக்களில், அடிப்படையில் மிகப் பெரியது மெக்சிக்கோவில் உள்ள சோலுலாவின் பெரிய பிரமிடு ஆகும். இப் பிரமிடு இன்னும் தொல்பொருள் ஆராய்ச்சியில் அகழ்ப்பட்டு வருகின்றது.

பிரமிடு வடிவிலான கட்டிடங்கள் எகிப்தியர், மாயன், சுமேரியர் உள்ளிட்ட பல பழமையான நாகரிக மக்களால் அமைக்கப்பட்டன.

பாரிசில் உள்ள லூவர் அருங்காட்சியகம் முன்பாகக் கண்ணாடியா லான பிரமிடு அமைக்கப்பட்டுள்ளது.மெசபடோமியர்கள், சிக்குரத்கள் எனப்பட்ட பழமையான நாகரிக மக்கள் துவக்க கால பிரமிடுகளை முதன்முதலாகக் கட்டினர். இவை சூரிய வெப்பத்தில் உலர்ந்த செங்கற்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டமையால் அனைத்தும் அழிந்துபோயின. இத்தகைய சிக்குரத்களை சுமேரியர்கள், பாபேலி யர்கள், ஈலாமியர்கள், அக்காடியர்கள், மற்றும் அசிரியர்கள் அவரவர் பகுதிகளில் பல பிரமிடுகளை கட்டினர்.

சூடான்பிரமிடுகள் எகிப்துடனேயே அடையாளப்படுத்தப் பட்டாலும் உலகின் மிகக்கூடுதலான பிரமிடுகளை கொண்ட நாடாகச் சூடான் விளங்குகிறது. இங்கு 220 பிரமிடுகள் இன்றும் உள்ளன. நுபியர்கள் சூடானின் மூன்றிடங்களில் இந்த 220 பிரமிடுகளை அமைத்துள்ள னர். நாப்பட்டா மற்றும் மெரோஅரசர்/அரசிகளின் கல்லறைக் கட்டி டங்களாக இவற்றைக் கட்டினர். இவை எகிப்திய பிரமிடுகளிலிருந்து மாறுபட்டுள்ளன. அவற்றைவிட நுபியப் பிரமிட்கள் செங்குத்தான கோணங்களில் அமைக்கப்பட்டுள்ளன.சூடானில் கிமு 300 வரை பிரமிடுகள் கட்டப்பட்டு வந்தன.



## நுபியப் பிரமிட்கள் - நைஜீரியா

அபுஜாவில் சுடெ பிரமிடுகளை அங்கு வாழ்ந்த குபோ நாகரிகத்தின் கூறாகக்காணலாம். களிமண்ணால் கட்டப்பட்ட பத்து பிரமிடுகள் இங்குள்ளன. முதல் கட்ட அடிப்பகுதி 60 அடி சுற்றளவையும் 3 அடி உயரத்தையும் கொண்டுள்ளது.

அடுத்தப்படியில் 45 அடி சுற்றளவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறான அடுக்குகள் வட்டவடிவ ஒன்றன்மேல் ஒன்றாக மேல்வரை கட்டப்பட்டுள்ளன. இவை கடவுளரின் இருப்பிடமாகவும் சிகரத்தில் அவர்கள் வசிப்பதாகவும் நம்பப்பட்டது. இதன் அடையாளமாக ஒரு கம்பு அங்கு நடப்பட்டிருந்தது. இவை ஐந்து குழுக்களாக ஒன்றுக்கொன்று இணையாகக் கட்டப்பட்டன.இவை களிமண்ணால் கட்டப்பட்டமையால் அவ்வப்போது மீளுருவாக்கம் செய்ய வேண்டியிருந்தது.

## சுடெ பிரமிடு / கிரீஸ்

கி.மு இரண்டாம் நூற்றாண்டின் புவியியலாளர் பவுசானியாசு பிரமிடுகளை ஒத்த இரு கட்டிடங்களைக் குறிப்பிடுகிறார்; இவற்றில் ஒன்று ஹெலனிக்கோன் நகரிலிருந்து 19 கிமீ தொலைவில் தென்மேற்கே இருந்ததாகவும் அர்கோசு ஆட்சிக்காகப் போராடிய போர்வீரர்களின் நினைவாக இவை கட்டப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவை இரண்டுமே பிரமிடுகளை ஒத்து இருந்ததற்கான எந்தவொரு சான்றும் இதுவரைகிடைக்கப்பெறவில்லை.

## பவுசானியாசு பிரமிடு - இந்தியா தஞ்சைப் பிரகதீசுவரர் கோயில்

சோழர் காலத்தில் தென்னிந்தியாவில் கருங்கற்களால் கட்டப்பட்ட பிரமிடு வடிவ கோபுரங்களுடன் கூடிய பல பெரும் கோவில்கள் இன்றும் சமயப் பயன்பாட்டில் உள்ளன. தஞ்சைப் பிரகதீசுவரர் கோயில், கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் தாராசுரத்தில் உள்ள ஐராவதேஸ்வரர் கோயில் தமிழ்நாட்டின் ஸ்ரீரங்கம் வட்டத்திலுள்ள அரங்கநாதசுவாமி கோயில் ஆகியன இவற்றில் சிலவாம். 11ஆம் நூற்றாண்டில் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சை பிரகதீசுவரர் கோவில் யுனெசுகோவால் உலகப் பாரம்பரியக் களமாக 1987இல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விரிவாக்கமாக 2004ஆம் ஆண்டு கங்கைகொண்ட சோழபுரம் கோயிலும் தாராசுரம் கோயிலும் இணைக்கப்பட்டன.

## இந்தோனேசியா

இந்தோனேசியாவின் ஆஸ்த்ரேலேசிய பாறைக் கட்டமைப்பு பண்பாட்டில் குத்துக்கல், கல் மேடைகள், கற்சிலைகளுக்கு அடுத்ததாகப் புந்தென் பெருந்தக் எனப்பட்ட மண்,கற்களாலான அடுக்கு பிரமிடு கட்டமைப்புகள் இருந்தன. இவை மேற்கு சாவாவின் குனுங் படாங் பகுதியிலும் சிசுலோக் பங்குயங்கன் பகுதிகளிலும் காண்டறியப்பட்டன.

மலைகளிலும் உயர்ந்த இடங்களிலும் மூதாதையரின் ஆவி வாழ்வதாக உள்ளூர் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே இக்கற்கட்டிடங்கள் கட்டப்பட்டன. மத்திய சாவாவில் உள்ள போரோபுதூரில்8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த சமய பிரமிடு ஒன்று உள்ளது. பிந்தையக் கால சாவா கட்டமைப்புக்கள் இந்திய கட்டிடக்கலையின் தாக்கத்துடன் கட்டப்பட்டன.

## குனுங் படாங்

பெரிய பிரமிட் பிரம்மாண்டம் என்று நினைக்கிறீர்களா? இதோ வருகிறது நிஜ பிரமாண்டம். கார்நாக் (Karnak) எகிப்தின் மேற்குப் பகுதியில் இருக்கும் கிராமம். ஆலயங்கள் நிறைந்த இடம். சிதிலமாகிவிட்ட பல கோவில்கள் நெஞ்சில் துயரம் பொங்க வைக்கின்றன. இங்கே இருக்கும் ஆமுன் ரே [Amun Re] கோவில் எகிப்தின் மற்ற எல்லாக் கோவில்களையும் விட மிகப் பெரியது. ஆமுன் ரே எகிப்தியரின் முழுமுதற் கடவுள். நாட்டையும், மன்னர்களையும், மக்களையும், எல்லாத் துன்பங்களிலிருந்தும், எப்போதும் காப்பாற்றுபவர் என்பது பொது நம்பிக்கை.

## அமுன் ரெ

ஆமுன் ரே கோவிலில் இருக்கும், கி.மு. 14 – ம் நூற்றாண்டில், இரண்டாம் ராம்சேஸ் மன்னரால் கட்டப்பட்ட அரங்கம் முக்கிய அம்சம். ஹைபோஸ்டைல் என்னும் வித்தியாசமான கட்டடக் கலைப் பாணியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. தாங்கும் வளைவுகள் இல்லாமல், வரிசையாகத் தூண்களை நிறுவி, அவற்றின்மேல் தட்டையான கூரை அமைக்கும் முறை இது. அரங்கம் எத்தனை பெரியது தெரியுமா? பரப்பளவு 52,000 சதுர அடி. 16 வரிசைகளில், 134 தூண்கள் அரங்கத்தைத் தாங்கி நிற்கின்றன. இவை ஒவ்வொன்றின் சுற்றளவு 10 அடி. 122 தூண்களின் உயரம் 33 அடி: எஞ்சிய 12 தூண்களின் உயரம் 70 அடி. பிரமிடுகள் கட்டப்பட்ட விதமும் கட்டப்பட்டதற்கான காரணங்களும் பல்வேறு ஆராய்ச்சி முடிவுகளுடன் தொடர்ந்து கொண்டேயிருக்கும் மர்மங்கள்.

## கருனகு கோவில்

இறந்து போன மன்னர், மகாராணி ஆகியோரின் சடலங்கள் பதப்படுத்தப்பட்டு அவர்கள் உபயோகிக்கும் பொருட்களுடன் பிரமிடுக்குள் அமைக்கப்பட்டிருப்பது இறப்பிற்கு பின்னாலான வாழ்க்கை குறித்த இன்று வரை மர்மமாகவே ஆராயப்படுகிறது.

மர்மங்கள் வெறும் பிரமிடுகளுடன் முடிந்து விடுவதல்ல. மம்மிகள் எனப்படும் பதப்படுத்தப்பட்ட உடல்கள், பிரமிடுக்குள் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே ஃபிளையிங் மெஷின் மற்றும் பல்பு போல செதுக்கப்பட்டிருக்கும் உருவங்கள், மனித உடலும் விலங்கு தலையுமான உருவங்கள் என நீளும் விஷயங்கள் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளானாலும் தீர்க்க முடியாத எகிப்தின் மர்மங்களே!



# சகல பெற்றோர்களுக்கும் ஓர் திறந்த மடல்...

**திருமதி கோகிலா மகேந்திரம் அவர்கள் மகாஜனாக் கல்லூரியின் ஆசிரியராக பணியாற்றியவர், பின்பு பிரதிக் கல்விப் பணிப் பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். சிறந்த எழுத்தாளரான இவர் உளவள ஆலோசகராகவும் பணியாற்றி வருகின்றார்.**





தமது பிள்ளைகள் குறித்து மிகுந்த அச்சத்துடன் வாழும் தற்கால பெற்றோர்களுக்கு இவர் எழுதிய கட்டுரையின் முழு வடிவம் இங்கு தரப்படுகின்றது.

அண்மைக் காலமாகத் திடீரென எமது பிரதேசங்களில் போதைப் பொருள் பாவனையும் மது பாவனையும் அதிகரித்துள்ளன என்ற அவதானம் மிகக் கவலை தரும் விடயமாக ஆகியுள்ளது.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் பல்வேறு வடிவங்களில் இவற்றை உள்ளெடுக்கத் தொடங்கியிருப்பது சமூகத்தை ஆபத்தின் விளிம்பை நோக்கி எடுத்துச் செல்லத்தக்கது.

போதைப்பொருள் பாவனையைச் சமூகத்திலிருந்து அப்புறப் படுத்தும் நல்ல முயற்சியில் ஈடுபடுகின்ற அனைவரும் பெற்றோருடையதும் பாதுகாவலருடையதும் ஆதரவைப் பெற்றுக் கொள்வது மிக அவசியம்.

பிள்ளைகள் இவ்விடயங்கள் பற்றித் தமது நம்பிக்கைக்குரிய பெரியவர்களிடமும் பெற்றோர்களிடமும் கதைக்க விரும்புகிறார்கள் என்றே ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே, என்ன கதைப்பது? எப்படிக் கதைப்பது? எப்போது கதைப்பது? என்பது பற்றிப் பெரியவர்களாகிய நாங்கள் தெளிவாகவும் ஆயத்தமாகவும் இருப்பது அவசியம். போதைப் பொருள் பாவனை பற்றி பத்து வயதிற்கு மேற்பட்ட எல்லாப் பிள்ளைகளுடனும் பெற்றோர் பேசுதல் வேண்டும்.

போதைப் பொருளைப் பாவிக்கத் தொடங்கிய பிறகு மிகச் சங்கடமான நிலையில் இருந்து பேசுவதைவிட, அவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்க முதலே பேசுவது சிறந்த தடுப்பு முறையாக அமையும்.

பிள்ளைகளோடு விடயத்தைப் பேச ஆரம்பிக்க முன்னர் அவ் விடயம் பற்றி விரிவாகவும்,சரியாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் தெரிந்து கொண்டு பேசத் தொடங்க வேணடும்.

மதுவையோ அல்லது கனாபிஸ்,கொகேயின், எக்ஸீரசி, அம் பிரமீன் போன்ற போதைப் பொருள்களையோ பாவிப்பவர்களில் 78% ஆனோர் அவற்றைத் தமது நண்பர்களூடாகவே பெற்றுக் கொள்கிறார்கள்.

பாரிய உள நோய் ஒன்றுக்காக ஒருவர் முதல் மாதத்தில் அவர் போதைப் பொருள் ஏதாவது பாவித்திருக்கிறாரா என்று மருத்துவர் கேட்பார். ஏனென்றால் அவ்வாறு பாவித்திருந்தால் அவருக்குப் பாரிய மனநோய் வருவதற்கான சாத்தியக்கூறு மற்றவர்களைவிட இரு மடங்காக ஆகிறது.

ஆகவே, போதைப் பொருளைப் பாவிப்பதன் மூலம் நாம் பாரிய மனநோய்க்கு உள்ளாகும் ஆபத்தையும்உருவாக்கிக் கொள்கிறோம்.

போதைப் பாவனையாளர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பும் மிக அதிகம்.இது அவர்கள் சிறைச்சாலையில் வாடும் நிர்க்கதிக்கு அவர்களைத் தள்ளிவிடலாம். அதீத போதைப் பாவனையால் இறந்து போகக் கூடிய சாத்தியமும் உண்டு.

ஏந்த ஒருவரும் எந்த நேரத்திலும் போதைக்கு அடிமையாகலாம். ‘எனது பிள்ளை ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டார்’ என்ற ஊகத்தோடு கவனிப்பின்றி இருக்க வேண்டாம். போதையைப் பாவிக்கத் தொடங்கிய பின்னர்அது அவர்களுக்குப் பிரச்சினை தருகிறது என்று உணர்ந்தாலும், அதன் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமம் காரணமாக அதனைத் தொடர்ந்து பாவித்து வருவர்.

அவர்களின் வாழ்வில் போதையே மையப் பொருளாக மாறுவதால், படிப்பு, வேலை, உளநலம், மனிதஉறவுகள், வாழ்க்கைத்தரம் போன்ற வாழ்வின் கூறுகள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன.

காலப் போக்கில் போதைக்கான ஒரு தாங்கு திறனையும் அவர்கள் வளர்த்துக் கொள்ளக்கூடும். ஒரு குறிப்பிட்ட விளைவைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் மேலும் மேலும் அதிக போதையைப் பாவிக்க நேரிடலாம். போதையை நிறுத்த அவர்கள் முயற்சி செய்கிறபோதும் சில உடல் ரீதியான குணங்குறிகள் தோன்றி அதைத் தடுத்து விடும்.

மைய நரம்புத் தொகுதியில் போதைப் பொருள் ஏற்படுத்தும் விளைவுகளின் அடிப்படையில் அவற்றை மூன்று முக்கிய பிரிவுகளில் அடக்கலாம்.

**1 தூண்டிகள்**
**2 மந்தமாக்கிகள்**
**3 மாயப்புலன் உணர்வுக்காட்டிகள்**

தூண்டிகள் பொதுவாக மையநரம்புத் தொகுதியின் தொழிற்பாட்டைத் தூண்டும். அம்பிரமின், எக்ஸ்ரசி,கொகேயின், கபின், நிக்கோற்றின் ஆகியவை இதற்குள் அடங்கும்.



மந்தமாக்கிகளோ மறுதலையாக மைய நரம்புத் தொகுதியின் செயற்பாட்டை மந்தப்படுத்தும். மது, கனாபிஸ்,நித்திரைக் குளிசைகள், ஹெரோயின்,மெதடோன் போன்றவை இப்பகுதியில்வரும்.

மாயப் புலன் உணர்வுக் காட்டிகள் புலன்சார் உள்வாங்கலில் மாற்றங்களைக் கொண்டு வரும் நேரம், வெளி பற்றிய உணர்வுகளிலும் மாற்றம் வரலாம். கெராமின், எல்.எஸ்.டி,கனாபிஸ், மஜிக் மஸ்றூம் போன்றவை இந்த வகையில் வரும்.

சில போதைப் பொருள்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிக்குள் வந்திருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாகக் கனாபிஸ் ஒரு மந்தமாக்கி, ஆனால் அது அதிக அளவில் பாவிக்கப்படும்போது,மாயப் புலன் உணர்வுக் காட்டியாகவும் மாறலாம்.

போதைப் பொருள்கள் எல்லாமே ஆபத்தானவை என்பது மிக முக்கியமான உண்மையாகும். போதைப் பொருளைக் கலந்து பாவித்தல், குறிப்பாக மதுவுடன் வேறு பொருள்களைச் சேர்த்தல் மிக மிக ஆபத்தானது.

ஒரு போதைப் பொருளின் தன்மை பற்றியோ அதன் செறிவு பற்றியோ ஒருவரும் உத்தரவாதம் வழங்க முடியாது. ஒரு போதைப் பொருளை ஒருவர் முன்பு பல தடவை பாவித்திருந்தாலும்கூட, இம்முறை அது என்ன விளைவை ஏற்படுத்தும் என்று ஒரு போதும் எதிர்வு கூற முடியாது.

## பிள்ளைகளை எங்களுடன் பேச வைப்பதற்கான வழிமுறைகள் என்ன?

### 01) அவர்களை உங்கள் வாழ்வின் பகுதி ஆக்குங்கள்.

உங்கள் பிள்ளைகளுடன் பேசுவதற்காகத் தரமான நேரத்தை ஒதுக்குவதை உறுதிப்படுத்துங்கள். அவர்கள் அக்கறை கொள்ளும் விடயங்களில் நீங்களும் அக்கறை கொள்ளுங்கள்.விடயங்களை குறைக்கவும் ஒன்றாகச் சேர்ந்து கொள்வதற்குமான நேர அட்டவணையைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

எந்த ஒரு புதிய விடயத்தையும் பிள்ளைகள் செய்யத் தொடங்கும் போது, 'எனது பெற்றோர் அல்லது பாதுகாவலர் இது பற்றி என்ன நினைப்பார்கள்?' என்ற கேள்விக்கு விடை தேடிக் கொண்டே இருப்பார்கள்.

ஆகவே, அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் போதைப் பொருள் பாவிப்பதை நீங்கள் முற்றாகவே விரும்பவில்லை அல்லது ஏற்றுக் கொள்ளவில்லை என்ற செய்தியை அவர்களுக்கு மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் கூறி வைக்க வேண்டும்.

நண்பர்களிடமிருந்து போதைப் பொருளை எடுப்பதற்கான அழுத்தம் இருக்கிற போதும் அதை மறுப்பதற்கு உங்கள் ஆதரவு இருக்கிறது என்று தெரிந்தால் அதை மறுப்பது அவர்களுக்கு இலகுவாக இருக்கலாம்.

அவர்கள் எந்த நேரத்தில் யாருடன் இருக்கிறார்கள், எங்கு செல்கிறார்கள் என்று கேட்கப் பயப்பட வேண்டாம். குடும்பம் முழுவதும் ஒன்றாகச் சேர்ந்து நேரத்தைச் செலவழிப்பது முக்கியம். கதைப்பதற்கும்,ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதற்கும் வேறு விடயங்களை ஒன்றாகச் சேர்ந்து செய்வதற்கும் முயற்சி செய்க.

### 02) பிள்ளைகள் சொல்வதை செவிமடுப்போம்.

பிள்ளைகள் சொல்வதைக் கேட்பதில் நீங்கள் ஒரு விருப்பத்தைக் காட்டுகிற போது தான் நீங்கள் சொல்வதைக் கேட்பதற்கும் அவர்கள் தயாராகிறார்கள்.

அவர்களுடைய கருத்துகளுக்கு நீங்கள் மதிப்பளிக்கிறீர்கள் என்பதைக் காட்டுவதற்குக் குடும்பம் தொடர்பான தீர்மானம் எடுத்தலின்போது, அவர்களின் ஆலோசனையைக் கேளுங்கள்.

மேலதிக கலந்துரையாடலை நிறுத்தும் வகையில் இடையீடு செய்ய வேண்டாம். தங்களது பிரச்சினைகளையும் தங்களது அபிப்பிராயங்களையும் சொல்வதற்கு அவர்கள் மனதில் சௌகரியமாக உணர வேண்டும்.

### 03) முன் மாதிரியாக வாழ்ந்து காட்டுங்கள்.

'நான் சொல்வதைச் செய். என்னைப் போலச் செய்யாதே' என்பது ஒருபோதும் சரிவராது. நீங்கள் போதை பாவிப்பவராக இருந்தால் நீங்கள் சொல்வதை உங்கள் பிள்ளைகள் கேட்பார்கள் என்று எதிர்பார்க்க வேண்டாம்.

உங்களது நடத்தை உங்கள் பிள்ளைகளில் ஏற்படுத்தும் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். குறிப்பாகப் புகைத்தல், மது பாவனை, போதைப் பொருள் பாவனை ஆகியவை உங்களிடம் இருந்தால் பிள்ளைகள் உங்களை விட அதிகம் பாவிப்பதற்கான வாய்ப்பே அதிகமாகும்.

### 04) நேர்மையாக இருங்கள்.

உங்களுக்குத் தகவல்கள் தெரிந்திருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம். அனால் எல்லாம் தெரியும் என்பது போல பாசாங்கு செய்ய வேண்டாம்.'எனக்கு இது தெரியவில்லை, ஆனால் தெரிந்துகொள்ள முயற்சி செய்வேன்' என்று கூற எப்போதும் ஆயத்தமாக இருங்கள்.

நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதில் நேர்மையாகவும் தெளிவாகவும் இருந்தால் உங்களோடு சேர்ந்து நேர்மையாக இருப்பது உங்கள் பிள்ளைகளுக்கும் இலகுவாக இருக்கும்.

### 05) சரியான நேரத்தினை தேர்ந்தெடுங்கள்.

இயற்கையாக எழும் சந்தர்ப்பத்தைப் பார்த்து விடயத்தைக் கதைப்பதற்குரிய சரியான நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

அது எல்லோரும் ரி.வி.பார்க்கும் நேரமாக இருக்கலாம். பாடசாலையில் படிக்கும் இன்னொரு மாணவரைப் பற்றிக் கதைக்கும் சந்தர்ப்பமாக இருக்கலாம்.

கதைப்பதற்குச் சற்றுக் கடினமான இன்னொரு பிரச்சினை பற்றிய கதையின் ஒரு பதில் போல்அமையலாம்.





## 6) அமைதியாக இருங்கள்.

அமைதியாக இருப்பது முக்கியம். உங்கள் செயற்பாடுகள் தர்க்க ரீதியானதாக அமைதல் வேண்டும். அதீத எதிர்வினை காட்ட வேண்டாம். கோபப்பட்டால் கசப்புணர்வு பரவி, நச்சு வட்டங்கள் ஆரம்பித்து விடலாம். கருத்துப் பரிமாறலுக்கான சந்தர்ப்பம் எப்போதும் திறந்திருக்க வேண்டும்.

போதை பற்றி விரிவுரை நிகழ்த்த வேண்டாம். போதை பாவிப்பாளர்களைக் கேலி செய்ய வேண்டாம்.குற்றஞ் சாட்ட வேண்டாம்.

நீங்கள் அதிகமாக உணர்ச்சி வசப்படுவீர்களானால் மேலதிகமான கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பம் மூடப்பட்டுவிடும் என்பதை மறக்க வேண்டாம்.

## 7) முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மனிதர்களுக்கிடையில் முரண்பாடு இருக்கும்போது பிரச்சினையைத் தீர்ப்பது கடினமாகும். அவர்களின்பக்கத்தை நீங்கள் பார்க்க முனையும் அதே நேரத்தில் உங்களைப் பற்றி அவர்கள் விளங்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை உற்சாகப்படுத்துங்கள்.

தர்க்கம் ஒன்று தொடங்குவதற்கான அறிகுறி தென்பட்டால் உரையாடலை அவ்விடத்தில் நிறுத்தி இருவரும் சுமூகமான நிலைக்கு திரும்பிய பின்பு மீண்டும் தொடங்கலாம்.

## 8) தொடர்ந்து பேசுங்கள்.

ஒருமுறை நீங்கள் உரையால் ஒன்றைத் தொடங்கினால், அதைத் தொடருவது முக்கியம். உங்கள் பிள்ளைகளோடு போதைப் பொருள் பற்றிப் பேச எப்போதும் ஆயத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

பிள்ளைகள் அத்தகைய பழக்கங்களை ஆரம்பிக்கு முன்னரே அதைப் பற்றிப் பேசுவது முக்கியமானது.

## 9) தெளிவான எல்லைகளை பேணுங்கள்.

அநேகமான இளைஞர்கள் ஒரு உரையாடலின்போது தெளிவான அடிப்படை விதிகளைப் பேண விரும்புகிறார்கள். உரையாடலுக்கான அடிப்படை விதிகளை அவர்களே முன்மொழிய அனுமதிக்கலாம்.

அவர்களே முன்மொழியும் விதிகளை அநேகமாக அவர்கள் மீறமாட்டார்கள். விதிகள் முன்வைக்கப்பட்ட பின் அவற்றை மீற வேண்டாம் என்பதில் உறுதியாக இருங்கள்.

விதிகளை உடைத்துவிடுவதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி விளக்கிக் கூறுங்கள். அவர்கள் மதுப்பாவனைக்கு அல்லது போதைக்கு அடிமையாகக் கூடிய சூழலில் அவர்களுக்கு உதவ முன்வாருங்கள். சந்தி தோறும் முளைத்திருக்கிற பெட்டிக் கடைகள், பாக்குக் கடைகள் பற்றி மிகுந்த அவதானமாக இருக்குமாறு கூறுங்கள்.

ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச்சென்று அவர்களை அழைத்துவர வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால்,அது இரவு நேரமாயினும் நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று உறுதி கூறுங்கள்.

ஆயினும் அப்படியான சூழலில் அவர்கள் மாட்டிக் கொள்வதை நீங்கள் விரும்பவில்லை என்பதையும் தெரியப்படுத்துங்கள்.

## 10) நேரான விடயங்களைப் பாராட்டுங்கள்.

அவர்கள் செய்யும் நல்ல விடயங்களைப் பாராட்டுங்கள். அவர்கள் தங்களைப் பற்றி நல்ல சுய கணிப்புக் கொள்வதை உறுதிப்படுத்துவதோடு, அவர்களுக்கு நீங்கள் மரியாதை கொடுப்பதையும் இன்னும் அவர்களை அன்புசெய்வதையும் உணரச் செய்யுங்கள்.


## உங்கள் பிள்ளை போதை பாவிக்கிறாரா என்று எப்படித் தெரியும்?

உங்கள் பிள்ளை போதை பாவிக்கிறார் என்று நீங்கள் சந்தேகப்பட்டால் அவர்களிடம் நேரே கேட்பதே சிறந்தது. அவர்கள் அதை மறுக்கிறார்கள் ஆயினும் நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்றால் பின் வரும் கேள்விகளுக்கு விடை தேட முயலுங்கள்.

**1. உங்கள் வீட்டில் வித்தியாசமான குளிசைகள், திரவங்கள் அல்லது பாக்கு வகைகள், தாள் ஏதாவதுஅடிக்கடி காணப்படுகிறதா?**
**2. உங்கள் பிள்ளையின் பாடசாலைப் பெறுபேறுகளில் திடீர் வீழ்ச்சி காணப்படுகிறதா?**
**03. ஒழுங்குபடுத்தப்பட்ட இணைப்பாட விதானச் செயற்பாடுகள் சிலவற்றை அவர் தானாக நிறுத்திவிட்டாரா?**
**04.ஊக்கம் குறைந்து எந்நேரமும் சோர்வாக இருக்கிறாரா?**
**05.அவரது நண்பர் குழாமில் காரணமில்லாத மாற்றம் ஏற்பட்டுள்ளதா?**
**06.பிள்ளைகள் கண்கள் கண்ணாடி போல் தோன்றுகின்றனவா?**
**07.திடீர் திடீரெனக் கடும் உணர்வு மாற்றங்களுக்கு உட்படுகிறாரா?**
**08.குடும்பத்துடன் செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொண்டுள்ளாரா?**
**09.வீட்டில் காசு அல்லது பெறுமதியான பொருள்கள் தொலைந்து போகின்றனவா?**
**10.உங்கள் பிள்ளையின் சாப்பாட்டு முறை அல்லது பழக்கவழக்கங்கள் திடீரென மாற்றமடைந்துள்ளதா?**
**11.அடிக்கடி அந்தரத்துடன், பதகளிப்பு நிலையில் காணப்படுகிறாரா?**
**12.ஒழுங்கான நித்திரையில் பிரச்சினைகள் இருக்கின்றனவா?**
**13.அடிக்கடி கோபப்பட்டு ஆக்ரோஷ வெளிப்பாடு காட்டுகிறாரா?**


இவற்றில் பல கேள்விகளுக்கு 'ஆம்' என்ற விடையை நீங்கள் பெற்றால், உங்கள் சந்தேகம் உண்மையாக இருக்கலாம்.

உங்கள் பிள்ளைகள் போதைப் பொருள் பாவிப்பதை உறுதிப்படுத்தினால், பொருத்தமான உதவியை தேடிப் போவதை பிற்போடாமல் உதவியை உடனே நாடுங்கள்.





# பண்டைய பழக்க வழக்கங்களும் அறிவியல் காரணங்களும்!



பண்டைத் தமிழர்கள் தமது வாழ்நாளில் கடைப்பிடித்த ஒவ்வொரு பழக்கவழக்கத்திலும் ஏதோவோர் நன்மையினை நோக்கமாகக் கொண்டே கடைப்பிடித்தனர். இதை அறியாத நாம் அவற்றை மதம் சார்ந்த விடயமாக பார்க்கின்றோம்.

இதோ! உங்களுக்காக, நம்மிடம் அரிதாகிப் போன நம் முன்னோர்கள் கடைப்பிடித்த சில பழக்க வழக்கங்களும் அவற்றிற்கான காரணங்களும்

## கைகூப்பி வணங்குதல்

இன்று கொரோனாவினால் நாம் பேணும் சமூக இடைவெளியினை அன்றே நம் முன்னோர்கள் நமக்கு கைகூப்பி வணங்கி எதிரில் உள்ளவரை வாழ்த்துவதன் மூலம் அறிமுகப்படுத்தி விட்டனர். இதன் பின் மறைந்திருக்கும் உண்மையான காரணம் தான் என்ன? நம் உடற் குருதிச் சுற்றோட்டம் சந்திக்கும் இடம் விரல்களாகும். நாம் விரல்களை ஒன்றோடு ஒன்றாக கூப்பி வணங்கும் போது நம் கண், காது, மூளைகளுள் ஓர் அழுத்தம் உண்டாகும். இதனால் ஒருவரை சந்திக்கும் போது அந்நபரின் முகம் மற்றும் அவருடன் நாம் மேற்க்கொள்ளவிருக்கும் உரையாடல் நம் மனதில் ஆழமாக பதிந்து விடுகிறது.

## வீட்டிற்குள் நுழையும் முன் கை, கால், முகம் கழுவி நுழைதல்

நம் சிலரின் வீடுகளில் இன்னும் இந்தப் பழக்கம் வழக்கத்தில் உள்ளது. வெளியில் சென்று வந்தவுடன் கை, கால் கழுவிட்டு வா..! என நம் வீட்டின் பெரியோர்கள் வலியுறுத்தியிருப்பர். அச்சமயம் நமக்கு அது எரிச்சல் தரும் ஒன்றாகவே தோன்றும். வெளி இடங்களில் முக்கியமாக





சன நெரிசல் அதிகமுள்ள இடங்களில் நோய்க் கிருமிகளின் தாக்கம் அதிகமாகயிருக்கும். இதனால் வீட்டினுள் நுழைந்தவுடன் நம் புறத்தினை சுத்தம் செய்து விட்டு நுழைய சொல்கின்றனர். இறந்த வீடுகளுக்கு சென்று வரும் போது பின் வாசல் வழியாக சென்று ஆடைகளை கழற்றி மஞ்சள் கலந்த நீரில் நீராடச் சொல்வதற்கான காரணமும் இதுவே.

### வீட்டு வாசலில் துளசிச் செடி

அன்று தொடக்கம் இன்று வரை தமிழர்கள் வீட்டில் காணக்கூடிய பொதுவான ஒன்றாக இந்த துளசிச் செடி விளங்குகிறது. வீட்டின் வாசலில் துளசிச் செடி வைக்க வேண்டும் என வலியுறுத்தக் காரணம், ஏனைய தாவரங்களை விட காபனீரொட்சைட்டை உள்வாங்கி அதிகமான ஒட்சிசனை துளசிச் செடி வெளியிடுகிறது. மேலும் துளசிச் செடியினை சுற்றி அதிகாலை வலம் வருவதனால் சுத்தமான ஒட்சிசனை சுவாசிக்க முடியும். இதில் அதிகம் மருத்துவ குணமும் உண்டு. துளசிச் செடியின் இலைகளை நீரிலிட்டு ஊறவைத்து உட்கொண்டால் உடலின் வெப்பம் தணியும். துளசி இலைகள் பிழிந்து இஞ்சிச்சாறு மற்றும் தேன் கலந்து உண்டால் சளி நீங்கி விடும்.

### சாணம் தெளித்து கோலமிடல்



இன்று நாம் கோலமிடுவதை அழகுக்காக என எண்ணி ஸ்டிக்கர்களை வாங்கி ஒட்டி விடுகிறோம். வாசலை கூட்டிப் பெருக்கி சாணம் தெளித்து கோலமிடுவதற்கான காரணங்கள் பல உண்டு.சூரிய வெளிச்சம் வரும் முன் அதிகாலை எழுந்து கோலமிடுவதால் உடலுக்கு தேவையான ஒட்சிசன் கிடைக்கப் பெறும். சாணம் தெளிப்பதால் புழுதி பறக்காது மண் கெட்டிப்படும். மற்றும் கிருமி நாசினியாகவும் செயற்படுகிறது. கோலமிடுவதால் ஈ, எறும்பு போன்ற சிறிய உயிரினங்களின் பசி போக்கப்படுகிறது. கோலமிடும் போது சிந்தனை சிதறாது ஒன்றுபடுவதோடு கண் பார்வையும் சீராகின்றது. குனிந்து நிமிர்ந்து கோலமிடுவது சிறந்த உடற்பயிற்சியாகவும் மாறுகிறது.

### மாவிலைத் தோரணம்

மாவிலைத் தோரணம் மரத்திலிருந்து பறிக்கப்பட்டாலும் கூட காபனீரொட்சைட்டினை ஒட்சிசனாக மாற்றி தருகிறது. இதன் பச்சைத் தன்மை அதிகம் நீடிப்பதால் மனதிற்கு புத்துணர்வும், இலகுவான தன்மையும் கிடைக்கப் பெறும். மனதிற்கு அமைதியும் தருகிறது. மாவிலை கட்டப்படும் இடத்தை சுத்தமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் வைத்திருக்கும்.

இவ்வாறாக, அறிவியல் ரீதியான நல்ல பயன் தரக்கூடிய பழக்கவழக்கங்களை நம் முன்னோர்கள் நமக்கு சம்பிரதாயங்கள் என்ற பெயரில் விட்டுச் சென்றுள்ளனர். இதனை நாம் முட்டாள் தனமென ஒதுக்கி வாழ்வதை தவிர்ப்போம். இவற்றை மீண்டும் நடைமுறைப்படுத்தி ஆரோக்கியமான வாழ்வை வாழ்வோம்.







## கொற்றவை

### அங்கம்: 08

# வலை

க லகலவென்றிருந்த தங்குமிடம் திடீரென்று அமைதியாக இருந்தபோதே ஏதோ நடந்திருக்கிறது என்றுஆனந்தனின் உள்ளுணர்வு சொன்னது. வீட்டின் உள்ளே 'ரிப்ரொப்' ஆக உடை அணிந்திருந்தவர்களைக் கண்டதும் அது உறுதியாகி விட்டது. 'விசாரணை' என்றதும், நான் தப்பேதும் செய்யவில்லையே என்ற உணர்வையும் தாண்டி, சாந்தியையும் வெண்ணிலாவையும் மீண்டும் பரிதவிக்க விடப்போறேனோ என்ற அச்சம்தான் கிளர்ந்தது ஆனந்தனுக்கு.

நினைத்தது போல கட்சிக்காரர்களும் சாமானியப்பட்டவர்களாக இருக்கவில்லை. என்ன செய்வது என்று எல்லோரும் திகைத்து நின்றபோது,சரியான சமயத்தில்,வெளியே போயிருந்த கட்சியின்



புதிய கணக்காளர் வீட்டினுள் வந்தார். அவருக்கு இங்கு வந்திருந்தவர்களை ஏற்கனவே தெரிந்திருந்தது.

‘‘வாருங்கோ தம்பியவை.!! என்ன இந்தப்பக்கம்?..’’ தெரியாதது போலக் கேட்டார் அவர்.

‘‘இல்லை அண்ணை!ஆனந்தன் என்னுறவரை கொஞ்சம் விசாரிக்க வேணும்!’’

‘‘இந்தாளோ..? இவர் பிரச்சனைக்குப் போகாத ஆளல்லோ!. அங்க யாழ்ப்பாணத்தில மண்டிக்காரரின்ர வலது கரம்.! உங்களுக்குத் தெரியாதே.? அங்க கேட்டுப்போட்டே வந்தனீங்கள்? இஞ்ச கட்சி மாநாட்டு வேலைக்கு ஒரு நம்பிக்கையான ஆள் வேலைக்கு வேணுமெண்டுதான் நாங்கள் இந்தாளைக் கூட்டிக் கொண்டு வந்தது...’’

எதிர்பார்த்தது போல அவர்களுக்கு இந்த விசயம் புதிதுதான். அதில் ஒருவன் உடனேயே யாருக்கோ தொலைபேசி அழைப்பு எடுத்தான்.

‘‘ஒரு தவறு நடந்து போச்சு. இவர் புது ஆள். ரெண்டுமூண்டு தரம் பெட்டிக் கடையில நிண்டு கதைச்சதைக் கண்டது எண்டு...செய்தி வந்தது... அதான்... ஒருக்கா தட்டிவைப்பம் எண்டு....’’ இழுத்தவர்கள் மோட்டார் சைக்கிளில் ஏறி மறைந்தார்கள்.

‘‘பெரிய உபகாரம் அண்ணை! நான் வாழ்நாள்ளை மறக்கமாட்டன். குடும்பம் அந்தரிச்சுப்போம் எண்டு பயந்து போனன்.!’’ கணக்காளரின் கையைப் பிடித்தபடி சொன்னான் ஆனந்தன்.

‘‘தம்பி.!! உவங்களை ஆரெண்டு நினைக்கிறியள்? உவைக்குபவர் ஒண்டுமில்லை. இதுகள் எடுபிடியள். முந்தி... ஏன்..? இப்பவும் தான் ஆமிக்காரனோடையும் அரசாங்கத்தோடையும் நிண்டு கொஞ்சநஞ்ச கரைச்சலோ குடுத்தவை. இப்ப இவையின்ர பெரியவர் பெரிய பொறுப்பில இருக்கிறார். இவையள் அவற்றை



அல்லக்கையள். அங்கத்தை விசயத்தை சொன்னவுடனை பாத்தியள்தானே.?''

''ஆனாலும் தம்பி. நீங்கள் கொஞ்சம் அவதானமா இருக்கோணும். உவங்கள் வில்லங்கம் புடிச்சவங்கள் முண்டிப் போடாதேயுங்கோ...''

சாந்திக்கு இந்த விசயம் தெரியவர விடக்கூடாது என்று முடிவெடுத்தான் ஆனந்தன். பயந்து போவாள்.

மறுநாள்... கட்சிக்காரர்கள் களப்பணியில் இறங்கினார்கள். குழுக்களாகப் பிரிந்து சென்று மக்களைச் சந்தித்தார்கள். இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டார் வதனி. ஆனந்தனும், வதனியும் வேறு இருவருமாக கல்மடுப் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு சென்றனர். பாடசாலை மாணவி உயிரிழந்த சம்பவத்தை அவ்வளவு இலகுவாகக் கிளற முடியவில்லை.

இறுதியில் கிடைத்த விடயம் அதிர்ச்சி தருவதாக இருந்தது. அந்தப் பெண் பிள்ளை தற்கொலை செய்துகொண்டது உண்மைதான் என்பதை வீட்டவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆனாலும், அதற்கு மேல் வாயைத் திறக்க மறுத்தார்கள். பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மர்ம முடிச்சு அவிழ்ந்தது.

மாணவி கர்ப்பமாக இருந்தாராம். இது வீட்டினருக்குத் தெரியவந்தவுடன் அதிர்ந்து போயுள்ளனர். மாணவி தான் யாரையும் காதலிக்கவில்லை என்பதில் உறுதியாக நின்றிருக்கிறார். அடுத்தவர்களுக்குத் தெரிந்தால் அசிங்கம் என்று இரவோடிரவாக இங்கு ஓடி வந்து விட்டார்களாம். இங்கு வந்த பின்னர்தான் அந்த ஆசிரியர்தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பது தெரிந்து அவருக்கு தொடர்பு எடுத்திருக்கிறார்கள்.

'' உன்னுடைய மகளின் படங்கள் இருக்கு பார்க்கிறாயா..?'' என்று அந்த அயோக்கியன் பெற்றவர்களிடமே கேட்டிருக்கிறான்.

''வாய் திறக்கக் கூடாது...அடுத்த ஆளுக்குத் தெரிய வந்தால் உன்ரை பிள்ளைக்கு கனக்கப் பேரோடை தொடர்பு இருக்கு எண்டு படங்களோடை கதை வெளியில போகும்....'' என்ற அச்சுறுத்தல் கிடைத்திருக்கிறது. ஆசிரியர் அவர்களின் ஆள். அந்தப் பின்னணியில்தான் துணிவாக இவ்வளவும் செய்கிறான். இங்கே இந்தப் பிள்ளை வீட்டில், கேட்க நாதி இல்லாமல், எல்லோரும் மன அமைதி இழந்து தவித்திருக்கிறார்கள். வீட்டுக்குள் நித்தம் சண்டையும் சச்சரவுமாக இருந்திருக்கிறது.

''ஒரு கட்டத்திலை என்ரை பிள்ளைக்கு தாங்கேலாமப் போயிருக்கு. தூக்கில தொங்கீற்றாள்... இனி என்ன கதைச்சு என்ன? போனவள் வரப்போறாளோ?'' விரக்தியோடு சொன்னார் அம்மா.

''எங்களால இதை நிரூபிக்க ஏலாது... செத்தவளுக்கு இனியும் அவப்பெயர் தேடித் தராதேயுங்கோ... விடுங்கோ...''

அவர்கள் நினைத்தது சரிதான். பாடசாலையில் இருந்துதான் பலசீர்கேடுகள் கிளம்பியிருக்கின்றன.

விசுவமடுவின் செம்மண் தரையும், வாழைகளும் தென்னைகளுமாக சோலையாகவிருந்த காணிகளும் ரசிக்கக் கூடியதாக இருந்தன. சிறிது காலம் ஆனந்தன் இங்கு முகாமிட்டிருக்கிறான். அப்போது நண்டும் சிண்டுமாக ஓடித்திரிந்த பெடியன்கள் இப்போது வாலிபர்களாகியிருந்தனர். அவர்களைப் பார்க்கும்போது தான் தனக்கும் வயது போகின்றது என்ற உண்மை உறைத்தது அவனுக்கு.

'இப்போதைய தலைமுறையினர் எதையும் கண்டு கொள்ளாத ஒரு வாழ்க்கையை வாழ்கிறார்கள். எங்கள் தலைமுறையும் மாண்டு போனால் யார் நாட்டையும் மக்களையும் பற்றிச் சிந்திப்பார்கள்?' என்றொரு அச்சம் எப்போதுமே அவன் மனதில் உண்டு.

உண்மையில், வன்னிக்கு வந்ததில் இருந்து இறுதிப் போர்க்கால நினைவுகள் கிளர்ந்து ஆனந்தனின் மனதை ரணப்படுத்திக் கொண்டிருந்தன.

பார்வைக்கு ரம்மியமாக பார்க்குமிடமெல்லாம் பச்சைப் பசேலென்று இருந்தாலும், பார்க்குமிடங்களில் எல்லாம் இரத்தம் சகதியாகத் தேங்கிக் கிடந்ததும், மக்கள் சிதறுண்டு தெருத்தெருவாகக் கிடந்ததும் தான் அவன் கண்ணில் தெரியும்.

எந்த இடத்தைப் பார்த்தாலும், இங்குதான் நாங்கள் நிலையெடுத்தோம்..., அந்த இடத்தில்தான் என் தோழன் மண்ணில் சாய்ந்தான்,.... இந்தக் குடியிருப்பைத்தான் குண்டு போட்டு அழித்தார்கள்...., அதோ. அந்த இடத்தில்தான் எங்கள் மருத்துவக் குழுவினர் இரவு பகலாக ஓய்வின்றி மருத்துவம் பார்த்தனர்,... இதோ இந்த இடத்தில்தான் வீரச்சாவடைந்த எங்கள் சகோதரி ஒருத்தி புதைக்கப்பட்டாள்,.... என்று அத்தனை நினைவுகளும் ஒன்றாய்த் திரண்டு அவனை ஆட்டி வைக்கும்.

நினைவுகளின் சுமையைத் தாள முடியாமலோ என்னவோ அன்றிரவும் ஆனந்தனுக்குக் காய்ச்சல் வந்து விட்டது. பற்று வைக்கவோ, கஞ்சி வைத்துத் தரவோ அருகில் சாந்தியும் இல்லை. பனடோலுக்கும் கேட்காமல் உடம்பு அனலாய்க் கொதித்தது. கட்சி மாநாட்டுக்கான வேலையில் ஆனந்தனின் பணி ஏறத்தாழ முடிந்து விட்டது. இதனால், வீட்டுக்குப் போவதுதான் நல்லது என்று, பொருட்கள் ஏற்றிவந்த வாகனம் ஒன்றில் புறப்பட்டான் ஆனந்தன்.

அவன் வந்து இறங்கிய கோலத்தைப் பார்த்ததும் சாந்தி பதறிப் போய்விட்டாள். அடுத்த ஒரு வாரத்துக்கு ஆனந்தனால் அசைய முடியவில்லை. அடித்துப் போட்டதுபோல சுருண்டு படுத்திருந்தான். முன்பு பல சண்டைகளில் அவன் காயப்பட்டிருக்கிறான். அந்த இடங்கள் எல்லாம் இப்போ புண்ணாக வலிக்க, மிகவும் சிரமப்பட்டுப் போய்விட்டான்.

பல நாட்களுக்குப் பிறகு இன்றுதான் ஒரு நல்ல சாப்பாடு. சுடச்சுட சிவப்பு அரிசியில் செய்த பொங்கலும் கட்டைச் சம்பலும் வாய்க்கு அவ்வளவு இதமாக இருந்தன. மாமரத்தின் கீழ் கயிற்றுக்கட்டிலில் ஆசுவாசமாக இருக்கும் போது சைக்கிள் சத்தம் கேட்டது.

''என்ன சுகமில்லையே.? நாளைக்கு ஒரு வேலை இருக்குது. கூட்டிக்கொண்டு போவம் எண்டு பாத்தன்...'' என்றபடி வந்தார் கேசவன்.

பேச்சுச் சத்தம் கேட்டு வீட்டினுள் இருந்து எட்டிப்பார்த்த சாந்திக்கு முகம் இருண்டு விட்டது.

**தொடரும்...**



# முற்றாக முடங்கியது தமிழர் தாயகம்





















## இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றுதிரண்ட தமிழர் தேசம்

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிராகவும் தமிழர்களின் பாரம்பரிய இன, மத அடையாளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராகவும் தமிழர் தாயகமெங்கும் 25.04.2023 செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொது முடக்கம் மிகப்பெரும் வெற்றி பெற்றிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகளால் ஓரணியாக விடுக்கப்பட்ட பொது முடக்க அழைப்புக்கு வடக்கு - கிழக்கை பிரதான தளமாகக் கொண்டு செயற்படும் அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வெளியிட்டிருந்த அதேவேளை, தமிழர் தேசத்தின் அனைத்து அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவித்து செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொது முடக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி காட்டியிருக்கிறார்கள்.